விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே



சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 01 திங்கட்கிழமை (17.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 210

● காடழிப்பு ● முஸ்லிம் குடியேற்றம் ● தமிழர் நிலம்பறிப்பு

# றிசாத் பதியுதீனுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தனர்

## முல்லைத்தீவில் மாபெரும் பேரணி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காடழிப்பை மேற்கொண்டு திட்டமிட்ட குடியேற்றத்தை மேற்கொள்ளவுள்ளமைக்கு எதிர்ப்புத்தெரிவித்து பாரிய ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நேற்று மேற்கொள்ளப்பட்டது. சுமார் 7 கிலோ மீற்றர் நடந்து சென்றே மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (23ஆம் பக்கம் பார்க்க)



சுவிஸ் குமார் தப்பிச்செல்ல உதவி;

## டி.ஐ.ஜி. ஜயசிங்கவுக்கு 25ஆம் திகதி வரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலைச் சம்பவத்தின் முக்கிய சந்தேகநபரான சுவிஸ் குமாரை தப்பிச் செல்ல உதவினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வடக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (டி.ஐ.ஜி.) லலித் ஏ.ஜயசிங்கவை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஆர்.சபேசன் 24☛

## நவம்பர் இறுதியில் உள்ளூராட்சி தேர்தல்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் இறுதி வாரத்தில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுமென நேற்று மாலை அலரி மாளிகையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்சி தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளான அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, ரவூப் ஹக்கீம் மனோ கணேசன், றிஸாத் பதியூதின், கபீர் ஹசீம், பைசர் முஸ்தபா, லசந்த அழகியவன்ன, அஜித் பெரேரா, அனுர 24☛

## படம் பிடித்த புலனாய்வினர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கூழாமுறிப்பிலுள்ள உள்ள சுமார் 177 ஏக்கர் காடுகளை அழித்து, திட்டமிட்ட குடியேற்றங்களை மேற்கொள்ளும் திட்டத்துக்கு எதிர்ப் 23☛

## 71 விடுதலைப் புலிகளை விடுவிக்கவே முடியாது!



– விஜயதாச ராஜபக்ஷ

(கொழும்பு)

2008ம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தடுப் 24☛

## டெனீஸ்வரனை பதவி நீக்கியதும் யாரை நியமிப்பதென ரெலோ ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

அமைச்சராக யாரை நியமிப்பது தொடர்பில் ரெலோ கூடியது. முடிவு எட்டப்படவில்லை என செல்வம் எம். பி தெரிவிப்பு.

வட மாகாண அமைச்சராகவுள்ள டெனீஸ்வரனை பதவி நீக்கியதும் யாரை அமைச்சராக பரிந்துரைப்பது என ரெலோவின் அரசியல் குழு நேற்று வவுனியாவில் ஆராய்ந்துள்ளது.

இது தொடர்பில் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதனிடம் கேட்ட 24☛

## ஐ.ம.சு.மு விலிருந்து ஒன்பது கட்சிகள் விலக தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 9 பங்காளிக் கட்சிகள் கூட்டணியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 23☛

## நிறைவேற்று அதிகாரத்தை பாவிக்க ஜனாதிபதி முன்வரவேண்டும்

## சுதந்திரக்கட்சி அமைச்சர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் மாதங்களில் நிறைவேற்று அதிகாரங்கள் பாவித்து தீர்மானங்களை எடுக்குமாறு அரசிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் அவ்வாறு இல்லையெனின் அரசு–மக்கள் இடையே சாதகமின்மை 23☛

## துமிந்த திஸாநாயக்க சிறுபிள்ளை அமைச்சர்

## - டிலான்

(கொழும்பு)

சுதந்திரக்கட்சி செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க அரசியலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பார்க்கும் போது துமிந்த இன்னும் சிறுபிள்ளையென அமைச்சர் டிலான் கூறியுள்ளார். மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு எதிர்காலத்தில் வேட்பு 23☛

## கோயம்புத்தூருக்கு விமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து இந்தியாவின் கோயம்புத்தூருக்கு புதிய விமானப் பயணங்கள் ஆரம்பமாகியுள்ளது.

நேற்று முதல் விமான பயணங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட் 23☛

## நாளை வேண்டுமானாலும் ஐ.தே.க. தனிவழி செல்லும்

– கபீர் ஹசீம்



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினர் வெளியேறினால், ஐக்கிய தேசியக் கட்சியின் தனித்த அரசாங்கத்தை உருவாக்க நாம் தயாராகவுள்ளோம். 24☛

## தனித்து ஆட்சி அமைத்தால் விலகுவது 18 அல்ல 41!



(கொழும்பு)

ஐ.தே.க தனியாக அரசமைக்க முயன்றால் அரசிலிருந்து விலகும் சுதந்திரக் கட்சியினர் 18 அல்ல 41 என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஊடக அறிவிப்பாளர் டிலான் பெரேரா கூறியுள்ளார். 24☛

## சு.க வின் 18 பேர் செப்டெம்பரில் வெளியேறுவர்!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 18 பேர் ஆளும் கட்சியிலிருந்து நிச்சயமாக வெளியேறுவார்கள் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் 24☛

## தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படவிடேன்

– பாதுகாப்புச் செயலர்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பை எப்போதும் உறுதி செய்வேன் என்றும், தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட ஒரு போதும் அனுமதிக்கமாட்டேன் என்று புதிய பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று அஸ்கிரிய. 23☛

## புதிய அரசியலமைப்பு குறித்து இணக்கத்துக்கு வந்துவிட்டோம்

- லால் விஜயநாயக்க

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது அதிகாரப் பகிர்வு, பௌத்த மதத்துக்கு முதன்மை வழங்குதல் என்பன தொடர்பில் தற்பொழுது இணக்கப்பாடொன்றுக்கு வந்துள்ளதாக அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பான மக்கள் கருத்துக்கணிப்புக் குழுவின் தலைவர் பேராசிரியர் லால் விஜநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்முறைமை, ஜனாதிபதியின் அதிகாரம், 24☛

## தேனீர் கடைக்குள் புகுந்த பாரவூர்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பாரவூர்தி ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தேனீர்ச்சாலை ஒன்றினுள் பிரவேசித்துள்ளது.

ஆடியபாதம் வீதியிலிருந்து பருத்தித்துறை செல் 24☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை மீனவர்கள்தான் எல்லை தாண்டுகின்றனர்

## இந்திய அமைச்சர்

(சென்னை)

தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை அரசு கொண்டு வந்துள்ள புதிய சட்டம் தேவை இல்லாத ஒன்று. மனிதாபிமான முறையில் மீனவர்கள் பிரச்சினையை அணுக வேண்டும். மேலும் இலங்கை அரசு கொண்டு வரும் புதிய சட்டம் எதுவும் தமிழக மீனவர்களை பாதிக்காது என தமிழக மத்திய இணையமைச்சர் பொன். இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை அரசு கொண்டு வரும் புதிய சட்டம் எதுவும் தமிழக மீனவர்களை பாதிக்காது. இலங்கை மீனவர்கள்



தான் எல்லைத் தாண்டுகின்றனர்.

மேலும் பரமக்குடியில் இருந்து பாம்பன் பாலம் வழியாக இராமேஸ்வரத்திற்கு விரைவில் நான்கு வழிசாலை அமைக்கப்படும் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

# துப்பாக்கி வெடித்து இளம் குடும்பஸ்தர் படுகாயம்

(மல்லாவி)

முழங்காவில் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள மணல்காட்டுப் பிரதேசத்தில் மிருகங்களை வேட்டையாடும் நோக்குடன் மிக நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த கட்டுத் துப்பாக்கியின் இழுவிசையில் கால் மிதிபட்டமையால் துப்பாக்கி வெடித்து இளம் குடும்பஸ்தர் ஒருவரின் பின்புறமான பிருஷ்டப் பகுதியில் 3 துப்பாக்கி குண்டுகள் தாக்கி படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக முழங்காவில் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

தற்போது நிலவிவரும் கடும் வரட்சி நிலை காரணமாக காட்டுப் பகுதியில் உள்ள நீர் நிலைகள் வற்றி போனமையால் காட்டில் வாழும் பாதுகாக்கப்பட்ட அரிய வகை மிருகங்கள் நீரைத் தேடி அலைந்து திரியும் நிலையில், வேட்டையாடும் நோக்குடன் சமூக விரோதிகள் அவற்றை திருட்டுத்தனமாக வேட்டையாடி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில், முழங்காவில் மணற்காட்டுப் பிரதேசத்தில் பாலைப்பழம் பிடுங்குவதற்காக சென்ற சோலைநிலா, பல்லவராஜன்கட்டுக் கிராமத்தைச் சேர்ந்த 28வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை மிகமிக நுட்பமான முறையில் உருமறைப்புச் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த கட்டுத் துப்பாக்கியில் கால் மிதிபட்டமையால் துப்பாக்கி வெடித்து துப்பாக்கி குண்டுகள் தாக்கி படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (மு-15)

# பெறுகை அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை - 2017

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
02. பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
03. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 17.07.2017 தொடக்கம் 08.08.2017 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 14.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
05. பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 08.08.2017-ம் திகதி 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 26.07.2017 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.
07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | சந்தை வீதி காப்பெற்றிடல் | 4.89 | 02 மாதம் | C 8 | 48000.00 |
| 02 | வட்டுவினி வீதி காப்பெற்றிடல் | 3.25 | 02 மாதம் | C 8 | 32000.00 |
| 03 | சிங்கத்தின் கலட்டி வீதி காப்பெற்றிடல் | 4.38 | 02 மாதம் | C 8 | 43000.00 |
| 04 | கருணாகரப்பிள்ளையார் வீதி காப்பெற்றிடல் | 3.50 | 02 மாதம் | C 8 | 35000.00 |
| 05 | பாடசாலை, தோம்பை வீதி காப்பெற்றிடல் | 3.63 | 02 மாதம் | C 8 | 36000.00 |
| 06 | கதிரமலை வீதி காப்பெற்றிடல் | 3.29 | 02 மாதம் | C 8 | 32000.00 |
| 07 | மின்சார நிலைய வீதி காப்பெற்றிடல் | 4.71 | 02 மாதம் | C 8 | 47000.00 |
| 08 | கினாமரம்/முத்துக்கிருஸ்ணர் வீதி காப்பெற்றிடல் | 4.58 | 02 மாதம் | C 8 | 45000.00 |
| 09 | கந்தையா குறுக்கு வீதி புனரமைப்பு | 2.01 | 02 மாதம் | C 8 | 20000.00 |
| 10 | வெள்ளவாய்க்கால் வீதி புனரமைப்பு | 4.15 | 02 மாதம் | C 8 | 41000.00 |
| 11 | வரியப்புலம் வீதி புனரமைப்பு | 4.98 | 02 மாதம் | C 8 | 49000.00 |
| 12 | கடுகுநாவலடி வீதி | 2.03 | 02 மாதம் | C 8 | 20000.00 |

**தவிசாளர்**
**பிரதேசசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(C-9086)

# நுளம்பு பெருக்கம் அதிகரிப்பு டெங்கு நோயாளர்கள் 8 வீதத்தால் உயர்வு

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 8 வீதத்தால் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2016-ம் ஆண்டில் நாடு முழுவதும் 55 ஆயிரத்து 150 டெங்கு நோயாளர்களே பதிவாகியுள்ளனர். எனினும், வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் டெங்கு நோய் காரணமாக 269 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 90 ஆயிரத்து 865 ஆக உயர்ந்துள்ளது. இந்த நிலையில், அரசாங்கத்தின் தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

டெங்கு நோய் பரப்பும் நுளம்புகள் பெருக்கத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எனவே, டெங்கு நோயை கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் அமைச்சர் அனைவரிடமும் கோரிக்கை விடுத்துள்ளார். (மு-11)

# தமிழ்த்தினப் போட்டி; அருணோதயா தங்கம்

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் அருணோதயக் கல்லூரி மாணவர்கள் இருவர் தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர்.

பிரிவு-3 கட்டுரையாக்கம் போட்டியில் உதயகுமார் கம்ஷாயினி முதலாம் இடத்தையும், பிரிவு-5 தனியிசை போட்டியில் நித்தியானந்தன் சிவாயன் முதலாம் இடத்தையும் பெற்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர். (மு)


**கிளுவங்கதிகால் தேவை**

கிளுவங்கதிகால் உடன் தேவை. உரிமையாளர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும். (தரகர் தேவையில்லை) வெட்டியும் எடுக்க முடியும்.

தொடர்பு
**0702202207**


# மரண அறிவித்தல்



## திருமதி திரேசம்மா றாக்கையா

8ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா றாக்கையா அவர்கள் நேற்று (16.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (17.07.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளயில் புனித சூசையப்பர் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகன் - றா.செபஸ்தியாம்பிள்ளை
(பொது முகாமையாளர், ப.தெ.வ.அ. கூட்டுறவுச் சங்கம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு )

புதுக்குடியிருப்பு (C-9087) 077 633 3144

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்ற விதிகளை மீறும் எம்.பிக்களுக்கு கடும் தண்டனை

நாடாளுமன்ற விதிகளை மீறிச் செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராக இனிவரும் காலங்களில் கடும் தண்டனை வழங்க தேவையான சட்டம் உருவாக்கப்படும் என நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு அதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற செய்தியாளர்களுக்காக (நேற்றும், நேற்று முன்தினமும்) களுத்துறையில் நடைபெற்ற இரண்டு நாட்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தம்மிக்க தசநாயக்க இதனைத் தெரிவித்தார். மேலும் நாடாளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டங்களுக்கு ஊடகவியலாளர்களை அனுமதிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

உத்தேச நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தைத் திருத்தும் போது அரச நிதி, பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டங்களில் ஊடகவியலாளர்களை அனுமதிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நாடாளுமன்ற செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பொலிஸாரின் தேவை அதிகரித்துள்ளது-பூஜித



மக்கள் சுதந்திரமாக வாழ தேவையான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது பொலிஸாரின் பொறுப்பு என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

முப்பது வருடங்களாக நாட்டில் காணப்பட்ட பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை மீட்டுள்ள இந்தத் தருணத்தில் பொலிஸாரின் தேவை அதிகரித்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆராச்சிக்கட்டு பிரதேசத்தில் புதிய பொலிஸ் நிலையத்தை நேற்று திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார் பொலிஸ் சேவை குறித்து மக்களுக்கு நம்பிக்கையை ஏற் படுத்தும் வகையில் பொலிஸார் தமது சேவை களை மேற் கொள்ள வேண்டும் எனவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (இ-7)


குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


## தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# போட்டுக் கொடுத்தார் கரன்னகொட

# கடற்படை அதிகாரிகள் பலர் விரைவில் கைது



(கொழும்பு)

**முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட வழங்கிய தகவல்களின் அடிப்படையில் இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த மேலும் பலர் அடுத்துவரும் வாரங்களில் கைது செய்யப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பு ஆங்கில வார இதழொன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.**

2008-2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்டமை தொடர்பாக, இலங்கை கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான கொமடோர் டி.கே.பி.தசநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, இம் மாதம் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

தமிழ் இளைஞர்கள் பலர் காணாமல் போகச் செய்யப் பட்ட சம்பவங்களில் இலங்கை கடற்படை அதிகாரிகள் பலர் தொடர்புபட்டிருப்பது குறித்து, கொமடோர் டி.கே.பி. தசநாயக்கவிடம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர், கடந்த 2015 ஆம் ஆண்டு விசாரணை நடத்தியிருந் தனர்.

இதேவேளை கடந்த ஆண்டு இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட, குற்றப் புலனாய்வுப் பிரிவிடம், ஆட்கடத்தல்கள் தொடர்பாக வாக்குமூலம் அளித்திருந்தார்.

அட்மிரல் வசந்த கரன்னகொட அளித்த தகவல்களின் படி, மேலும் பலர் கைது செய்யப்படக் கூடும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (இ-7)

## கடற்படை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் தசநாயக்க

(கொழும்பு)

2008 ஆம் ஆண்டு கொழும்பில் 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, இலங்கை கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளரான கொமடோர் டி.கே.பி. தசநாயக்க, வெலிசறையிலுள்ள இலங்கை கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பரிந்துரையின் பேரிலேயே அவர் கடற்படை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

வெலிசறை கடற்படை வைத்தியசாலையில் வைத்து கைது செய்யப்பட்ட கொமடோர் டி.கே.பி.தசநாயக்க அம்புலன்ஸ் வண்டியிலேயே நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டார்.

இதையடுத்து, அவரை ஜூலை 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கொமடோர் டி.கே.பி. தசநாயக்க, பின்னர் தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் அங்கிருந்து நேற்று வெலிசறையிலுள்ள இலங்கை கடற்படை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அவரது பாதுகாப்புக்காக ஐந்து சிறைக்காவலர்களும் அங்கு நிறுத்தப்பட்டுள்ளனர். (இ-7)

## திருட்டில் ஈடுபட்ட சிறுவர்கள் கைது

(கரணவாய்)

வடமராட்சிக் கிழக்கு அம்பன் பகுதியிலுள்ள வீட்டுக்குள் நுழைந்து திருட்டில் ஈடுபட்டதாகத் தெரிவித்து மூன்று சிறுவர்களை அப்பகுதி மக்கள் பிடித்து தம்மிடம் ஒப்படைத்துள்ளதாகவும் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் அப்பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்கு வீட்டிலிருந்தவர்கள் சென்றுள்ளனர். இதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அங்குள்ள வீடொன்றினுள் புகுந்த மூன்று சிறுவர்கள் திருட்டில் ஈடுபட்டனர்.

வீட்டார் வந்ததும் தப்பியோட முற்பட்ட நிலையில் மூவரும் அப்பகுதி மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். மூவரும் 15, 16, 17 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் முன்னரும் ஒரு திருட்டில் ஈடுபட்டவர்கள் எனப்பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

## அழிவின் விளிம்பில் இறால்குழி கிராமம்

### த.தே.ம.முன்னணி சுட்டிக்காட்டு

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இறால்குழி பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் சட்டவிரோத மணல் அகழ்வின் காரணமாக அக்கிராமமானது அழிந்துவிடும் அபாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட செயற்பாட்டாளர் ஸ்ரீஞானேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து நேற்று ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"கடந்த 2012 ஆம் ஆண்டு முதல்சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடைபெறுகின்றது. மூன்று பக்கமும் நீரால் சூழப்பட்ட தீவு போல் காட்சியளிக்கும் குறித்த கிராமத்தின் ஒரு பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடைபெறுவதால் குறித்த பகுதி ஆழமாகி கடல் நீரானது ஆற்றினுள் செல்வதன் காரணமாக அப்பகுதியில் உள்ள வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

நன்னீர் மீன்பிடி, விவசாயம், குடிநீர் என்பன பாதிக்கப்பட்டுள்ளமையால் அப்பகுதி மக்கள் வேறு பகுதிகளில் தஞ்சமடைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறித்த சட்டவிரோத நடவடிக்கையானது இரவு பகலாக அப்பகுதியில் முன்னெடுக்கப்படுவதுடன், அதற்கு பொலிஸாரும் துணைபோகின்றனர்" என ஸ்ரீஞானேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆர்.பிரேமதாஸ டெஸ்ட்

# ஆட்டத்தின் திருப்புமுனையான ரசா, வோலரின் துடுப்பாட்டம் மற்றொரு வரலாற்று வெற்றியை குறிவைக்கும் சிம்பாப்வே



இலங்கையின் சுழல்பந்து சுப்பர்ஸ்ரார் ரங்கன ஹேரத்தின், மாயாஜால சுழல் பந்துவீச்சில் சிக்கி முன்னணி வீரர்களை விரைவாக (5/59) சிம்பாப்வே இழந்த போதிலும் அதன் பின் துடுப்பாட வந்த சிகண்டர் ரசா, பீற்றர் மூர், மல்கம் வோலர் ஆகியோர் தமது துடுப்பாட்ட வித்தையை அரங்கேற்றி தமது அணியின் நிலைமையை மாற்றியமைத்ததுடன்,

நேற்றைய நாளின் மதிய போசன இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்தை தமது கைக்குள் கொண்டு வந்து அன்றைய நாளாட்டத்தை சிறப்பாக ஆடி நிறைவு செய்தனர்.

இலங்கை அணிக்கு எதிராக கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெறும் டெஸ்ட் போட்டியில் தனது 2ஆவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடி வரும் சிம்பாப்வே அணி நேற்றைய 3ஆம் நாள் ஆட்டநேர நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களை எடுத்து 262 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

சிம்பாப்வே அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒரேயொரு டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இப்போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய சிம்பாப்வே அணி ஏர்வினின் (160) அபார சதத்தால் முதல் இன்னிங்ஸில் 356 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி உபுல் தரங்க (71), சண்டிமல் (55), மத்தியூஸ் (41) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் நேற்று முன்தினம் 2ஆவது நாள் ஆட்ட நேர நிறைவில் 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 293 ஓட்டங்கள் எடுத்திருந்தது. குணரத்ன 24, ஹேரத் 5 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் நடந்தது. ஹேரத் 22 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், அடுத்து வந்த லக்மல் 14 ஓட்டங்களிலும் ஆட்டம் இழந்தனர். இறுதி விக்கெட்டாக 45 ஓட்டங்கள் எடுத்த நிலையில் குணரத்ன ஆட்டமிழக்க, இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 346 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பில் சிறப்பாக பந்து வீசிய அணித் தலைவர் கிரீமர் 125 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

10 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய சிம்பாப்வே அணிக்கு தொடக்கமே அதிர்ச்சியாக அமைந்தது. மசகட்சா 7, சகப்வா 6 . முசகண்டா ஓட்டம் ஏதும் எடுக்காமலும் ஏர்வின் 5 ஓட்டத்திலும் ஆட்டம் இழந்தனர்.

இதனால் 23 ஓட்டங்கள் எடுப்பதற்குள் சிம்பாப்வே அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்தது. இதனால் சிம்பாப்வே குறைந்த ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து விடும் என்று கருதப்பட்டது.

இந்த நிலையில் 5ஆவது விக்கெட்டுக்கு வில்லியம்ஸ் உடன் சிகந்தர் ரசா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஓரளவிற்கு தாக்குப் பிடித்தது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 59 ஐ எட்டிய போது வில்லியம்ஸ் 22 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

அடுத்து 6ஆவது விக்கெட்டுக்கு சிகந்தர் ரசாவுடன் பீற்றர் மூர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஆட்டத்தின் போக்கை மாற்றியது. சிகந்தர் ரசா நம்பிக்கையுடன் விளையாட, மூர் அதற்கு துணையாக நின்றார்.

இருவரின், ஆட்டத்தால் சிம்பாப்வே 28.2 ஓவரில் 100 ஓட்டங்களைத் தொட்டது. சிகந்தர் ரசா 62 பந்தில் அரைச்சதம் அடித்தார். அணியின் ஓட்ட எண்ணிக்கை 145 ஓட்டங்களாக இருக்கும்போது மூர் 40 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். இந்த ஜோடி 6ஆவது விக்கெட்டுக்கு 86 ஓட்டங்கள் சேர்த்தது.

அடுத்து சிகந்தர் ரசாவுடன் மல்கம் வோலர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஹேரத்தின் பந்து வீச்சை திறமையாக எதிர்கொண்டது. குறிப்பாக வோலர் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். இவரது அதிரடி ஆட்டத்தால் சிம்பாப்வே 200 ஓட்டங்களைத் தாண்டி வீறுநடை போட்டது. வோலர் 54 பந்தில் அரைச்சதம் அடித்தார். சிகந்தர் ரசா சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தார்.



இந்நிலையில் நேற்யை 3ஆவது நாள் ஆட்டம் நிறைவுக்கு வர சிம்பாப்வே 6 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களை எடுத்துள்ளது. சிகந்தர் ரசா 97, வோலர் 57 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

தற்போது வரை சிம்பாப்வே 262 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

இன்றைய நான் காவது நாள் ஆட்டத்தில் மதிய உணவு இடை வேளை வரை தாக்குப் பிடித்து விளையாடினால் 350 ஓட்டங்களை தொட வாய்ப்புள்ளது. அப்படி 350 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுவிட்டால் மற்றொரு சரித்திர சாதனை படைக்க சிம்பாப்வே தயாராகி விடும்.

இது நடக்குமா? என்பதைப் இன்றைய நாளாட்டத்தில் பொறுத்திருந்து பார்ப்போம்.

---

## விம்பிள்டன் ஓபன் டென்னிஸ்

### மகளிர் ஒற்றையர்

# முகுருசா சம்பியன்



விம்பிள்டன் டென்னிஸ் அரங்கில் முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்றார் ஸ்பெயினின் கார்பைன் முகுருசா. இறுதியில் வீனஸ் வில்லியம்ஸை வீழ்த்தினார்.

லண்டனில், விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியில், உலகின் 'நம்பர்-11' அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், 15ஆவது இடத்தில் உள்ள ஸ்பெயினின் கார்பைன் முகுருசா மோதினர்.

முதல் செட், ஒரு கட்டத்தில் 5:5 என இருந்தது. அப்போது எழுச்சி கண்ட முகுருசா, வீனஸ் சேர் வீசை பிரேக் செய்து, முதல் செட்டை 7:5 எனக் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில், 23 வயதான முகுருசாவின் துடிப்பான ஆட்டத்திற்கு 37 வயதான வீனஸ் வில்லியம்ஸால் ஈடுகொடுக்க முடியவில்லை. இதனையடுத்து இரண்டாவது செட்டை முகுருசா, 6:0 என வென்றார்.

**முதன்முறை**

ஒரு மணி நேரம், 17 நிமிடம் நீடித்த போட்டியில், அபாரமாக ஆடிய முகுருசா 7:5, 6:0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, விம்பிள்டனில் தனது முதல் கிண்ணத்தை வென்றார்.

வீனஸை பொறுத்தவரை, அதிக வயதில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற வீராங்கனை என்ற சாதனைபடைக்கும்கனவுதகர்ந்தது.

**18 கோடி பரிசு**

விம்பிள்டன் இறுதியில் அசத்திய ஸ்பெயின் வீராங்கனை முகுருசா, சாம்பியன் பட்டத்துடன், ரூ. 18 கோடி (இந்திய மதிப்பில்) பரிசு வென்றார்.

**இரண்டாவது**

விம்பிள்டனில் கிண்ணம் வென்ற ஸ்பெயினின் முகுருசா, தனது இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றினார். இதற்கு முன், கடந்த ஆண்டு பிரெஞ்ச் ஓபனில் கிண்ணம் வென்றிருந்தார்.

விம்பிள்டனில் பட்டம் வென்ற இரண்டாவது ஸ்பெயின் வீராங்கனை என்ற பெருமை பெற்றார் முகுருசா. இதற்கு முன், 1994ல் ஸ்பெயினின் கான்சிட்டா மார்டினஸ் பட்டம் வென்றிருந்தார்.

### ஆடவர் ஒற்றையர்

# பெடரர் சம்பியன்

விம்பிள்டன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் ஆதிக்கம் செலுத்தி வரும் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், 8ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றார். இறுதியில் குரோஷியாவின் மரின் சிலிச்சை தோறகடித்தார்.



லண்டனில், விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடந்தது. இதன் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியில், உலகின் 'நம்பர்-5' சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், 6ஆவது இடத்தில் உள்ள குரோஷியாவின் மரின் சிலிச் மோதினர். முதல் செட்டை பெடரர் 6:3 எனக் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில் பெடரரின், அனுபவ ஆட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய சிலிச், 1:6 என இழந்தார். தொடர்ந்து அசத்திய பெடரர், 3ஆவது செட்டை 6:4 என தன் வசப்படுத்தினார்.

ஒரு மணி நேரம் 41 நிமிடம் நீடித்த போட்டியில், அபாரமாக ஆடிய பெடரர் 6:3, 6:1, 6:4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றார். தவிர இவர், விம்பிள்டனில் 5 ஆண்டுகளுக்கு பின் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். கடைசியாக 2012ல் கிண்ணம் வென்றிருந்தார்.

இது, விம்பிள்டனில் பெடரர் வென்ற 8ஆவது (2003-2007, 2009, 2012, 2017) பட்டம். இதன்மூலம், விம்பிள்டன் ஒற்றையர் பிரிவில் அதிக முறை கிண்ணம் வென்ற வீரர்கள் பட்டியலில் பிரிட்டனின் வில்லியம் ரென்ஷா (7 முறை, 1881-1886, 1889), அமெரிக்காவின் பீட் சாம்பிரஸ் (7 முறை, 1993-1995, 1997-2000) ஆகியோரை முந்தி முதலிடம் பிடித்தார். இதன்மூலம் பெடரர், தனது 19ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றினார். தவிர, அதிக வயதில் (35) விம்பிள்டன் பட்டம் வென்ற வீரரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியா வழக்கு; பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க பயணித்த வாகனம் விபத்து





புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜயசிங்கவை யாழ். ஊர்காவற்றுறை நீதவான் முன் ஆஜர்படுத்த அழைத்து வந்த போது அவர் பயணித்த வாகனம் ஊர்காவற்றுறை பகுதியில் நேற்று முன்தினம் இரவு விபத்துக்குள்ளானது.

எனினும் குறித்த விபத்தில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு எவ்வித பாதிப்பும்ஏற்படவில்லைஎன்றும்வாகனம் விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த இருவர் சிறு காயமடைந்துள்ளனர். (இ-9)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்ற இலவச யோகாசன தியான கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு யோகாசன போதனாசிரியர் கலாபூஷணம் என்.விக்னேஸ்வரராஜா சான்றிதழ்களை வழங்கினார்.

## உடல் உறுப்புக்களை தானம் செய்தல்;

# சாரதி அனுமதிப் பத்திரத்தில் விரைவில் புதிய மாற்றங்கள்

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரத்தில் உடலுறுப்புக்களைத் தானம் செய்ய விருப்பமா இல்லையா என்ற சாரதியின் விருப்பத்தை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் சாரதி அனுமதிப்பத்திரத்தை உருவாக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் மூலம், குறித்த சாரதி எவ்வகையான விபத்தில் உயிரிழக்க நேரிட்டாலும் அவரது உடல் உறுப்புக்களை தானமாக பெற்றுக் கொள்வதற்கே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

விபத்தின் போது உயிரிழக்க நேரிட்ட சாரதியின் சிறுநீரகம், இதயம், நுரையீரல், ஈரல் என்பவற்றை எடுத்து அவை தேவைப்படுகின்ற நோயாளிகளுக்கு பொருத்தி நோயாளிகளுக்கு ஒரு மறுவாழ்வைக் கொடுக்கும் முயற்சியாகவே இது கருதப்படும். அத்துடன், சாரதி அனுமதிப்பத்திரத்தில் இவ்விடயம் உள்ளடங்கியிருந்தால் இவற்றை மிகவும் விரைவாக மேற்கொள்ள முடியும் எனவும் சுகாதார அமைச்சு 'தெரிவித்துள்ளது.

ஆகவே, மிகவும் குறுகிய காலப்பகுதிக்குள் இதை நடைமுறைப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

# அரசாங்கத்தின் பிரபலம் குறைவது சாதாரணம்

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

ஒரு புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து சிறிது காலம் சென்றதும் அதன் பிரபலம் குறைந்து போவது சாதாரணமானது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கடந்த காலத்திலும் இவ்வாறான அரசாங்கங்களுக்கு காலஎல்லை இருந்தது என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று நுவரெலியாவில் சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுடனான சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் இன்னும் இரண்டரை ஆண்டுகள் பதவியில் இருக்கும். சாதாரணமாக அரசாங்கம் ஒன்றில் இடைப்பட்ட காலத்தில் அதன் பிரபலம் குறையும். கடந்த 1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. எனினும் 1981 ஆம் மற்றும் 1982 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்திற்கு இதே நிலைமை ஏற்பட்டது எனவும் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)


## பெயர் மாற்ற அறிவித்தல்

முள்ளியவளை 2ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்ட சித்திரவேல் பத்மலோசனியம்மா ஆகிய எனது பெயரை இன்று முதல் சித்திரவேல் பத்மலோசனி என மாற்றம் செய்து இனி வரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள,
சித்திரவேல் பத்மலோசனி

(9818)



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 14.06.2017 புதன்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்



அமரர் **சித்தர் ஆழ்வாப்பிள்ளை**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 17.07.2017
திங்கட்கிழமை காலை கீரிமலை புனிதத் தீர்த்தக் கரையில் நடைபெறும்.
நாளை 18.07.2017 செவ்வாய்க்கிழமை பகல் 11.00
மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள சபிண்டீகரண
கிரியைகளிலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து
நடைபெறும் மதிய போசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

"வசந்தம்"
மாப்புலவு வீதி,
வதிரி, கரவெட்டி

(சி-9077)

இங்ஙனம்
குடும்பத்தினர்.


# இராசி பலன்

17.07.2017
(ஆடி 01, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
அட்டமி முற்பகல் 8.41 மணிவரை
அச்சுவினி முன்னிரவு 8.32 மணிவரை
சுபநேரம் 12.00 - 1.30 மணிவரை
இராகுகாலம் 7.30 9.00 மணிவரை.
ஆடிப்பிறப்பு, அட்டமி- நவமி
உலக வறுமை ஒழிப்பு தினம்

வள்ளுவன்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம்- சித்திரை | | சூரி செவ் |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்** தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவார், பணியில் சிறு மன உளைச்சல் எற்படலாம்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற் கொள்ள வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பேச்சில் இனிமை தென்படும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**கன்னி** குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம். உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்

**துலாம்** குடும்பத்தினரிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்** திட்டமிட்ட காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**தனுசு** நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேலராம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்ப பொறுப்புக்கள் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஊரெழு கலைவாணி முன்பள்ளி மாணவர்களின் விளையாடி மகிழ்வோம் நிகழ்வு அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் சி.இளங்கோ தலைமையில் இடம் பெற்றது. இதில் சிறார்களின் விளையாட்டு நிகழ்வையும் விநோத உடை போட்டியில் பங்குபற்றியவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# ஆற்றின் ஆழமான பகுதிகளுக்கு அடியவர்கள் செல்வதை தவிர்க்கவும்

## செல்வச்சந்நிதி ஆலய செயலாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தில் ஆலய உள் வீதி தேரோடும் வீதிகளில் வியாபார நடவடிக்கைகள் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது எனவும் ஆற்றில் நீராட வேண்டிய அடியவர்கள் ஆற்றில் போடப்பட்ட மிதப்பு எல்லைகளைத் தாண்டி ஆழமான பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய திருப்பணிச் சபை செயலாளர் அறிவித்துள்ளார். செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 22.08.2017 அதிகாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 06.09.2017 வரை சிறப்பாக நடைபெறும். மஹோற்சவ காலத்தில் ஆலய உள்வீதி தேரோடும் வெளி வீதிகளில் வியாபார நடவடிக்கைகள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக நடமாடும் கரஞ்சுண்டல் வண்டில் வியாபாரிகள் இவ்வருடம் தங்களுக்கென ஆலயச் சூழலில் உள்ள தனியார் காணிகளை வாடகைக்குப் பெற்று உங்கள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

ஆலயநிர்வாகத்திடம் வியாபாரிகளுக்கு வழங்க காணிகள் இல்லாத காரணத்தினால் இதனை குறித்த வியாபாரிகளே தங்கள் வியாபாரம் பற்றிய முழுப்பொறுப்பும் உடையவராவார். இவற்றைப்பொருட்படுத்தாது மஹோற்சவ காலத்தில் இடையூறுகள் ஏற்படுத்தி ஆலய உள்வெளி வீதிகளில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேலும் ஆலய தரிசனத்திற்கு வரும் எம்பெருமான் அடியார்கள் ஆசாரசீலர்களாக எமது பண்பாடு, கலாசாரத்திற்கு ஏற்ப ஆலயத்திற்கு வரவும். மற்றும் ஆலயத்திற்கு வரும்போது உங்களுடன் அழைத்துவந்த சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் உங்கள் உடைமைகளை நீங்களே மிகவும் கவனமாகப் பாதுகாக்கவும். தவறவிட்டு இன்னல்களுக்கு ஆளாவதை தவிர்க்கவும்.

மேலும் ஆலய சூழலில் சுத்தம், சுகாதாரத்தைப் பேணும் முகமாக முன்மாதிரியாக அனைவரும் நடந்துகொள்ளுங்கள். திருடர்களுக்கு சந்தர்ப்பம் வழங்காதீர்கள். ஆற்றில் நீராட வேண்டிய அடியார்கள் ஆற்றின் ஆழமான பகுதிகளுக்கு செல்ல வேண்டாம். ஆற்றில் போடப்பட்ட மிதப்பு எல்லைகளை தாண்டிச் செல்லாதீர்கள். மேலும் ஆலய தரிசனத்திற்கு வருகை தரும்போது உங்கள் வாகனங்களை வேகமாக செலுத்தி வருவதை தவிருங்கள்.

மிகவும் அவதானமாக உங்கள் பிரயாணம் அமைய வேண்டும். இவற்றைக் கருத்திற் கொள்ளுங்கள். எமது அன்பான இளைஞர்களே எமது பண்பாடு கலாசாரங்களை அடுத்து பாதுகாக்கும் தலைமைத்துவமும் பொறுப்பும் கடமையும் உங்களைச் சார்ந்தது. இவற்றிற்கு முன்னுதாரணமாக நீங்கள் திகழ வேண்டும் என செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

## ஆடிப்பிறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீர்வேலி சி.சி.த.க பாடசாலையின் ஆடிப் பிறப்பு விழா இன்று முற்பகல் 11 மணிக்கு பாடசாலை முதல்வர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் இடம் பெறும்.

இவ் விழாவில் ஓய்வுநிலை விலைக் கட்டுப்பாட்டு அதிகாரியும் சமாதான நீதவானுமான ந.சிவசீலன் ஆடிப் பிறப்பும் தமிழர் பண்பாடும் எனும்தலைப்பில்சிறப்பு சொற்பொழிவாற்றுவார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (இ-10-136)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை புலோலி பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-10-19)

## சந்திரிகாவின் நிதியொதுக்கீட்டில் யாழில் பல வேலைத்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் நிதி ஒதுக்கீட்டில் தேசிய ஒருங்கிணைப்பும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் வேலைத்திட்டங்களின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் 60 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அளவெட்டி மத்தி சீலன் கலட்டி ஆரம்ப சுகாதார நிலையம் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பளை வீமன் காமன் தெற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நல்லிணக்கபுரம் ஆரம்ப பாடசாலை நூல் நிலையத்திற்கு தளபாடங்கள் வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தையிட்டி தெற்கு கொலனிநீர்வழங்கலும்குழாய் பொருத்தலும் வேலைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

2.1 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கொல்லன் கலட்டி கேணியடி வீதி, கேணியடி குறுக்கு வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தெல்லிப்பளை பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (இ-5-8-104)








யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய கல்வியியலாளர் இந்திரா செல்வ நாயகத்தின் சமகால உளவியல் நூல் அறிமுக விழா கடந்த 13 ஆம் திகதி யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சி.அமிர்தலிங்கம் தலைமையில் இடம் பெற்ற போது...

(படங்கள்:- சோபிகா)





திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி தீர்த்தத் திருவிழா அன்று இரவு நடைபெற்றது. இந் நிகழ்ச்சியின்போது சிறப்புப் பரிசாக செல்வி அபிஷாயினி கலியுகவரதன் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். வட மாகாணசபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராக சின்மயா மிஷன் ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யா கலந்து கொண்டு ஆன்மீக உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நடந்தது என்ன?






முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக தமிழரசுக் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து-கண்டித்து வடமாகாணம் முழுவதிலும் பூரண கடையடைப்பு போராட்டம் இடம்பெற்றது.

தமிழ்மக்கள் பேரவை அவசரமாகக் கூடி விடுத்த கடையடைப்புப் போராட்டத்திற்கு வடபுலத்து மக்கள் வழங்கிய பேராதரவு கண்டு வியப்புறாதவர் இல்லை எனலாம்.

14.06.2017 அன்று முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயிடம் இரவு எட்டு மணியளவில் தமிழரசுக் கட்சியால் கையளிக்கப்பட்டது.

இந்தத் தகவல் மறுநாள் 15 ஆம் திகதி எங்கும் பரவிக் கொண்டது. அன்று மாலை இளைஞர்கள் ஒன்றுதிரண்டு முதலமைச்சருக்கு ஆதரவாகப் பேரணி நடத்தினர்.

அதேநாள் மாலை அவசரமாகக்கூடிய தமிழ்மக்கள் பேரவை 16.06.2017 அன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தது.

## தமிழர் தலைவிதி எப்படியாகும்?

ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழ்மக்கள் பேரவை விடுத்த கோரிக்கையை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக வலம்புரி அன்று மாலை விசேட பிரதியை வெளியிட்டது. 16 ஆம் திகதி வடமாகாணம் முழுவதிலும் பூரண ஹர்த்தால். பாடசாலைகள் இயங்கவில்லை; வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை; உணவகங்கள் கூட பூட்டப்பட்டிருந்தன. சந்தைகள் மூடப்பட்டன. போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதமாகின.

முதல் நாள் மாலைப் பொழுதில் எடுத்த முடிவு இத்துணை தூரம் வெற்றி தரும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. அந்தளவிற்கு வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மீதும் தமிழ் மக்கள் பேரவை மீதும் தமிழ் மக்கள் அளவு கடந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.

நேர்மை, உண்மை, விசுவாசம் நிறைந்த தமிழ்த் தலைவராக நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனைத் தமிழ்மக்கள் ஏற்றுக் கொண்டதன் காரணமாகவே அனைவரும் ஒன்றுதிரண்டு ஒற்றுமையாக வடமாகாணம் முழுவதையும் ஸ்தம்பிதமடையச் செய்தனர்.

வழமையில் வடமாகாணம் உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஹர்த்தால் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் பேரினவாதத்தைக் கண்டிப்பதாக, ஆளும் தரப்புக்கு எதிராக அல்லது அடக்குமுறைக்கு எதிராக நடப்பதுதான் வழக்கம்.

ஆனால் 16.06.2017 அன்று வடமாகாணத்தில் நடந்த பூரண ஹர்த்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராகவும் வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு ஆதரவாகவும் நடந்தது என்பதுதான் இங்கு கவனிக்கத்தக்க முக்கிய விடயமாகும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக வடமாகாணம் முழுவதிலும் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் தமிழரசுக் கட்சிக்கு மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

முதலமைச்சருக்கு ஆதரவாகவும் தமிழரசுக் கட்சியின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராகவும் வடமாகாணம் முழுவதிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் அதேவேளை அன்று முற்பகல் 10 மணியளவில் நல்லூர் முருகன் ஆலய முன்றலில் ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று கூடினர். வாகனப் போக்குவரத்து இல்லாத போதிலும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடுவதென்பது ஆச்சரியமான விடயமே. நல்லூர்க்கந்தன் ஆலய முன்றலில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடியதை ஊடகங்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கும் பணியில் ஊடகவியலாளர்கள் சுறுசுறுப்பாகச் செய்து கொண்டிருந்தனர்.

சில ஊடகவியலாளர்கள் மக்கள் கூட்டத்தைப் பதிவு செய்வதில் அதிவேகமாகச் செயற்பட்டனர். நல்லூரில் கூடிய மக்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் வாசஸ்தலத்தை நோக்கி பேரணியாகச் செல்ல ஆயத்தமாகினர்.

நேரம் தாமதிக்க தாமதிக்க மக்கள் கூட்டம் அதிகரித்தால் அது தமிழரசுக் கட்சியின் அலுவலகம் நோக்கிய பேரணியாகவும் மாறிவிடும். அதனால் விபரீதம் ஏற்படும் என்ற ஏக்கம் பலரிடம் இருந்தது.

ஏனெனில் 15.06.2017 அன்று சுமார் 500 இளைஞர்கள் கைதடியில் இருந்து பேரணியாக கோயில் வீதி நல்லூரில் உள்ள முதலமைச்சரின் வாசஸ்தலத்தை நோக்கி வர குறித்த இளைஞர் பேரணி யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் உள்ள தமிழரசுக் கட்சிக்குச் செல்லவுள்ளதாகத் தகவல் பரவ தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இருந்தவர்கள் அவசர அவசரமாக வெளியேறினர் என்ற செய்தியை யாழ்.தினக்குரல் பதிவு செய்திருந்தது.

எனவே எழுச்சியுடன், கோசத்துடன் வருகின்ற இளைஞர்கள் ஆவேசப்படாமல் நிதானமாக நடக்க வேண்டும். ஆகையால் உடனடியாகப் பேரணியை ஆரம்பிப்பது நல்லது எனச் சிலர் தீர்மானித்தனர். அதன் பிரகாரம் முற்பகல் 10.30 மணியளவில் பேரணி ஆரம்பமாகியது.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவிற்கு அதிக நிதியொதுக்கீடு வழங்க வேண்டும்

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தை முன்னேற்றுவதற்கு தன்னால் முடிந்த அர்ப்பணிப்பை வழங்கவுள்ளதாக ஜனாதிபதியின் வடக்குமாகாணத்துக்கான இணைப்பாளர் பிரபாகணேசன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தால் நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று ஜனாதிபதியின் வடக்கு மாகாணத்துக்கான இணைப்பாளர் பிரபாகணேசனின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தால் தற்போது நடைமுறைப் படுத்தப்படும் விசேட வேலைத்திட்டங்கள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவைப்பாடுகளை ஆராய்ந்து அதனூடாக அத்திட்டங்களை நடைமுறைப் படுத்தும் நோக்கோடு இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்தசந்திப்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலக பணியார்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் 6 பிரதேச செயலக பிரிவுகளிலும் பணியாற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் பங்குபற்றியிருந்தனர்.

இதேவேளை யுத்ததால் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய மாவட்டங்கள்ளவிட முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அதிகமான நிதியொதுக்கீடுகள் இடம்பெற்றிருக்க வேண்டும் என தான் எண்ணுவதாகவும் பிரபா கணேசன் கூறினார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டம் விவசாய



மாவட்டம் என்பதால், விவசாயத்தை மேம்படுத்து வதற்கு வங்கிகளுடாக கடனுதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் பிரபாகணேசன் இதன் போது வலியுறுத்தினார். (2-281)




# வவுனிக்குள அணைக்கட்டின் ஊடான கனரக வாகனங்களின் போக்குவரத்தை தடைசெய்க

## கமக்கார அமைப்புக்களின் பிரதிகள் கோரிக்கை

(மல்லாவி)

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள வவுனிக் குளத்தின் அணைக்கட்டின் மீதான கனரக வாகனப் போக்குவரத்து காரணமாக அணைக்கட்டு சேதமடைந்து வருவதாகவும் இதனை உடனடியாக தடை செய்ய துறை சார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வவுனிக்குளத்தின் கீழ் விவசாயத்தை மேற் கொண்டு வருகின்ற விவசாயிகள் , கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டாக இணைந்து கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.



இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வவுனிக்குளமானது துணுக்காய், மாந்தைக் கிழக்கு ஆகிய இரண்டு பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள பல ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்தும் விவசாய நடவடிக்கைக்கான பிரதான காரணியாக உள்ளது.

இதன் நீரைப் பயன்படுத்தி 6 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நெற்செய்கையை விவசாயிக்ள் மேற்கொண்டு வருகின்றனர்.

இந் நிலையில், கடந்த 2015 - 2016 ஆம ஆண்டு மத்திய அரசின் சுமார் 600, மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் குளப் புனரமைப்பு பணிகள் உட்பட பிரதான கால்வாய்கள் புனரமைப்பு செய்யப்பட்டன.

சுமார் 6 கிலோமீற்றர் தூரம் கொண்ட அணைக்கட்டில் 3. கிலோமீற்றர் தூரத்திற்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களிற்கு செல்லும் வாகனப் போக்குவரத்து சேவைகள் நடைபெற்று வருகின்றது.

இதனால், புனரமைப்புச் செய்யப்பட்ட அணைக் கட்டின் மீது குழிகள் தோன்றியுள்ளது இதன் மூலம் மழைகாலங்களில் நீர் தேங்கி நின்றது அணைக் கட்டுக்குப் பாதிப்பு ஏற்படும் அபாய நிலை தோன்றியுள்ளதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

எனவே, அணைக் கட்டின் மீதான அனைத்து ரக வாகனப் போக்குவரத்தையும் தடை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வவுனிக்குளத்தின் கீழ் உள்ள விவசாயிகள், கமக்கார அமைப்புக்களின், பிரதிநிதிகள் இணைந்து கோரிக்கை ஒன்றை முன்வைத்துள் ளனர். (2-15)

## புதையல்பிட்டி வீதியில் குவிக்கப்பட்டுள்ள

# கிரவல்மண் பரவப்பட்டு வீதி செப்பனிடப்படும்

புதையல்பிட்டி வீதியில் கொட்டப்பட்ட கிரவல் பரவப்பட்டு வீதி உடன் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நெளுக்குளம் புதையல்பிட்டி வீதியை மக்கள் பயன்படுத்த முடியாத வகையில் வீதியின் நடுவில் கிரவல் கொட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற வவுனியா பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயலாளர் கருத்து தெரிவிக்கையில்,

இவ் வீதி தொடர்பில் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. சில நாட்களாக கிரவல் மண்ணை வீதியின் நடுவில் கொட்டியுள்ளதாக தெரிவித்தனர்.


வேலைத்திட்டம் பிரதேச செயலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்திருந்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர்,

வேலைத்திட்டம் கிராம அபிவிருத்தி சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிரவல் கணக்கெடுக்கும் பணிக்காக கொட்டப்பட்டுள்ளது. உடனடியாக அவை கணக்கிடப்பட்டு போக்குவரத்துக்கு இலகுவாக்க வேண்டும் என கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு இதன் போது பணித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக கிராம அபிவிருத்தி சங்கத்தினர், வீதி அகலம் இன்மையால் நடுவில் கிரவல் கொட்டப்பட்டுள்ளது. அதனை தொழில்நுட்ப உத்தியோகத்தர் பார்வையிட்டதும் பரவி வீதி செப்பனிடப்படும் என தெரிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (2-250)



வவு/ ஓமந்தை இறம்பைக்குளம் நடராஜா வித்தியாலயத்தின் வகுப்பறைக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கலந்து கொண்டார்.

(படம் :- ஓமந்தை செய்தியாளர்)

# ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

பூநகரி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாயக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இணைத் தலைவர்கள் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு வடக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளணர்.

இக் கூட்டத்திற்கு பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராம மட்ட பொது அமைப்புக்கள், மாதர் கிராம முன்னேற்ற சங்கப் பிரதிநிதிகள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், கமக்கார அமைப்புக்களின் நிர்வாகிகள், எனப் பலரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டங்கள், எதிர் கால செயற்றிட்டங்கள் பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-84)

# ஆடிப்பிறப்பு விழா

யாழ்ப்பாணம் தமிழர் சங்கம், கரிகணன் (துனியார்) நிறுவனம் ஆகியன இணைந்து நடத்தும் ஆடிப்பிறப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள மகாதேவா சிறுவர் இல்லத்தில் யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். (2)

# திட்டமுன்மொழிவுகளை எதிர்காலத்தில் தமிழ் மொழியில் காட்சிப்படுத்துக

## வடக்கு மாகாணசபை உறுப்பினா் லிங்கநாதன் கோரிக்கை

(குருமன்காடு)

திட்ட முன்மொழிவுகள் காட்சிப்படுத்தும் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் தமிழ்மொழியில் மேற்கொள் ளுமாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி. ரி. லிங்கநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்நேற்று காலை 10 மணியளவில் ஆரம்பமாகி நடை பெற்றது.

வவுனியா பிரதேச செயலாளர் உதயராஜா தலைமையில் ஆரம்பமாகிய குறித்த ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த கோரிக்கையினை விடுத்துள்ளார்.இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

பிரதேச செயலகத்தினால் இன்று மேற்கொள்ளப்பட்ட திட்ட வழங்கல்முன் மொழிவுகளை காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் ஆங்கில மொழியில் இடம் பெற்றுள்ளன.

இருப்பினும், எதிர் காலத்தில் திட்ட வழங்கல் முன்மொழிவுகளை தமிழ் மொழியில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

அத்துடன், நேற்று முன்தினம் இடம்பெற்ற அனைத்து திட்ட முன்மொழிவுகளும் உத்தியோகத்தர்களினால் ஆங்கில மொழியில் மேற்கொள்ளப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (2-250)

## விபத்தில் இருவர் படுகாயம்

வவுனியா ஏ9 வீதியில் நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளும் பேருந்தும் மோதியதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இவ்விபத்து பற்றி தெரியவருவதாவது.

கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த பேருந்தும் வவுனியாவில் இருந்து தாண்டிக்குளம்நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில்பயணித்த இருவரும் படுகாயமடைந்துள்ளனர். இவ்விபத்தில் படுகாயமடைந்த இருவரும் வவுனியா பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து தொடர்பானமேலதிக விசாரணை வவுனியா பொலிஸாரினால் மேற்கொள்ளப்படுகின்றது.(2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்கக்கோரி

# முள்ளியவளையில் கவனயீர்ப்புப் பேரணி

முல்லைத்தீவில் இனப்பரம்பலைச் சிதைக்கும் நோக்குடனான சட்டவிரோத குடியேற்றத்தை மேற்கொள்ளும் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முற்பகல் 11 மணியளவில் முள்ளியவளை ஆலடி சந்தியிலிருந்து கவனயீர்ப்பு பேரணி ஒன்று இடம்பெற்றது.

கூழாமுறிப்பில் இருந்து வாரிவண்ணான் காடு வரைக்குமான பகுதியானது முள்ளியவளைக்கும் - ஒட்டுசுட்டான் வீதிக்கும், நெடுங்கேணி - புளியங்குளம் வீதிக்கும் இடைப்பட்ட அடர்வனத்தைக் குறிக்கும். இந்தக் காட்டில் 177 ஏக்கரை அழித்து முஸ்லிம் மக்களைக் கொண்ட குடியேற்றம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே இனப்பரம்பலை சிதைக்கும் நோக்குடனான சட்டவிரோத குடியேற்றத்தை மேற்கொள்ளும் இத்திட்டத்தை கட்டாயமாக எதிர்க்கவேண்டியது கட்டாயமானதொன்றாகும்.

கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் வனம் அழித்தால் இனம் அழியும். வனத்தை அழிப்பதும் எங்கள் வாழ்வுரிமையை அழிப்பதும் ஒன்றே. நிலத்தொடர்ச்சியை சிதைத்து எம் இனத்தொடர்ச்சியை அறுக்காதே. இது இனவாதம் அல்ல வன வதைக்கு எதிரான வாதம். எம் அடையாளம் இழந்து அகதியாக வாழ மாட்டோம். எங்கள் வனத் தாய் மடியில் தீ வைக்காதே. இயற்கை சமநிலையை குழப்பி எம் வாழ்வை சிதைக்காதே. எங்கள் நிலம் எங்கள் வனம் காப்பது எமது கடமை என்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்டிருந்த பதாதைகளை தாங்கியவாறு இருந்தனர்.





ஆலடிச்சந்தியில் இருந்து சுமார் 5 கிலோமீற்றர் தூரம் நடைபவனியாக சென்று இளைஞர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து. ரவிகரன், ஆ. புவனேஸ்வரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் பல்வேறு அமைப்புக்களை சார்ந்த இளைஞர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

## கலந்துரையாடல்

(மன்னார்)

மடு கல்வி வலய அதிபர், ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை ஆண்டாங்குளம் றோ.க. பாடசாலைக்கு அருகிலுள்ள - ஆண்டாங்குளம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமையில் - வடக்கு மாகாணத்தின் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ள இக் கலந்துரையாடலில் அதிபர்கள், ஆசிரியர்களின் பதவியுயர்வுகள், புதிய சம்பள மாற்றங்கள், இடமாற்றங்கள், மற்றும் அதிபர், ஆசிரியர் எதிர்கொள்ளும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

மடு கல்வி வலயத்துக்குட்பட்ட ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பயனடைய முடியுமென மடுவலய இலங்கை ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர். (2)

## ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் குடியேறாது இருப்பவர்களின் காணிகளைப் பெறக் கோரிக்கை

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டம் பகுதியில் குடியேறாதவர்களின் காணிகளை மீட்டு காணி அற்றவர்களுக்கு வழங்க வேண்டும் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலேயே குறித்த விடயம் தொடர்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

வவுனியா, ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டம் பகுதியில் பல வருடகாலமாக குடியேறாமல் இருக்கும் காணிகளை தெரிவு செய்து காணியற்றவர்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளரிடம் தெரிவித்துள்ளார்.

குறித்த ஓமந்தை அரச ஊழியர்கள் வீட்டுத்திட்ட பகுதியில் பலர் காணியைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தபோதும் தற்போது அப்பகுதியில் 45 குடும்பங்களே வசித்து வருவதாக ஓமந்தை கிராம அலுவலகர் திருமதி அ. அனுசியா தெரிவித்துள்ளார்.

அப்பகுதியில் காணிகளைப் பெற்றுக்கொண்டவர்கள் அங்கு சென்று குடியேறாமல் அப்பகுதி காடுவளர்ந்து யானைகள், திருடர்கள் தொல்லை அதிகரித்துள்ளது.

எனவே அதில் குடியேறாதவர்களின் காணிகளை காணியற்றவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (2-250-112)




## நாம் வாழ்ந்த பூர்வீக நிலத்தில் குடியேறுவதற்கு போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்

## கேப்பாப்பிலவு மக்கள் ஆதங்கம்

பூர்வீக நிலத்தில் குடியேறுவதற்காக போராட வேண்டிய கட்டாயத்திற்குள் தாம் தள்ளப்பட்டுள்ளதாக கேப்பாப்பிலவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கேப்பாப்பிலவு மக்களின் தொடர் போராட்டம் நேற்றுடன் 138 ஆவது நாளை எட்டியுள்ளது.

138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி கேப்பாப்பிலவில் வாழ்ந்த பூர்வீக மக்கள் கடந்த மார்ச் மாதம் தொடக்கம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ச்சியாக போராடி வரும் மக்கள் தமக்கான வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமது காணிகளில் இராணுவம் வருமானத்தை பெற்றுவருவதாகவும், குற்றம் சுமத்துவதோடு தமது காணிகளில் தம்மை விரைவில் குடியமர்த்த அனைவரும் முன்வரவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.



ஐந்து மாதங்களாக தாம் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கும் மக்கள், தம்மை சந்திக்க வரும் மக்கள் பிரதிநிதிகள் வாக்குறுதிகளை தந்து செல்வதாகவும், எனினும் அவை நிறைவேற்றப்படுவதில்லை எனவும் கவலை வெளியிட்டுள்ளனர். (2-281)

## டிப்பர் - மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானது

### இருவர் படுகாயம்

(மல்லாவி )

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள புகழேந்தி நகர் கிராமத்தில் உள்ள பொது நோக்கு மண்டபத்திற்கு அண்மையாக மோட்டார் சைக்கிள் ஒன்றும் டிப்பர் வாகனமும் நேரெதிராக மோதிக் கொண்ட விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிள்களில் பயணித்த சகோதரிகள் இருவர் படுகாயமடைந்த நிலையில் பொது மக்களால் மீட்கப்பட்டு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மல்லாவி நகரில் இருந்து மோட்டார் சைக்கிளில் பாலிநகரில் உள்ள தமது வீடு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது, பாலிநகர் கிராமத்தில் இருந்து மல்லாவி நோக்கி புகழேந்தி நகர் கிராம வீதி ஊடாக பயணித்த டிப்பர் வாகனமும் பொது நோக்கு மண்டபத்திற்கு அண்மையாக நேரெதிராக மோதிக் கொண்டுள்ளது.

இதன் போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த சகோதரிகள் இருவரும் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக பொது மக்களால் அனுமதிக்கபட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது, பாலிநகர் கிராமத்தைச் சேர்ந்த சகோதரிகளான பெரியவன் - ஜஸ்வரி (வயது - 19), பெரியவன் - தர்சி (வயது -15) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற மல்லாவி பொலிஸார் விபத்துக்குள்ளான வாகனங்களை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

## ஐந்து பேர் கொண்ட குழுவினர் ஆட்டோ சாரதி மீது தாக்குதல்

(மல்லாவி )

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள வடகாடு எனும் இடத்தில் ஆட்டோவில் பயணித்த சாரதி ஒருவர் மீது 05 பேர் கொண்ட குழுவினர் உடைந்த போத்தல்கள் மற்றும் கொட்டான்களால் மிக மோசமாகத் தாக்குதல் நடத்தி படுகாயப்படுத்திவிட்டு தப்பிச் சென்ற நிலையில், பிரஸ்தாப நபர் தலை உட்பட உடலின் பல இடங்களிலும் தாக்குதல் காரணமாக படுகாயமடைந்து வீதியில் மயங்கிக் கிடந்தவரை பொது மக்கள் மீட்டு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.45 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மல்லாவியில் தரித்து நின்று பயணிகள் சேவையில் ஈடுபடும் ஆட்டோ ஒன்று மாங்குளத்திற்கு பயணிகளை ஏற்றிச் சென்று விட்டு விட்டு பின்னர் மீண்டும் மல்லாவி நோக்கித் திரும்பி வரும் போது வடகாடு என்னும் இடத்தில் இத் தாக்குதல் சம்பவம் நடை பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தாக்குதல் நடத்தியவர்கள் ஆட்டோவை தன்னிடம் இருந்து கடத்திச் சென்று வேறு குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தும் நோக்குடன் செயற்பட்டுள்ளதாக தாக்குதலின் போது படுகாயமடைந்த அதன் சாரதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளாதாக தெரியவருகின்றது.

இச்சம்பவத்தில் மல்லாவி அணிஞ்சியன்குளம் கிராமத்தில் வசிக்கும் செல்வராஜா - கஜேந்திரன் (வயது 27), என்ற ஆட்டோச் சாரதியே தாக்குதல் காரணமாக படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவம் குறித்து மல்லாவி ஆதார வைத்தியசாலைத் தரப்பால் மல்லாவி பொலிஸ் நிலையத்திற்கு வழங்கப்பட்ட தகவலையடுத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பிறப்பு இன்று

# "ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே"

ஒவ்வொரு வருடமும் வீடும் நாடும் களை கட்டக்கூடிய மாத மெனப் படுவது ஆடி மாதமாகும். காற்றும்,வெயிலும் கனதியாயுள்ள கால நிலை நிலவும் மாதமும் ஆடியே யாகும்.

உடலும் உள்ளமும் வீறு நடை கொள்ளும் பேறுடைய மாதமும் ஆடியேயாகும். தேவாதி தேவரெல்லாம் இறைவனை ஆனந்தக்களிப்போடு அனுபவிக்கும் மாதமும் ஆடி மாதமே.

நோய் நொடிகள் யாவும் வாடி வதங்குவதும் ஆடியிலே தான். தானியங்கள் எல்லாம் முளைப் பதற்காய் தவங்கிடக்கும் காலமும் ஆடியிலே ஆரம்பிக்கின்றது. ஆற அமர இருந்து ஆனித் தூக்கம் கலைந்து, உடலையும் கடலையும் மலையையும், சகல ஜீவராசிகளையும் கொந்தளிப் பில் ஆழ்த்துவதும் ஆடியிலே தான். ஒவ்வொரு மனிதனின் சுய பிம்பகளைத் தோற்றுவிப்பதும், எல்லைகளை உயிரோட்டமாக வைத்திருப்பதும், இன மத மொழி வசிப்பிட விவகாரத்தை மீட்டிப் பார்ப்பதும் ஆடியிலே தான் . ஆதலால் ஆடி மாதம் ஒரு கனத்த மாதமாகும். இதன் பிரகாரம் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்களை இயற்கையும் பாட வைத்ததில் காரண காரியத்தோடேயாகும். இவர் இயற்றிய ஏராளமான பாடல்களில் பட்டி தொட்டியெல்லாம் பாடப்பட்ட பாடல் தான் ஆடிப்பிறப்பு மலர்வதற்கு முன்னதாக முதல் நாள் பாடப்படும் பாடலானது இதுவாகும்!

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே,
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே.

பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெல்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து



வேண்டிய தேங்காய் உடைத்துத்துருவியே
வேலூரிற் சர்க்கரையும் கலந்தே
தோண்டியில் நீர் விட்டு மாவையதிற் கொட்டிச்
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு
வில்லை வில்லையாக மாவைக்கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளோயிட்டுப்
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்த்திடுமே

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுருண்டைப் பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்க வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொழுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிபடைப்பும் படைப்போமே

வன்னப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலி கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளிவார்க்க
ஆடிப்புதுக் கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னை கடிப்போமே.
ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை

குறிப்பு: ஆடிக் கூழ் ஒரு சகல ரோக நிவாரணி, வயிறு சுத்தமாகும்.

### சம்பிரதாயம்

தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள் தமிழர்தம் பண்பாட்டு விழுமியங்களை கிரமந் தவறாது, சிரமம் பார்க்காது உரிய அம்சங்களோடு சுவைபடக் கவிதையில் வடிப்பதில் அவருக்கு நிகர் அவரேயாவார். மரபுக் கவிதையில் எதுகை மோனை அணிகள் சிறக்க எடுத்துக் கொள்ளப்பட்ட இலக்கு எள்ளளவும் பிசகாமல் தமிழின் இனிமை குன்றாமல் படிப்போரின் உள்ளம் பூரிக்க ஆடிப் பிறப்புக் கவிதையில் தமிழர் தம் பண்பாட்டம்சங்களைக் கொட்டியிருக்கின்றார். முழுக்கப் படிக்கும் போது இன்பம் கொழிக்கிறது. இதயம் சுரக்கிறது. துன்பம் மறைகிறது. தூய தமிழ் பிரவாகிக்கிறது. வாழ்வு வளமாகிறது. ஆயுள் நீடிக்கிறது. செந்தமிழாலும், பைந்தமிழாலும் ஆரோக்கியம் ஆடிக் கூழால் மேலிடுகிறது. தற்போதைய பாடசாலைகள் இப்பாடலை அன்றைய தினம் பாடுவதற்கு ஒத்தாசை நல்குவதில்லை என்ற குற்றச்சாட்டு இன்றும் தொடர்கிறது. காரணம் அதற்குப் பொறுப்பானவர்கள் தமிழுக்கும் இசைக்கும் சம்பிரதாயத்திற்கும் பண்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பதே அதுவாகும்.

### உணர்வு

அட! கூழ்தான் காய்ச்சிக் கொடுக்க முடியவில்லை. அந்தப் பாடலையாவது தமிழ், சங்கீத, சமய ஆசிரியரைக் கொண்டாவது காலைப் பிரார்த்தனைக் கூட்டத்திலாவது ஒரு அதிபரா னவர் பாடுவிப்பாராக இருந்தால் குறைந்தா போய் விடுவீர்கள்? மாகாண, வலய, கோட்ட பாடசாலை மட்டத்தில் இந்த உணர்வு மேலிடாவிட்டால் இந்த மண்ணில் என்ன தான் விளையப் போகிறது? வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகள்,உயர் கல்வி நிறுவனங்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகள், மாவட்ட செயலகங்கள், பிரதேசச் செயலகங்கள், ஆலயங்கள், இல்லங்கள்- தோறும் சென்ற ஆண்டினைப் போல இம்முறையும் உணர்வு பொங்க நடைபெற வேண்டுமென சமூகம் எதிர்பார்க்கிறது. படித்தவர்கள் செய்யா விட்டால் யார்தான் செய்வார்கள்? ஊழ்வி னையை அகற்றவல்ல ஒரு ஔடதமே ஆடிக் கூழாகும்.

### மாதப்பிறப்பு

ஆடி மாதப் பிறப்பன்று யாரையும் நோதல் படுத்துதல் ஆகாது. கண்ணீர் சிந்துதல் தவிர்க் கப்பட வேண்டும். ஒரு ஆடி கலங்கினால் காலம் பூராகவும் கலங்கியே தீர வேண்டும். ஆடிக்கலவரம் இலங்கையின் சாதகத்தையே மாற்றி அமைத் துள்ளது. தீர்வும் எட்டப்படவில்லை. உலகமும் விட்டபாடில்லை. உலகமும் நிம்மதியடைந்த பாடில்லை. ஏனென்றால், தேவர்களின் நிம்மதியையும், நித்திரையையும் யார் குலைத்தாலும் உலகமும் பூமியும் அல்லல்படுவது தவிர்க்க முடியாததாகும்.

எனவே,ஒவ்வொரு வீட்டிலும் ஆடிக் கூழினைத் தங்கத்தாத்தா இயம்பியவாறு பண்பாட்டுக் கோலங்களுடன் ஆடிப் பிறப்பன்று காய்ச்சி, தேவர்கள், பிதிர்கள், தெய்வங்கள், உறவினர்கள், மெய்ச்சும்படியாகக் கொண்டாடி உண்டு களித்து நீடூழி வாழ்வீர்களாக!

கே.எஸ்.சிவஞானராஜா

# மைத்திரியையும் மகிந்தவையும் ஒன்றிணைக்க மீண்டும் முயற்சி!

## மகாநாயக்கர்கள் தீவிரம் பசீர் சேகுதாவூத் தகவல்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் பௌத்த மகாநாயக்கர்கள் ஒன்றிணைக்க முயற்சி செய்யும் நிலையில் முஸ்லிம்களும் ஒன்றுபட வேண்டியுள்ளது என முன்னாள் அமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், 'மகாநாயக்கர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக் கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இரகசியமாக மத்தியஸ்தம் வகித்து, பரஸ்பரம் ஒருவரால் மற்றவருக்கு ஆபத்து ஏற்படாத வகையில் உத்தரவாதங்கள் வழங்கி, இருவரையும் உடன்பாட்டுக்கு அழைத்து வர முயற்சிக்கலாம் என்றொரு சந்தேகம் எழுகிறது.

அந்த வகையில், இவர்கள் இருவரும் மகாநாயக்கர்களின் சொல்லைத்தட்டுவார்களா, உறவுப் பாலத்தைக் கட்டுவார்களா என்பதற்கு காலம் தான் பதில் சொல்லும்.

இப்படியொரு அரசியல் சூழல் சாத்தியமானால், சர்வதேச சமூகம் என்ன செய்யும் என்பதை, ஐ.நாவின் விசேட நிபுணர் பென் எமர்சனின் கூற்றும், சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பின் பிந்திய அறிக்கையும் தெளிவு படுத்துவது போல் தெரிகிறது.

பென் எமர்சன் கூற்றை வைத்துப் பார்க்கும் போது, யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தால் கையாளப்பட்டு வந்த, இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான விடயங்கள், ஐ.நாவின் பாதுகாப்பு சபைக்குப் பாரப் படுத்தப்படும் நிலை தோன்றலாம் என எண்ண வேண்டியுள்ளது.

ஆக, சிங்கள அரசியல் கூட்டிணையும் வாய்ப்பு ஏற்படுகிறது. தமிழ் அரசியல் ஏற்கனவே கூட்டிணைந்துள்ளது. சின்னாபின்னமாகிக் கிடக்கும் முஸ்லிம் அரசியல் ஒன்றிணைய வேண்டிய அவசியமுள்ளது' என தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் அழிவுகளையும் அவலங்களையும் பொருட்படுத்தாது கல்வியிலும் விளையாட்டிலும் முன்னணியில் திகழ வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

ஜப்பான் எவ்வாறு போரில் நிர்மூலமாக்கப்பட்ட ஓர் நிலையில் இருந்து இன்று உலகின் பலமுள்ள முன்னேற்ற நாடுகளுள் ஒன்றாக மாறியுள்ளதோ நாமும் போரின் அழிவுகளையும் அவலங்களையும் பொருட் படுத்தாது எதிர்காலத்தில் கல்வியிலும் விளையாட்டிலும் முன்னணியிலுள்ள மாகாணமாகத் திகழ வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நம்பிக்கையூட்டினார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையேயான மினிமரதன் தெரிவுப் போட்டி மற்றும் வீதி ஓட்ட நிகழ்வுகள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய முதலமைச்சர் நெஸ்லே நிறுவனத்தின் முழு ஆதரவில் இடம்பெறுகின்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான மினிமரதன் ஓட்டப் போட்டியின் தெரிவுப் போட்டிகள் வடமாகாணம்,வடமத்திய மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டு வெற்றியாளர்கள் இறுதிப் போட்டிக்காக தெரிவு செய்யப்பட்டு அப் போட்டி நடைபெற்றுள்ளது. வடமாகாணத்தில் இது போன்ற பாடசாலைகளுக்கு இடையிலான நிகழ்வுமுதல் முறையாகமிகச் சிறப்பாக நடைபெற்றிருப்பது எமக்கு மகிழ்வையும் மனத்திருப்தியையும் உண்டாக்குகின்றன. நெஸ்லே நிறுவனத்தின் ஏற்பாட்டில் 2011 ஆம் ஆண்டு வடமாகாணத்தில் சகல மட்டத்தினருக்கும்நடத்தப் பட்டமரதன் ஓட்டப்போட்டியில் 7500 போட்டியாளர்கள் வரைகலந்து கொண்டு அந்த நிகழ்வை சிறப்பித்திருந்தமை நினைவு கூரப்படுவதுடன் அந்நிகழ்வானது ஆசியாவிலேயே சிறந்த சாதனையாக இதுவரை முறியடிக்கப்படாத ஒரு RECORD ஆக விளங்குவது இந் நிறுவனத்திற்கு கிடைத்த ஒரு மாபெரும் வெற்றியாகும்.

இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்படும் போது இந்த நிகழ்வுகளை சீராக ஒழுங்கு செய்வதோடு வீரர்களின் பாதுகாப்பும் உறுதிசெய்யப் படுதல் மிக அத்தியாவசியமாகும். அந்தவகையில் வட மாகாண பொலிஸார் மிகச் சிறப்பாக செயற்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

எமது வீரவீராங்கனைகள் விளையாட்டு நிகழ்வுகளில் காட்டுகின்ற ஆர்வம் மற்றும் ஈடுபாடுஎன்பன வட மாகாண பாடசாலை மாணவ, மாணவியருக்கு இடையேயான போட்டிகளின் போதும் எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்தவருடம் நடைபெற்றபோட்டிகளில் கடந்தகாலம் போன்று 15 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் 17, 19 வயதுக்கு உட்பட்டவர்கள் என்ற பிரிவுகள் மாற்றப்பட்டு 12, 14, 16, 18, 20 என 5 பிரிவுகளாக தேசிய ரீதியில் மாற்றப்பட்டுள்ளது. இதனால் குறிப்பிட்ட பிரிவினருக்கான அடைவுமட்டங்கள் கல்வித் திணைக்கள அதிகாரிகளால் தீர்மானிக்கப் பட்டிருந்தன. ஓட்டப்பந்தயங்களில் எதிர்பார்த்தநேர அளவுகளை விடக்குறைவாகவும் மற்றும் களப்பந்தயங்களில் எதிர்பார்த்த உயர,தூர அளவுகளை விடகூடுதலாகவும் தமதுதிறமைகளை வெளிப்படுத்தியவர்களுக்கு அவர்களுக்கான சான்றிதழ்களுடன் மேலதிகமாகவர்ணச் சான்றிதழ்களும் வழங்கப் பட்டன. இதற்கானவர்ணச் சான்றிதழ்கள் 200 வரை போதுமானதென திணைக்களம் தீர்மானித்தபோதும் போட்டியின் போது 350 சான்றிதழ்கள் வரை அவசர அவசரமாக அச்சேற்ற வேண்டிய தேவைஏற்பட்டது. இதன் மூலம் எமது வீரவீராங்கனைகள் எமது எதிர்பார்ப்பை விஞ்சி விட்டார்கள் என்ற உண்மை தெரியவருகின்றது.

இவ்வாறான எதிர்பார்ப்புக்கு விஞ்சியசாதனைகளை நாம் எமது இளைஞர் யுவதிகளிடம் இன்று எதிர்பார்க்கின்றோம். ஜப்பான் எவ்வாறு போரில் நிர்மூல மாக்கப்பட்ட ஒருநிலையில் இருந்து இன்று உலகின் பலமுள்ள முன்னேற்ற நாடுகளுள் ஒன்றாக மாறியுள்ளதோ நாமும் போரின் அழிவுகளையும் அவலங்களையும் பொருட் படுத்தாது எதிர் காலத்தில் கல்வியிலும் விளையாட்டிலும் முன்னணியில் உள்ள ஒரு மாகாணமாகத் திகழ வேண்டும். இன்றைய தோல்விகள் யாவும் நாளைய வெற்றிக்குப் படிகளாக அமைய வேண்டும்.

எனினும் விளையாட்டு நிகழ்வுகளில் எமது மாணவர்கள் வேகமாகமுன்னேறி வரும் இன்றைய ஆரோக்கியமான நிலைதொடர வேண்டும் எனவாழ்த்துவதுடன் விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமன்றி கல்வியிலும் சிறந்து விளங்கி எதிர்காலத்தில் கல்வியில் உயர்ச்சி நிலையை அடைவதுடன் பண்பட்ட ஒரு சமூகத்தையும் உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து கொண்டு பாடுபடவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மாத்தளை மாவட்டத்தில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

மாத்தளை மாவட்டத்தில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மேலதிக் சுகாதார சேவைகள் பணிப்பாளர் லலித் திஸாநாயக்க தெரிவித்தார்.

இவ்வாண்டில் ஜூன் 30 வரை 1887 பேர் சிறுநீரக நோய்க்கு உட்பட்டிருப்பதாகவும், சமீப கால ஆய்வின் படி இது 50 சதவீத உயர்வைக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாவுல பிரதேச செயலகப் பிரிவில் 117 பேரும், தம்புள்ள பிரதேச செயலகப் பிரிவில் 96 பேரும், வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் 1357 பேரும், கலேவெல பிரதேச செயாலாளர் பிரிவில் 137 பேரும்; லக்கல பிரதேச செயலாளர் பிரிவில் 187 பேரும் மேற்படி சிறுநீரக நோயினால் பீடிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாத்தளை செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இத்தகவல்களை வெளியிட்டார். (இ-7)

## பொன்னாலையை மீளக்கட்டியெழுப்ப வேண்டும்

### மாகாண சபை உறுப்பினர் விந்தன் தெரிவிப்பு





"தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பொன்னாலைக்கு சிறப்பிடம் உண்டு. தேசியத் தலைவரின் முதலாவது துப்பாக்கி வேட்டு முழங்கிய இடம் இது. இங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன் இந்த இடத்தையும் அபிவிருத்தி செய்யவேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியா சாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாணவர்களின் கல்விக்கு எது தடையாக இருக்கின்றதோ அதைக் களைய வேண்டும். அப்போதுதான் மாணவர்களால் சிறப்பாகக் கல்வி கற்க முடியும். வறுமையைக் காரணம் காட்டி எந்தவொரு மாணவனும் கல்வியில் இருந்து இடைவிலக முடியாது.

பாடசாலைகளில் ஒரே வகுப்பில் வசதியானவர்களின் பிள்ளைகளும் கல்வி கற்கும் அதேவேளை வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களின் பிள்ளைகளும் கல்வி கற்கின்றனர். வசதியான பிள்ளையைப் பார்த்து அவனைப் போன்ற வசதி வாய்ப்புக்கள் எனக்கு கிடைக்கவில்லையே என வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவன் ஏங்கக் கூடாது.

இவ்வாறு ஏங்குகின்ற மாணவர்களின் ஏக்கத்தைப் போக்க அரசியல்வாதிகள் முன்வரவேண்டும். இவ்வாறான மாணவர்களை நோக்கியதாகவே எனது சேவைகள் அமைந்திருக்கின்றன. அரசு இலவச சீருடைகளை வழங்கினாலும் அவர்களின் இதர தேவைகளை நாம் பூர்த்திசெய்யவேண்டும்.

பொன்னாலை என்ற இடம் ஒரு காலத்தில் சர்வதேச ரீதியாகப் பேசப்பட்டது.இந்த இடம் எப்படி இருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும் என நாம் ஆர்வமாக இருந்தோம். இதேபோல எமது புலம்பெயர் நண்பர்களும் ஆர்வமாகக் கேட்பார்கள். பின்னர் நேரில் வந்து பார்த்துப் பெருமையடைந்தோம். அத்தகைய பெருமைமிகு இந்த இடத்திலுள்ள மக்கள் தற்போது மீளக்குடியேறியுள்ளனர். இந்த இடத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் எனவும் தெரிவித்தார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 46 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:B.COMகனடா PR<br>தொ.இ: B/7561 | பிறப்பு: 1993 RC<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: CIMA/ முகாமையாளர்<br>தொ.இ: G/6626 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BBA/அரச தொழில்<br>தொ.இ: B/7564 | பிறப்பு: 1986 RC<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/6635 |
| பிறப்பு: 1976RC<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: மின் பொறியியலாளர்(அரச)<br>தொ.இ: B/7565 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 23<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc, MSc/அரச தொழில்<br>தொ.இ: G/6638 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:A/Lஅரசதொழில்<br>தொ.இ: B/7571 | பிறப்பு: 1980 RC<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA/ஆசிரியர<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6643 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## மாணவர்களின் அதீத தொல்லை; பாடசாலை எடுத்த விபரீத முடிவு




(கொல்கத்தா)

மேற்கு வங்காளம் மாநிலத்தில் 159 ஆண்டுகள் பழமையான பாடசாலை ஒன்றில் மாணவர்களின் தொந்தரவுகளை சமாளிக்க முடியாமல் பாடசாலை நிர்வாகம் வித்தியாசமான அதே வேளையில் விபரீதமாக மாறக்கூடிய முடிவை எடுத்துள்ளது.

மேற்கு வங்காளம் மாநிலத்தில் ஜார்கண்ட் மாநில எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் மேல்நிலைப் பாடசாலை செயற்பட்டுவருகிறது. 1858-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையில் சுமார் 500 மாணவர்கள் வரை பயின்று வருகின்றனர். இங்கு பயிலும் மாணவர்கள் சக மாணவிகளை கீழ்த்தரமான வார்த்தைகளால் கிண்டல் செய்வதாக புகார் எழுந்தது.

இதனையடுத்து, மாணவர்களை ஆசிரியர்கள் கண்டித்தும் இந்த பிரச்சினை தீரவில்லை. மேலும், மாணவர்கள் வகுப்பறையில் செல்போன்களை உபயோகிப்பதாகவும், பாடசாலை ஆசிரியர்களை மதிப்பதில்லை என்றும் குற்றச் சாட்டுப்பட்டியல் நீண்டு கொண்டே சென்றுள்ளது.

இதனால் 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வாரத்தில் திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் வகுப்புகளும், மாணவிகளுக்கு செவ்வாய், வியாழன், சனிக் கிழமைகளில் வகுப்புகள் நடத்த பாடசாலை நிர்வாக கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. ஆனால், பாடசாலை நிர்வாகத்தின் இந்த முடிவுக்கு மாவட்ட பாடசாலை ஆய்வாளர் அனுமதியளிக்கவில்லை.

எனினும், பாடசாலை நிர்வாகம் தனது முடிவில் உறுதியாக உள்ளது. "மூன்று நாட்கள் மட்டுமே வகுப்பு எடுப்பதால், பாடத்திட்டத்தை முடிப்பதில் சிக்கல் இருக்கும் என்பது எங்களுக்கு புரிகிறது. ஆனால், மாணவர்களின் சேட்டைகளை சமாளிக்க இதை தவிர வேறு வழியில்லை என்கிறார் பாடசாலை ஆசிரியர்.

மாணவர்களை திருத்த வழி செய்யவேண்டுமே ஒழிய இதுபோன்ற முடிவுகளை எடுக்க கூடாது" என்று உள்ளூர் பஞ்சாயத்து தலைவர் கூற, நீங்கள் வந்து வகுப்பு எடுத்து பாருங்கள் அப்போது புரியும் என பதில் வந்துள்ளது.

ஏற்கனவே குரங்கு சேட்டை செய்பவர்கள் வாரத்தில் நான்கு நாட்கள் விடுமுறை அளித்தால் எப்படி திருந்துவார்கள் என மாணவர்களின் பெற்றோர்கள் புலம்பித் தவிக்கின்றனர். (8)

## பிரான்ஸின் தேசியதின ந...

(பாரிஸ்)

பிரான்ஸில் நடத்தப்பட்ட தேசிய தின நிகழ்வுகளை நிறைவு செய்யும் வகையில் ஈபிள் கோபுரத்திற்கு மேலாக வியத்தகு வாணவேடிக்கை நடத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட குறித்த தேசிய தின நிகழ்வின் இறுதி அங்கமாகவே குறித்த வாணவேடிக்கை நடத்தப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் கடந்த வெள்ளிக்கிழமை பிரான்ஸில் விடுமுறை அளிக்கப்பட்டிருந்த நிலையில் பலர் குறித்த நிகழ்வுகளில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்.

## துப்பாக்கி வன்முறைக்... அமெரிக்காவில் ஆர்...

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அதிகரித்து வரும் துப்பாக்கி வன்முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து நூற்றுக்கணக்கான ஆர்வலர்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டம், தேசிய துப்பாக்கிச் சங்கத் தலைமையகத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு நீதித்துறை வரை முன்




னெடுக்கப்பட்டுள்ளது.

மனிதர்களின் நிறம், பெண்கள் மற்றும் அரசியல் ஆர்வலர்கள் மீதான வன்முறையை தூண்டும் வகையில் தேசிய துப்பாக்கிச் சங்கம் செயற்படுவதாக மேற்படி ஆர்ப்பாட்டத்தில் கலந்து

## காஷ்மீர் எல்லையில் பதற்றம் இந்தியா - பாகிஸ்தான் மோதல்

(ஜம்மு)

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் ரஜோரி மாவட்டத்தில் உள்ள எல்லைக் கோட்டுப் பகுதியில் நேற்று பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இந்திய இராணுவத்தை சேர்ந்த ஒருவர் வீர மரணம் அடைந்தார்.

காஷ்மீரின் ரஜோரி மாவட்டத்தில் இந்தியா-பாகிஸ்தான் எல்லைக்கோட்டுப் பகுதியில் உள்ள இந்திய நிலைகளின்மீது நேற்றுப் பகலில் இருந்து பாகிஸ்தான் ராணுவத்தினர் அத்துமீறிய வகையில் துப்பாக்கிகளால் சுட்டும், மோட்டார் குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தியதாகவும், இந்திய வீரர்கள் அதற்கு தகுந்த பதிலடி கொடுத்து வருவதாகவும் ஜம்முவில் இருந்துவரும் முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து அங்கு நீடித்து வரும் துப்பாக்கிச் சண்டையில் இந்திய ராணுவத்தை சேர்ந்த ஒருவர் வீர மரணம் அடைந்ததாக முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. (8)

## சசிகலாவின் சமையலறைக் காட்சிக...

### டி.ஐ.ஜி. ரூபா பரபரப்புப் பேட்டி

(பெங்களூர்)

பெங்களூர் சிறையில் எடுக்கப்பட்ட வீடியோ ஆதாரங்களை சிலர் திட்டமிட்டு அழித்து விட்டதாக டி.ஐ.ஜி. ரூபா பரபரப்பு பேட்டி அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் பெங்களூரில் நிருபர்களிடம் பேசும் போது தெரிவித்துள்ளதாவது,

நான் கடந்த 10 ஆம்திகதி பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறைக்கு சென்று ஆய்வு செய்தேன். சசிகலா அடைக்கப்பட்டுள்ள அறைப் பகுதிக்கும் சென்று சோதனை செய்தேன்.

ஒரு அதிகாரியாக பார்வையிட்டு, உயர் அதிகாரிக்கு அறிக்கை கொடுத்தேன். இந்த விடயத்தில் நான் பொலிஸாரின் விதிகளை யோ, சிறைத்துறை சட்ட திட்டங்களையோ மீறவில்லை.

ஆனால் இந்த விவகாரத்தில் என்னை குற்றவாளி போல காட்ட முயற்சி நடக்கிறது. நான் முதலில் ஊடகத்திடம் பேசவில்லை. டி.ஜி.பி. சத்திய நாராயணராவ்தான் பேசினார். அதன் பிறகே நானும் ஊடகத்திடம் சென்றேன்.

ரூ.2 கோடி லஞ்சம் கை மாறிய விடயத்தில் நேர்மையான விசாரணை நடத்தப்பட வேண்டும். உயர்மட்ட விசாரணைக்கு நான் தயாராக இருக்கிறேன்.

இதில் என் மீது மட்டும் நடவடிக்கை எடுக்கக் கூடாது. அனைவர் மீதும் நியாயமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெங்களூர் சிறைக்கு நான் சென்றிருந்த போது எனது தொலைபேசி சரியாக இயங்கவில்லை. எனவே சிறையில் உள்ள ஹேண்டி கமராவை எடுத்துச் சென்றேன். சசிகலா அறையை நான் அந்த கமராவில் பதிவு செய்தேன்.

சிறப்பு சமையல் அறையையும் படம் பிடித்தேன். பிறகு அந்த கமராவை ஒரு அதிகாரியிடம் கொடுத்து, அதில் உள்ள காட்சிகளை பதவிறக்கம் செய்து பென் டிரைவ்வில் பதிவேற்றம் செய்து தரும்படி கூறி கொடுத்தேன்.

ஆனால் அடுத்த சில நிமிடங்களில் அந்த வீடியோ பதிவு அழிக்கப்பட்டிருந்தது. ஹேண்டி கமராவில் எந்த பதிவும் இல்லாமல் இருந்தது.

சிறைத்துறையில் எனக்கு கீழ் உள்ள சில அதிகாரிகளே எனக்கு எதிராக உள்ளனர். அவர்கள்தான் திட்டமிட்டு சசிகலாவுக்காக கட்டப்பட்டிருந்த சமையல் அறையை நான் கமராவில் படம் பிடித்திருந்



ததை அழித்து விட்டனர்.

என்றாலும் என்னிடம் சில ஆதாரங்கள் உள்ளன. அது பற்றி ஓரிரு

## அடுக்குமாடி குடியிருப்பில் பயங்கர தீ விபத்து

### 22 பேர் பலி

(பீஜிங்)

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் விபத்தில் சிக்கி குடியிருப்பு வாசிகள் 22 பேர் பலியானதாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், பலர் காயங்களுடன் வைத்தியசாலைக்கு



நேற்று ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 22 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவின் கிழக்குப் பகுதியான ஜியாங்சு மாகாணத்தில் இருக்கும் யுஷான் நகரில் உள்ள இரண்டு மாடிகளை கொண்ட குடியிருப்பில் நேற்றுக் காலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. தீ சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மீட்புப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும், தீ விபத்துக்கான காரணம் தொடர்பாக அதிகாரிகள் விசாரித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (க)

## இந்தியாவின் துணை ஜனாதிபதி தேர்தலில் காந்தியின் பேரன் கோபாலகிருஷ்ண காந்தி



(டில்லி)

துணை ஜனாதிபதி தேர்தல் ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் காங்கிரஸ், இடதுசாரிகள், திரிணாமுல், பகுஜன்சமாஜ், சமாஜ்வாடி, திமுக, தேசிய காங்கிரஸ், ராஷ்ட்ரீய ஜனதா தளம் உள்ளிட்ட 17 கட்சிகள் சார்பில் காந்தியின் பேரன் கோபாலகிருஷ்ண காந்தி துணை ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு போட்டியிடுகிறார். இதில், ஐக்கிய ஜனதா தளம் கட்சியும் கோபாலகிருஷ்ண காந்திக்கு தனது ஆதரவை அளித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் இன்று நடைபெறும் நிலையில், தனக்கு ஆதரவு அளிக்கும்படி ஜனாதிபதி வேட்பாளரான மீராகுமார் எதிர்க்கட்சி எம்.பி.க்களை நேற்றுச் சந்தித்துள்ளார்.

அப்போது அவருடன் துணை ஜனாதிபதி வேட்பாளருக்கு போட்டியிடும் கோபால கிருஷ்ண காந்தியும் எம்.பிக்களிடம் ஆதரவு கேட்கவுள்ளார்.

ஆம் ஆத்மி உள்ளிட்ட சில கட்சிகள் தங்களுடைய ஆதரவு யாருக்கு? என்பதை இன்னும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (8)

## மன்னிப்புக் ... கட்டார் ஏர்வே...



(கட்டார்)

கட்டார் ஏர்வேஸ் தலைமை நிர்வாகி அக்பர் அல் பெக்கர், விமானப் பணிப்பெண்களை ஆபாசமாக கூறிய கருத்துக்கு மன்னிப்பு கோரியுள்ளார்.

அயர்லாந்தில் கடந்த வாரம் நடைபெற்ற விருந்து ஒன்றில் கலந்துகொண்ட கட்டார் விமானச் சேவை நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி அக்பர் அல் பெக்கர், அமெரிக்க விமானச் சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...தின நிகழ்வுகள்

முதலாம் உலகப் போரில் அமெரிக்கா பங்கேற்று நேற்றுடன் 100 ஆண்டுகள் பூர்த்தியடைந்த அதேவேளை, தேசிய தினத்தை கொண்டாடிய பிரான்ஸ் துருப்புக்களுடன் அமெரிக்க துருப்புக்களும் இணைந்து அணிவகுத்து சென்றனர்.

இந்த நிகழ்வின் போது, பிரான்ஸ் மற்றும் அமெரிக்க தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டு 63 விமானங்கள் சாகசங்களையும் நிகழ்த்தின. (8)

## ...றக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தினால் அமெரிக்காவில் அதிகரித்து வரும் உயிரிழப்புக்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருப்பது தடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுமே குறித்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டில் மாத்திரம் சுமார் 33,594 பேர் துப்பாக்கி வன்முறை காரணமாக உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## ...சிகள் மாயம்



நாட்களில் தலைமை செயலாளர் மற்றும் டிஜிக்கு அனுப்பி வைப்பேன். இவ்வாறு டிஐஜி. ரூபா தெரிவித்தார். (8)

## ...க் கோரினார் ...வேஸ் நிர்வாகி



நிறுவனமானது தரம் குறைவாக இருப்பதாகவும், அதில் முதியவர்கள் சேவை வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார்.

மட்டுமின்றி தங்களது விமான பணியாளர்களின் சராசரி வயது 26 எனவும் கூறியிருந்தார்.

அல்பெக்கரின் இந்த கருத்துக்கு கடும் கண்டனம் எழுந்த நிலையில், தற்போது அவர் மன்னிப்பு கோரியுள்ளார். (8)


# இந்திய ஜனாதிபதித் தேர்தல் இன்று பாரதத்தின் அடுத்த ஜனாதிபதி யார்?

(டில்லி)

இந்தியாவின் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெறவுள்ளது. முற்பகல் 10 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை 5 மணிக்கு முடியும். இந்த தேர்தலில் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் வாக்களிப்பார்கள்.

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் எம்.எல்.ஏ.க்களின் வாக்குப்பதிவு நடைபெறும். எம்.பி.க்கள் டில்லியில் வாக்களிப்பார்கள். இந்திய தேர்தல் கமிஷனின் முன் அனுமதி பெற்றுள்ள எம்.பி.க்கள் மாநிலத்தில் வாக்களிக்கலாம்.

தமிழக சட்டசபை அருகில் உள்ள குழுக்கூட்ட அறையில்





வாக்குப்பதிவு நடக்க உள்ளது. இந்த குழு கூட்ட அறைக்கு அருகில் உள்ள வாயில்களில், எப்படி வாக்களிக்க வேண்டும் என்ற அறிவுரைகள் ஒட்டப்பட்டுள்ளன.

மேலும், ஜனாதிபதி வேட்பாளர்களான மீராகுமார், ராம்நாத்கோவிந்த்ஆகியோரது பெயர்களும் அங்கு எழுதி ஒட்டப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதி தேர்தல் பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரி அன்ஷ் பிரகாஷ் டில்லியில் இருந்து சென்னைக்கு நேற்று முன்தினம் மாலை வந்தார். அவர் மத்திய அரசின் ஊரக மேம்பாட்டுத் துறையின் கூடுதல் செயலாளராக இருக்கிறார். மாலை சுமார் 5 மணியளவில் தலைமைச் செயலகத்துக்கு வந்த அவர், தலைமைத் தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி, சட்டசபை செயலாளர் பூபதி, இணைச் செயலாளர் சுப்பிரமணியன் உட்பட சில அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். (8)


# ஐ.நாவை மிரட்டும் வடகொரியா

(வடகொரியா)

வடகொரியா மீது ஐக்கிய நாடுகள் சபை பொருளாதார தடைகளை கொண்டுவந்தால் உரிய எதிர் நடவடிக்கை எடுக்கப்படும் என வடகொரிய வெளியுறவுத் துறை அமைச்சர் ரி சு சூங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க பிராந்தியமொன்றை இலக்கு வைக்கும் வகையில் கடந்த 4ஆம் திகதி மிக நீண்டதூரம் சென்று தாக்கும் வல்லமை கொண்ட ஏவுகணையொன்றை வடகொரியா வெற்றிகரமாக சோதனை செய்தது.

இதனையடுத்து வடகொரியாவை கடுமையாக இறுக்கும் வகையில் பொருளாதார தடைகளை விதிக்க ஐக்கிய நாடுகள் சபை தீவிரம் காட்டி வருகின்றது.



இந்நிலையிலேயே வடகொரிய வெளியுறவுத் துறை அமைச்சர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "அமெரிக்காவின் அணு ஆயுதத் தாக்குதலில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளவே கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வடகொரியா சோதித்தது.

தங்களின் நாட்டை பாதுகாத்து கொள்வது என்பது வட கொரியாவின் சட்டப்பூர்வ உரிமை, ஐ.நா வட கொரியா மீது தடைகளை கொண்டு வந்தால் உரிய எதிர் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (8)

# யாத்திரிகர்கள் சென்ற வாகனம் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து

## 10 பேர் பலி

(ஸ்ரீநகர்)

அமர்நாத் யாத்திரை சென்ற பக்தர்கள் வாகனம் நேற்றுபள்ளத்தில் கவிழ்ந்த விபத்தில் பத்து பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 35 பேர் படுகாயமடைந்தனர்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் கடல்மட்டத்தில் இருந்து 3,888 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள அமர்நாத் குகைக் கோயிலில் ஆண்டுதோறும் தோன்றும் பனி லிங்கத்தை தரிசிக்க ஜம்மு வழியாக யாத்திரிகர்கள் பயணம் செய்வார்கள்.

இந்நிலையில், யாத்திரிகர்களில் சிலர் ஒரு வாகனத்தில் நேற்றுஜம்மு ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலை வழியாக சென்று கொண்டிருந்தனர்.

ரம்பான் மாவட்ட எல்லைக்குட்பட்ட வீதியில் ஒரு



குறுகிய வளைவில் திரும்பியபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியோரம் உள்ள பெரியபள்ளத்துக்குள்உருண்டு கவிழ்ந் தது.

இந்த விபத்தில் பத்து யாத்திரிகர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். 35 பேர் படுகாயமடைந்தனர்.

காயம் அடைந் தவர்கள் அனைவரும் அருகாமையில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் இந்த விபத்தின் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த ஆண்டின் அமர்நாத் யாத்திரை காலம் தொடங்கி 18 நாட்களுக்குள் வீதி விபத்து மற்றும் உடல்நலக்குறைவால் 35 பேரும் அனந்த்நாக் பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பேரும் என 43 பேர் பலியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# அமெரிக்கா-கியூபா உறவில் விரிசல்

(வோஷிங்டன்)

புரட்சியை அழிக்கின்ற முயற்சிகள் தோல்வியடையும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை கியூபா ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோ கடுமையாக விமர்சித்துள்ளார்.

கியூபாவின் தேசிய பேரவையில் பேசிய போதே ரவுல் காஸ்ட்ரோ இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த கம்யூனிஸ்ட் தீவு நாட்டோடு மேற்கொள்ளப்பட்டிருந்த அமெரிக்காவின் பயணம் மற்றும் வணிகத்தின் மீது ட்ரம்ப் கட்டுப்பாடுகளைக் கடுமையாக்கியிருக்கிறார்.

ஆனால், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவால் திறக்கப்பட்ட ஹவானாவிலுள்ள அமெரிக்க தூதரகம் இன்னும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றார். அரை நூற்றாண்டாக அமெரிக்காவுக்கும், கியூபாவுக்கும் இடையில் நீடித்த கடுமையான மோதல் நிலையினை முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தளர்த்தினார்.



ஆனால் தற்போதைய ஜனாதிபதி தளர்த்தப்பட்டவற்றில் சில அம்சங்களை, ஒரு மாதத்திற்கு முன்பு மீள பெற்றார்.

ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்த கொள்கை மாற்றங்களினால் இருநாடுகளுக்குமிடையில் சமீபகாலமாக நீடித்து வந்த சுமுக உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப உறவும் போருக்கு பிந்திய தமிழ் சமூகமும்

ஒவ்வொரு மனிதனும் சமூகத்தில் பழக ஆரம்பிக்கும் பொழுது அவனுடைய பழக்கங்கள் அவன் சிறு வயதிலிருந்து சமூகத்திலிருந்து பெற்றவையாகும். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று கூறுவார்கள் ஆனாலும் போரினால் ஏற்பட்ட தொடர் அழிவுகள் அதன் விளைவுகள் சாதாரண குடும்பத்திலிருந்து ஒரு இனத்தின் கலாசார விழுமியங்களை சிதைத்து கொண்டிருப்பதை வடகிழக்கு மாகாணங்களில் வாழும் ஒவ்வொரு குடும்பத்திலும் அவதானிக்க முடிகிறது. உணர்ச்சி, அறிவு என்கின்ற எதிரெதிரான விடயங்களின் கலவைதான் மனிதன், எப்பொழுதும் உணர்ச்சி பூர்வமாகவே வாழ்ந்திட முடியாது. குடும்பம் கொஞ்சம் குறைபாடுகளும், அதிக நன்மைகளும் கொண்ட கட்டமைப்பு என்பது சமூகவியல் துறை சார்ந்தவர்களின் கருத்தாகும். ஆனால் சரியான வழிகாட்டுதல் இல்லாத சிறிய குடும்ப பிரச்சினைகள் குடும்பத்தை சிதைத்து விடும் அளவிற்கு விவாகரத்துக்கு போகும் அளவிற்கு பூதகரமாக உருவெடுப்பதை சட்ட உதவி ஆணைக்குழுவிற்கு வரும் விவாகரத்து கோருவோரிடமிருந்து அறிந்து கொள்ள முடியும். போருக்க பிந்திய மக்களின் மனோநிலை, பொருளாதார நிலைமை மற்றும் போரினால் ஆண்கள் காணாமல் மற்றும் இறந்து போனமையால் திடிரென ஏற்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் அதிகரிப்பு அத்துடன் இளவயது திருமணம் என நீண்ட பட்டியலை குறிப்பிட்டு கூற முடியும்.

பலதார திருமணம் (Polygamy)

பொது திருமண கட்டளைச் சட்டத்தின் படியாகவும் கலாசார வரையறைகளும் கோடிட்டு காட்டுவது ஒருவனுக்கு ஒருத்தி என்கின்ற குடும்ப பிண்ணனி ஆகும். ஆனாலும் போருக்கு பிந்திய சமூகம் மிகவும் சிதைவடைந்து இருப்பதை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அவதானிக்க முடிகிறது. முதலாவது பிரச்சினையாக இருப்பது ஆண் சட்டத்திற்கு மாறாக பல திருமணங்கள் (Polygyby) செய்து கொள்ளுவதன் மூலம் இடம்பெறும் பிரச்சினைகள் ஒரு குடும்பத்தை கைவிட்டு பிறிதொரு பெண்ணையோ அல்லது அதன் தொடராக ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களையோ திருமணம் செய்து கொள்வதை அவதானிக்க முடிகிறது. அடுத்ததாக பெண் பல குடும்ப உறவுகளை (Polyandry) ஏற்படுத்தி கொள்வதாலும் பிரச்சினைகள் உருவெடுக்கின்றது. மேற்கத்திய பாணியிலிருந்து இவை மாறுபட்டாலும் மிக இலகுவாக அவதானிக்க கூடியதாக உள்ளது. சிறு சிறு காரணங்களால் குடும்பத்தை விட்டு பிள்ளைகளை கைவிட்டு வீட்டை விட்டு வெளியேறி சென்று விடுவதனை இங்கு அவதானிக்கலாம். இதனால் பிள்ளைகள் தொடர்பில் போதிய அக்கறையின்மை மற்றும் சட்டரீதியான ஆவணங்களை பெற்றுக்கொள்வதில் பாரிய சவால்கள் இருப்பதையும் அவதானிக்க முடியும். இவற்றினால் பெண்கள் மற்றும் சிறுவர்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிள்ளைகள் தொடர்பில் அக் கறையின்மை

சமூகத்தின் மற்றொரு அலகு பிள்ளைகள் குடும்ப வாழ்வில் பலவிதமான சிக்கல்கள் நேர்கின்றன அவற்றுள் உறவுச் சிக்கல்களும் உண்டு. குறிப்பாக கணவன்- மனைவி உறவுக்கு அடுத்த சிக்கல்கள் நேரிடும் உறவு பெற்றோர், பிள்ளைகளுடையது. பிள்ளைகள் வளர வளர உறவின் பரிமாணங்கள் சிக்கல் அடைந்து கொண்டே போகும். ஆனாலும் அவர்களை கவனமாக கையாள வேண்டியது பெற்றோரின் கடமையாகும். கண்டிப் புடன் கூடிய பரிவு பாசமிருக்க வேண்டியது அவசியமாகும் பல நேரங்களில் கண்டிப்பு மட்டுமே இருக்கும் பாசம் அறவே இருக்காது.

பிள்ளைகள் இலகுவாக பாதிக்கப்படுவதை அண்மைய சம்பவங்கள் எடுத்து காட்டுகின்றன. பாசத்தோடு நடந்து கொள்ளும் போது பிள்ளைகள் இலகுவாக தங்களுடைய பிரச்சினைகளை பெற்றோரிடம் தயங்காமல் கூறுவார்கள். வளர்ந்த பிள்ளைக்குரிய சில சந்தேகங்களை தாய் பெண் பிள்ளைகளுக்கும் தந்தை ஆண் பிள்ளைக்கும் சொல்லிக்கொடுப்பதன் மூலம் ஓரளவிற்கு சிறுவர்களை பாதிப்பிலிருந்து தடுக்கலாம். தவறு செய்யும் போது நேரம் ஒதுக்கி அவர்களுடன் கதைப்பதன் மூலம் பல விடயங்களை தீர்க்கலாம்.

மது உற்பத்தி

மது விற்பனை மற்றும் கள்ளச்சாரயம் அழைக்கப்படும் சட்டரீதியற்ற முறையில் தாயாரிக்கப்படும் மது உற்பத்தி என்பன பாரிய பொருளாதார பின்னடைவைத் தந்துள்ளது. வாதத்திற்கு மட்டுமே பொருந்தும் சட்டரீதியான மது விற்பனை கள்ளச்சாரய கலாசாரத்தை அழித்து விடும் என்று ஆனால் இரண்டுமே போருக்கு பிந்திய பொருளாதாரத்தை சிதைத்து கொண்டிருப்பதை காணலாம். இரண்டு நாள் வேலை செல்வதே மூன்றாம் நாள் குடிப்பதற்கே என்றாகிவிட்டது. இதற்கு மேலாக தன்னிலை மறந்து பிள்ளைகள் முன் தவறாக நடந்து கொள்ளும் ஆண்களின் நிலையால் நலிந்த பொருளாதார சூழ்நிலையோடு வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே செல்கின்றது.

இவற்றிற்கு மேலாக காணாமல் ஆக்கப்பட்டோரின் தொடர் போராட்டங்கள் காணி ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம், வேலையில்லா பட்டாதாரிகளின் போராட்டம் என மக்களின் அன்றாட வாழ்கை இன்றும் அபிவிருத்திக்கும் போருக்கு பிந்திய அமைதியான வாழ்க்கைக்கு திரும்பமுடியாத சவால்களை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு மேலாக தொழில்துறையில் பாரம்பரிய தொழில்களுக்கு தொழில் நுட்பம் மேன்பட்ட வெளி மாவட்ட மீனவர்களுக்குமிடையிலான போட்டி அத்துடன் தொழிலின்மை என்பன வறுமை கோட்டிற்குள் மக்களின் வாழ்நிலை முடங்கி இருப்பதும் மக்கள் இன்றும் தங்களுடைய இயல்பு நிலைமைக்கு திரும்ப முடியாத நிலையை தோற்றுவித்துள்ளது. சட்ட உதவி ஆணைக்குழு சட்ட உதவிகளோடு மட்டும் தனது சேவையை மட்டுப்படுத்தாமல் சமூகத்தின் மீதான பலவித அழுத்தங்களை குறைப்பதற்கு பல எத்தனங்களை ஆலோசனைகளையும் கொண்டுள்ளது.

ம.ஜெயந்தன்,
சிரேஷ்ட நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர்,
சட்ட உதவி ஆணைக்குழு,
முல்லைத்தீவு.

## தற்போதைய நிலையில் முஸ்லிம்கள் பிரிந்திருப்பது அபாயகரமானது- பசீர்

(கொழும்பு)

தற்போதைய அரசியல்நகர்வுகளை அவதானிக்கின்ற போது முஸ்லிம் அரசியல் தலைமைகள் பிரிந்திருப்பது முஸ்லிம் சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று முன்னாள் அமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## புகையிரத நிலையங்களுக்கு அண்மையில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்

நாடு பூராகவும் அமைந்துள்ள அனைத்து புகையிரத நிலையங்களை அண்டிய பகுதிகளிலும் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாரம் நேற்று முதல் எதிர்வரும் 23ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படும். இதன் ஆரம்ப தேசிய நிகழ்வு தெமட்டகொடை புகையிரத நிலையத்தில் நேற்று காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

புகையிரத பயணிகள் புகையிரத நிலையத்தை அண்டியுள்ள மக்கள், பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் பொலிஸ் சமூக பிரிவினர் சிறைக்கைதிகள் சமூக பிரதிநிதிகள், சாரணர்கள் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர். (இ-7)

## சாரதிகளே அவதானம்

## அபராதம் அதிகரிப்பு!

சில வகை போக்குவரத்து விதி மீறல்களுக்கு 25.000 ரூபா அபராதம் விதிக்கப்பட உள்ளது. வீதிப் பாதுகாப்பு குறித்த தேசிய பேரவை இது குறித்து அறிவித்துள்ளது. இதனை வீதிப் போக்குவரத்து குறித்த தேசிய பேரவையின் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்துள்ளார்.

மது போதையில் வாகனம் செலுத்துவோர், காப்புறுதியின்றி வாகனம் செலுத்துவோர், சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் வயதை பூர்த்தி செய்யாது வாகனம் செலுத்துவோர் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துவோர் ஆகியோருக்கு எதிராக இவ்வாறு 25000 ரூபா அபராதம் விதிக்கப்பட உள் ளது என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## முழுமையாக போராட்டத்தை கைவிடவில்லை -GMOA தெரிவிப்பு

சைட்டம் நிறுவனத்துக்கு எதிராக தமது தொழிற்சங்க நடவடிக்கைகளை முழுமையாக கைவிடவில்லையென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் இதுவரை வழங்கியுள்ள வாக்குறுதிகளின் அடிப்படையில் தற்காலிகமாக தொழிற்சங்க நடவடிக்கையை கைவிட்டுள்ளதாக சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் டாக்டர் பிரசாத்காலலகே தெரிவித்தார்.

அரசாங்கம் அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பில் தாம் நிதானமாக அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## மலையக புகையிரத சேவைகள் விரைவில் வழமைக்கு திரும்பும்



தடைப்பட்டுள்ள மலையகத்துக்கான புகையிரத சேவைகள் இன்னும் 3 வாரத்தில் வழமைக்கு திரும்பும் என புகையிரத போக்குவரத்து புனரமைப்பிற்கான பொறியியலாளர் ரஞ்சித் விஜயசிரி தெரிவித்துள்ளார்.

கொழும்பு, பதுளை பிரதான புகையிரத பாதையில் கொட்டகலை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் கடந்த 13ஆம் திகதி அதிகாலை 60 அடி பாலத்தில் புகையிரதம் தடம் புரண்டதில் மலையகத்திற்கான புகையிரத சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

விபத்தில் பழுதடைந்த பயணிகள் பெட்டிகளை தண்டவாளத்திலிருந்து சீர்செய்து அனுப்பியுள்ளதாகவும், எனினும் பாலத்தை புனரமைப்பதற்கு இன்னும் 3 வாரங்கள் எடுக்கும் எனவும் புகையிரதப் போக்குவரத்து புனரமைப்பிற்கான பொறியியலர்ளர் ரஞ்சித் விஜயசிரி தெரிவித்துள்ளார்.(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2017-16.08.2017



அனைவரிடமும் எதிர்பார்ப்பு இன்றிப் பழகும் மேஷ இராசி அன்பர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் கடக இராசியில் நீச்சம் பெற்றிருக்கிறார். அதே நேரத்தில் அவரோடு 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதனும், பஞ்சமாதிபதியான சூரியனும் கூடியிருக்கின்றனர். சுக ஸ்தானத்தில் 3 கிரகங்களும் சேர்ந்திருப்பது யோகம்தான்.

புத-ஆதித்ய யோகம் இருப்பதால் குடும்பத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். பயணங்கள் பலன் தரும் விதத்தில் அமையும். தாய்வழி ஆதரவு பெருகும். தொழில் பங்குதாரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். அரசியலில் பிரவேசிக்க ஆயத்தம் செய்தவர்களுக்கு, எதிர்பாராத நல்ல வாய்ப்புகள் வந்து சேரும்.

தனாதிபதி சுக்ரன் தனஸ்தானத்தில் வீற்றிருப்பது யோகம்தான். அவரைக் குரு பகவான் பார்க்கிறார். பார்க்கும் குருவால் பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். கேட்கும் இடத்தில் உதவிகள் கிடைக்கும். சுக்ர பலம் நன்றாக இருக்கும் பொழுது, துணிந்து எதையும் செய்யலாம் என்ற நம்பிக்கை உருவாகும்.

அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் அதிகமாகக் கிடைக்கும். குடும்பத்தினரின் ஆசைகளையெல்லாம் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். பெண்களால் பெருமை சேரும். வங்கிகளில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த சலுகைகளும், கடன் உதவிகளும் தானாக வந்து சேரும்.

பின்னோக்கி நகரும் கிரகங்கள் என்று வர்ணிக்கப்படும் ராகு-கேதுக்களின் மாற்றங்களும் இம்மாதத்தில் நிகழவிருக்கிறது. சுகஸ்தானத்தில் ராகுவும், தொழில்ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். ஆரோக்கியத் தொல்லை ஏற்படாமல் இருக்கவும், தொழிலில் இருக்கும் தடைகள் அகலவும், தனவரவு திருப்தி அளிக்கவும், நாகசாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் உங்கள் சுய ஜாதக அடிப்படையில் அனுகூலம் தரும் ஸ்தலங்களில் செய்வது நல்லது. முறையான ராகு-கேது வழிபாடு முன்னேற்றத்தைக் கொடுக்கும். ஆடி வெள்ளி தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**சிம்ம புதனும், வக்ர புதனும்**

ஜூலை 22ஆம் திகதி சிம்மத்திற்கு புதன் செல்கிறார். 6இற்கு அதிபதியாக விளங்கும் புதன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, உங்களின் பிள்ளைகளுக்கு எதிர்பார்த்துக் காத்திருந்த வேலை வாய்ப்புகள் கிடைக்கலாம். சகோதர வழி சச்சரவுகள் குறையும். பல மாதங்களாக நடைபெற்ற பாகப்பிரிவினை, இப்பொழுது நல்ல முடிவிற்கு வரும். சிம்ம இராசிக்குள்ளேயே ஜூலை 30 ஆம் திகதி புதன் வக்ரம் பெறுகிறார். ஓகஸ்ட் 6ஆம் திகதி மீண்டும் கடக இராசிக்குப் புதன் வக்ர இயக்கத்தில் செல்கிறார். இதன் விளைவாக மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். உத்தியோக மாற்றங்கள் ஒரு சிலருக்கு உருவாகலாம். அரசு பணி கிடைக்கவில்லையே என்று நினைத்தவர்களுக்கு அது கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும்.




**ராகு-கேதுக்களின் மாற்றம்!**

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக சிம்மத்தில் ராகுவும், கும்பத்தில் கேதுவும் சஞ்சரித்தார்கள். இப்பொழுது ஜூலை 27ஆம் திகதி கடகத்தில் ராகுவும், மகரத்தில் கேதுவுமாக பின்னோக்கிச் செல்கிறார்கள். கடகத்தில் ராகு சஞ்சரிப்பது ஒரு வழிக்கு யோகம் தான். கடக ராகு கைநிறையக்கொடுப்பார். எனவே பொருளாதாரத்தில் மேம்பாடு இருக்கலாம். அதே நேரத்தில் சுக ஸ்தானம் எனப்படும் 4ஆம் இடத்தில் ராகு வருவதால் ஆரோக்கியத்திற்காகச் செல விடும் சூழ் நிலை உருவாகும். 10ஆம் இடத்து கேது தொழில் மாற்றங்களைக் கொடுக்கலாம். சுய ஜாதகம் பலம் பெற்றி ருந்தால் கேதுவால் அதிக பாதிப்புகள் இருக்காது.

**சனியின் வக்ர நிவர்த்திக் காலம்!**

ஓகஸ்ட் 4ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாவதால், அஷ்டமத்துச் சனி பலம் பெறுகிறார். எனவே இடமாற்றம், வீடு மாற்றம் உத்தியோக மாற்றம், தொழில் மாற்றம் என்று மாற்றங்கள் உருவாகும் சூழ்நிலை உண்டு. உறவினர் பகை அதிகரிக்கும். வீண் விரயங்கள் ஏற்படலாம்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

மாத தொடக்கத்தில் வருமானப் பெருக்கமும், மூன்றாம் வாரத்திற்கு மேல் விரயங்களும் ஏற்படும். ராகு-கேது பெயர்ச்சி நன்மை தரும் என்றாலும் உத்தியோகம், தொழிலில் நிலையற்ற தன்மையை உருவாக்கும். நீண்ட தூரப் பயணங்களால் பலன் கிடைப்பது அரிது. கணவன்- மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். அதற்கான வேலை வாய்ப்புக் கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரலாம். வீடு மாற்றச் சிந்தனை அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. செவ்வாய் விரதமும், அம்பிகை வழிபாடும் செல்வ நிலையை உயர்த்தும்.

# நல்ல வாய்ப்புக்கள் வந்து சேரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



உழைப்பால் வெற்றி காணும் ரிஷப இராசி அன்பர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சுக்ரன் உங்கள் ராசியிலேயே சஞ்சரிப்பது யோகம்தான். பொருளாதார நிலை உயரும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து, முக்கியக் காரியங்கள் முடிய வழிவகுத்துக் கொடுப்பார்கள். குரு பார்வை, உங்கள் ராசியில் பதிவதால் சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் கூட இப்பொழுது சிறப்பாக நடைபெறும்.

மங்கள ஓசை மனையில் கேட்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு மகிழ்ச்சியடையும் விதத்தில் கல்யாண வாய்ப்புகள் கைகூடப் போகின்றது. குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். உடன் பிறந்தவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். சொத்துகளால் உங்களுக்கு ஆதாயம் கிடைக்கும். சுக்ரபலம் நன்றாக இருப்பதால், ஆபரண சேர்க்கையும் அதிகரிக்கும்.

ஒரு சிலருக்கு அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வந்து அணிந்து அழகு பார்க்கும் சூழ்நிலை உருவாகலாம். வெளிவட்டாரப் பழக்கம் விரிவடையும். வீடு வாங்கும் யோகம் உண்டு. வெளிநாட்டு அழைப்புகளை ஏற்றுக் கொள்பவர்கள், சுயஜாதகத்தை ஒருமுறை ஆராய்ந்து பார்த்துக்கொள்வது நல்லது.

ராகு-கேதுக்களின் பெயர்ச்சியும் இம்மாதத்தில் நடைபெற இருக்கிறது. பின்னோக்கி நகரும் இந்த இரண்டு கிரகங்களும் ஒருவரது ஜாதகத்தில் பலம் தரும் இடத்தில் அமர்ந்து அதன் திசாபுத்திகள் நடைபெறுமேயானால், மிதமிஞ்சிய பொருளாதாரம் வந்து சேரும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை பரிசீலனை செய்யப்படாமலேயே கிடைக்கும். தற்சமயம் 3இல் ராகுவும், 9இல் கேதுவும் வருகிறார்கள். எனவே வழக்குகளில் வெற்றி கிடைக்கவும், வாய்ப்புகளில் வரும் தடை அகலவும் அனுகூல ஸ்தலங்களில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்து கொள்வது நல்லது.

ஆடி வெள்ளியன்று விரதமிருந்து அம்பிகையை வழிபட்டு வந்தால், கோடி கோடியாய் நன்மைகள் வந்து சேரும்.

**சிம்ம புதனும்.. வக்ர புதனும்..**

ஜூலை 22ஆம் திகதி சிம்ம இராசிக்கு, புதன் செல்லப் போகிறார். தன பஞ்சமாதிபதி 4இல் சஞ்சரிக்கும் பொழுது தனவரவிற்கு பஞ்சம் இருக்காது. அதே நேரத்தில் புதன் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. குறிப்பாக ஜூலை 30ஆம் திகதி சிம்மத்தில் புதன் வக்ரம் பெறுகிறார். அதன்பிறகு ஆகஸ்ட் 6ஆம் திகதி கடகத்தில் புதன் வக்ரம் பெறுகிறார். எந்த இடத்தில் அவர் வக்ரம் பெற்றாலும் தனாதிபதியாக புதன் விளங்குவதால், வக்ர காலத்தில் பணப் பற்றாக்குறை ஏற்படும். ஒரு சிலர் கைமாற்று வாங்கும் சூழ்நிலை உருவாகும். தேவைகள் அதிகரிக்கும். சேமிப்பு கரையும். நெருங்கிய உறவினர்களால் பிரச்சினைகள் உண்டாகக் கூடும். இதுபோன்ற நேரத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.




**கடக ராகுவும், மகர கேதுவும்!**

ஜூலை 27ஆம் திகதி சிம்மத்தில் இருந்து கடகத்திற்கு ராகு செல்கிறார். அதே நேரத்தில் கும்பத்தில் இருந்து கேது மகரத்திற்குச் செல்கிறார். சகாய ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கும்பொழுது ஒரு சில காரியங்களில் வெற்றி கிடைக்கும். குறிப்பாக விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்துசேருவர். பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் அகலும். மூன்றாம் நபர் ஒருவர், உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பார்.

கேது 9ஆம் இடத்தில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. பங்காளிப் பகை அதிகரிக்கும். ஆலயத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். கொடுத்து உதவும் எண்ணம் மேலோங்கும். வெளிநாட்டில் இருப்பவர்கள் தாய்நாடு திரும்பும் சூழ்நிலை உருவாகும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் உண்டு.

**சனியின் வக்ர நிவர்த்திக் காலம்!**

உங்கள் ராசிக்கு யோகம் செய்யும் கிரகமாக விளங்கும் சனி, ஆகஸ்டு 4ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார். அதன் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே சுப விரயங்கள் அதிகரிக்கும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். துணிவும், தன்னம்பிக்கையும் உயரும். தொழில் முன்னேற்றம் உண்டு. பாகப் பிரிவினைகள் இழுபறி நிலையில் இருக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப்பலன்கள்**

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். வருமானம் பெருகும். தாய் வழி ஆதரவு தடையின்றி வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். கட்டடப் பணி தொடரும். பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும். அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். புதிய வாகனங்கள் வாங்கிப் பயணிக்கும் சூழ்நிலை உருவாகும். அலுவலகத்தில் கூட எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதனின் வக்ர நிவர்த்திக் காலத்தில் மட்டும் கொஞ்சம் கவனமுடன் நடந்து கொள்வது நல்லது. ராகு-கேதுக்களுக்குரிய பரிகாரங்களைச் செய்து கொள்வதன் மூலம் தேக நலன் சீராகும். செல்வநிலை உயரும். ஆடி வெள்ளியில் அம்பிகை வழிபாடு ஆனந்த வாழ்வை அமைத்துக் கொடுக்கும்.

# வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு குழுக்கள் இருப்பதால் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை-இராதாகிருஷ்ணன்

(கொழும்பு)

இந்த நாட்டில் எந்த ஒரு விடயத்திற்கும் இரண்டு குழுக்கள் இருப்பதினாலேயே இனங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை என கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.



கொத்மலை காமினி திசாநாயக்க தேசிய கல்லூரிக்கான தொழில்நுட்ப பீட திறப்பு விழா நேற்று ஞாயிற்றுக் கிழமை நடந்தது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் எந்த விடயத்தினை எடுத்தாலும் இரண்டு குழுக்கள் காணப்படுகின்றன. அதில் மத குருமார்கள் முதல் அரசியல்வாதிகள் வரை அடங்குகின்றனர். இதனாலேயே இனவாதம் குறித்த பல பிரச்சினைகள் தோன்றுகின்றன.

அதனால் இன மத மொழி பேதம் இன்றி இலங்கையில் அனைவரும் ஒன்றுமையாக வாழ நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்" என அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு மத்திய மாகாண சபை உறுப்பினர்களான அசோக எயரத் குமார தசநாயக்க கொத்தமலை வலையகல்விபணிமனையின் அதிகாரிகள் உட்பட பெற்றோர்கள் மாணவர்கள் எனப் பலர்கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உயர்நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்ட உதயகம்மன்பில



நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, அவுஸ்திரேலிய பிரஜையான பிரயன் ஷெடிக் என்பவருக்கு சொந்தமான கோடிக் கணக்கான சொத்துக்களை மோசடி செய்ததை ஒப்புக் கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்த குற்றச்சாட்டு பொய்யானது என ஊடகவியலாளர் சந்திப்புகளில் கூறி வந்த கம்மன்பில, அண்மையில் உயர்நீதிமன்றத்திடம் கையளித்த சத்தியக்கடிதத்தில் தான் மோசடி செய்ததை ஒப்புக்கொண்டுள்ளார்.

உதய கம்மன்பில மாத்திரமல்லாது, அவரது நண்பரான சிட்னி ஜயசிங்க வழங்கிய சத்தியக்கடிதத்திலும் பிரயன் ஷெடிக்கின் சொத்துக்களை விற்று மில்லியன் கணக்கான பணத்தை பெற்றுக்கொண்டதாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

மேலும் அந்த பணத்தை என்ன செய்தார்கள் என்பதை தாம் மறந்து விட்டதாக இருவரும் கூறியுள்ளனர். இந்த மற்தி என்பது சட்டத்தின் ஓட்டைக்குள் புகுந்து செல்ல புனையப்பட்ட பொய்என சட்டவாதிகள் கூறியுள்ளனர்.

மில்லியன் கணக்கான டொலர்கள் செலவானதை மறந்து போனார்கள் என்பது கேலிக்குரியது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவுஸ்திரேலிய பிரஜைக்கு சொந்தமான தனியார் வங்கி ஒன்றில் இருந்த 2.1 மில்லியன் டொலர் பங்குகளை போலியான சட்டப்பத்திரம் ஒன்றை தயாரித்து விற்பனை செய்துள்ளதாக கம்மன்பிலவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கம்மன்பில உயர்நீதிமன்றத்தில் வழங்கிய சத்தியக்கடிதத்தில் வங்கியில் இருந்த அந்த பங்குகளை பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேராவுக்கு விற்பனை செய்துள்ளதாக தெரிவித்தார். (இ-7)

# ஐ.தே.கவுடன் இருந்தால் சு.க.தேய்ந்து போய்விடும்

## அமைச்சர் செனவிரட்ன கவலை

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து விலகி எதிர்க்கட்சியில் இணைந்து செயற்பட தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதால் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேய்ந்து போகுமே அன்றி வலுவடையாது என ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியதாகவும் அவர் தெரிவித்தார்

கூட்டு அரசாங்கத்தின் உடன்படிக்கை டிசெம்பர் மாதமே முடிவடையவுள்ளதால், அதுவரை அரசாங்கத்தில் இருக்குமாறு ஜனாதிபதி விடுத்த கோரிக்கையை தற்போது ஆராய்ந்து வருவதாகவும் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார். (இ-7)

# நிதி ஒதுக்கீட்டில் அரசு பாரபட்சம்

## கிழக்கு முதல்வர் விசனம்

கிழக்கு மாகாணத்துக்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதில் மத்திய அரசாங்கம் கையாளும் பாரபட்சப் போக்கினால் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதில் பல்வேறு தடங்கல்களை எதிர்கொள்வதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.



மத்திய அரசினால் ஒதுக்கப்படவேண்டிய நிதி வழங்கப்படாமையினால் மாகாணத்தில் எதிர்நோக்கப்படும் பொதுவான பின்னடைவுகள் குறித்து நேற்று ஞாயிற்றுக் கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "வருடத்தின் அரையாண்டும் கடந்து விட்ட போதிலும் கிழக்கு மாகாண சபைக்கு இவ்வாண்டுக்கான நிதியில் ஒரு சதமேனும் வந்து சேரவில்லை.

மத்திய அரசினால் மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டிய நிதி தாமதித்துக் கிடைப்பதால் பொது மக்களே பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள்.

எனவே ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை உரிய நேரத்தில் வழங்க மத்திய அரசு ஆவன செய்ய வேண்டும்.

இதேவேளை கடந்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் போது மேற் கொள்ளப்பட்ட அபிவிருத்திகளின் பற்றுச் சீட்டுக்களுக்கான நிதி சமீபத்தில்தான் மத்திய அரசினால் விடுவிக்கப்பட்டன.

இந்த ஆண்டுக்குரிய அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கான நிதியை விரைவில் வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும்" என தெரிவித்துள்ளார். (இ-7)

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஐந்து பேர் கைது

காசல்ரீ நீர் தேக்கத்திற்கு நீர் ஏந்தி செல்லும் பொகவந்தலாவ டின்சின் கேசல் கமுவ ஓயாவிற்கு அருகாமையில் சட்டவிரோத மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்டு வந்த 5 பேரை பொகவந்தலாவ பொலிஸாரால் நேற்று காலை 5.30 மணி அளவில் கைது செய்துள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெறிவித்தனர்.

பொகவந்தலாவ பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவிலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே இவர்கள் கைது செய்யபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மாணிக்ககல் அகழ்விற்கு பயன்படுத்தபட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைபற்றியதாகவும் சட்டவிரோத மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்டு வந்தவர்கள் நாவலபிட்டி ,பலாங்கொட, பொகவந்தலாவ மற்றும் டினசின் பகுதிகளை சேர்ந்தவர்கள் என பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (இ-7)

# மோட்டார் சைக்கிள் நாயுடன் மோதி விபத்து

## இரு இளைஞர்கள் காயம்

வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் வீதியில் நின்ற நாயுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

வரணி பிரதேச வைத்தியசாலை முன்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் வரணி வடக்குப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இருவரே படுகாயமடைந்து வரணி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-10-60-103)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 | 170 | 100 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 80 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 250 | 300 | 400 |
| தக்காளி | 150 | 200 | 110 | 160 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 100 |
| கோவா | 120 | 160 | 80 | 160 | 150 | 140 |
| கரட் | 150 | 300 | 200 | 250 | 300 | 300 |
| பூசணி | 100 | 140 | 100 | 120 | 90 | 120 |
| புடோல் | 80 | 100 | 60 | 60 | 100 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 60 | 60 | 80 | 80 |
| சின்னவெங்காயம் | 150 | 300 | 250 | 250 | 280 | 240 |
| பெரியவெங்காயம் | 80 | 100 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 140 | 200 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 130 | 150 | 50 | 120 | 140 | 140 |
| பயற்றங்காய் | 160 | 150 | 150 | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 80 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 60 | 100 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | -- | 200 | 280 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 200 | 240 | 240 | 200 |
| போஞ்சி | 200 | 160 | 100 | 160 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 | 120 | 100 | 140 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 30 | 40 | 50 | 60 | 70 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 55 | 70 | 40-60 |
| இராசவள்ளி | 180 | 300 | 200 | -- | -- | 300 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 150 | 200 | 200 | 240 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 60 | 60 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 25 | 40 |
| [illegible] | 20 | 20 | 10 | 20 | 20 | 20 |
| [illegible] | 80 | 140 | -- | -- | -- | 100 |

# செப்டெம்பர் 15 ஆம் திகதி அரசிலிருந்து விலகிடுவேன்

## பிரதியமைச்சர் துலிப் உறுதி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன டிசெம்பர் 31 ஆம் திகதிக்குப் பின்னர் தேசிய அரசாங்கத்திலிருந்து விலகுவது குறித்து தீர்மானம் எடுக்கும்படி தெரிவித்திருந்த போதும் தாம் பிரதியமைச்சர் பதவியில் சத்தியப்பிரமாணம்செய்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகும் செப்டெம்பர் 15 ஆம் திகதியன்று தேசிய அரசாங்கத்திலிருந்து விலகப் போவதாக தபால் மற்றும் முஸ்லிம் விவகார பிரதியமைச்சர் துலிப் விஜேயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் சர்வதேச ரீதியில் வெற்றி பெற்றிருந்த போதும் கிராம மக்களை வெற்றிகொள்ள முடியவில்லை. ஶ்ரீல.சு. கட்சிக் குழுவின் சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் அரசாங்கத்திலிருந்து விலகும் தீர்மானத்திலேயே இருக்கின்றனர். இது குறித்த பேச்சுவார்த்தை நடத்துகின்றனர்.

இந்த அரசாங்கத்துக்கு செப்டெம்பர் 15 ஆம் திகதி



இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

தான் அன்றைய தினம் அரசிலிருந்து விலகுவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி கிரடிட் காட் விற்பனை விவகாரத்தால் யாழ்ப்பாணத்தைச் சோந்தவர் இந்தியாவில் கைது

(கொழும்பு)

போலி கிரடிட் காட் வர்த்தகத்தில் ஈடுபட்ட இலங்கையர் உள்ளிட்ட மூவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்ட இலங்கையர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனவும், சில ஆண்டுகளுக்கு முன்னர் சட்ட விரோதமாக அவர் இந்தியா சென்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன், இவருடன் கைது செய்யப்பட்ட மற்றைய இருவரும் இந்தியப் பிரஜைகளாவர்.

சந்தேகநபர்கள் வேறு சிலரின் கிரடிட் காட் தகவல்களைப் பெற்று, அவற்றிற்கான போலி காட்களை தயாரித்து, அவற்றை பயன்படுத்தி இணையத்தில் கொள்வனவில் ஈடுபட்டுள்ளதாக இந்தியப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இவர்கள் வசம் இருந்து, போலி கிரடிட் காட்கள் 144 கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், போலி கிரடிட் காட்களைப் பயன்படுத்தி, இணையத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மூன்று தொலைக்காட்சிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இந்திய ஊடகச் செய்திகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை இந்திய சைபர் கிரைம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட விடுதிகள் வைத்தியர்களிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை மற்றும் சங்கானைப் பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கான விடுதிகள் வைத்தியர்களின் பாவனைக்காக கடந்த மாதம் கையளிக்கப்பட்டுள்ளது.

வேலணை மற்றும் சங்கானை வைத்தியசாலைகளுக்குரிய விடுதிகள் அமைப்பதற்கு 6.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. குறித்த விடுதிகள் அமைக்கும் பணிகள் யாழ்.பாதுகாப்பு தலைமையகத்தின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியின் வழி காட்டலில் கடந்த 2016.11.30 ஆம் திகதி இராணுவத்தினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் கடந்த மாதம் 30 ஆம் திகதி பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டு வரும் வைத்தியர்கள் தங்கியிருந்து வைத்திய சேவைகளை வழங்க மிகவும் வசதியான முறையில் இந்த வைத்தியசாலை விடுதி அமைக்கப்பட்டுள்ளது. (இ-9)

# ஹக்கலயில் தீ! 40 ஏக்கர் நாசம்

நுவரெலியா ஹக்கல வனாந்தரத்தில் ஏற்பட்ட தீயினால் சுமார் 40 ஏக்கர் எரிந்து நாசமாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணியளவில் அந்த வனாந்தரம் தீப் பற்றிக் கொண்டதாக பொலிஸாருக்குத்தகவல்கிடைத்துள்ளது.

அந்தத் தகவலையடுத்து தம்முடன்இணைந்துவிரைந்து செயற்பட்ட பொது மக்கள் இராணுவத்தின் உதவியுடன் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவித்தனர். (இ-7)

# மரண அறிவித்தல்



## வீரபாகு இராசையா (தங்கராசா)

யாழ். கோண்டாவில் வடக்கை பிறப்பிடமாகவும், வதிரி வைரவர் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட வீரபாகு இராசையா (தங்கராசா) (ஓய்வு பெற்ற பெரும்பாக உத்தி யோகத்தரும் சமாதான நீதவானும் வதிரி காளையந் தோட்டம் முத்துக் குமாரசுவாமி கோயில் முன்னாள் பரிபாலன சபைத் தலைவர்) அவர்கள் 15.07.2017 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர் களான வீரபாகு தெய்வானை தம்பதிகளின் அன்பு புதல்வரும் காலஞ்சென்றவர்களான செல்லையா மாணிக்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான நாகம்மா, ராசம்மா, தம்பிஜயா, ராசேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தர்மலிங்கம் சுப்ரமணியம் காலஞ் சென்றவர்களான பரராஜ சிங்கம், பொன்னையா, பொன்னுத்துரை, கண்மணி, ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனரும் பத்தினி சிவபாக்கியம் , காலஞ் சென்ற மனோன்மணி ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் இலங்கரத்தினம் சந்திரகலா தேவி ஆகி யோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியை 18.07.2017 நாளை செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று காலை 10 மணியளவில் ஆலங்கட்டை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(பரமேஸ்வரி வாசம்,
வைரவர் கோவிலடி,
வதிரி கரவெட்டி.) (சி-9083)

தகவல்
குடும்பத்தினர்,

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1134

Search for people, places and things — Nagendram Home

## டனித்தா

ஜலதோஷம் வந்தா நம்ம கூட ஒரு வாரம் தங்குது...!



இந்த சந்தோஷம் மட்டும் வந்த உடனே போயிடுது...!

## புவி

அண்ணே வாழ்க்கை ஒரு வட்டம்ணே எப்படிடா கண்டுபிடிச்ச



என் வாழ்க்கைல ரொம்ப பிடிச்சது, இட்லியும் தோசையும்தான். இரண்டுமே வட்டம்ணே..

## கனிதா

டேய் நம்ம கணக்கு வாத்தியாருக்கு அறிவே இல்லடா? எதவச்சு சொல்லுறே?




அவரோட நாலாவது பொண்ணுக்கு "அஞ்சு"ன்னு பேரு வச்சிருக்கிறாரே...

## குகன்

எங்க அம்மா வேற பேருல பேஸ்புக்ல இருக்குறது தெரியாம... எங்க அம்மாகிட்டயே... எங்கப்பா கடலை போட்டு இருக்காரு...



இப்போ எங்கம்மா.. கட்டையிலேயே போடுறாங்க... சத்தம் காத பொளக்குது.... ☺ ☺

## சத்யா

Boy: நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க
Girl: Thanks

Boy: உங்க Friend உங்கள விட அழகா இருக்காங்க
போடா எரும...

Girl: அது உங்க ரெண்டு பேரையும் விட அழகா இருக்கு

## சியா

பாசம்"ன்றது நாம யாருகிட்ட எதிர்ப்பாக்குறமோ அவங்க கிட்ட இருந்து கண்டிப்பா கிடைக்காது!!!!




ஆனா யாருகிட்ட இருந்து அது கிடைக்குதோ,அவங்க கிட்ட இருந்து நாம அத எதிர்ப்பாத்திருக்கவே மாட்டோம்..!!!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இடம்பெற்ற சம்பவங்கள் பயங்கரவாதச் செயற்பாடுகள் அல்ல

## பொலிஸ்மா அதிபர் பூஜித தெரிவிப்பு



(கொழும்பு)

நாடு மீண்டும் பயங்கரவாதத்திற்கு உட்படுத்துவதற்கு எந்த வகையிலும் இடமில்லை என்று பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார். வடக்கில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் பயங்கரவாதச் செயற்பாடுகள் அல்ல என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைக்க முயற்சிப்போர் மற்றும் அமைப்புகளுக்கு எதிராக பொதுமக்களின் நலனை கருதி மேற்கொள்ளக்கூடிய அனைத்து உடனடி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸ்மா அதிபர் உறுதிபட தெரிவித்துள்ளதுடன், தற்பொழுது நாட்டில் நிலவும் நல்லிணக்கத்தை சீர்குலைக்க சில அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் முயற்சிக்கின்றன. இவ்வாறான குறுகிய நோக்கங்கள் கொண்ட செயற்பாடுகாரணமாக நாட்டை மீண்டும் பயங்கரவாதத்திற்குள் உட்படுத்துவதற்கு எந்த வகையிலும் இடமில்லை என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்குவதற்கு இடமில்லை என்றும் அவர் தெரிவித்தார். பொது மக்களுக்கு நட்பு ரீதியிலான பொலிஸ் சேவையை முன்னெடுப்பதற்காக ரஜரட்ட ஒலிபரப்பு சேவை முன்னெடுக்கும் பொலிஸாரும் நீங்களும் என்ற வேலைத்திட்டம் உதவும் என்றும அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ரஜரட்ட சேவையில் பொலிஸாரும் நீங்களும் என்ற நிகழ்ச்சியின் ஆரம்ப நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட போது அவர் இந்த விடயங்களை தெரிவித்தார். ஒவ்வொரு ஐந்து மணித்தியாலத்திற்கு ஒருமுறை நாட்டின் பாதுகாப்பு தொடர்பான புலனாய்வு பிரிவின் தகவல்களை பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகள் இதில் உண்டு. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின்ஏனைய பிரதேச சேவைகள் ஊடாக இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் தாம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக பூஜித ஜயசுந்தா மேலும் தெரிவித்தார். (இ-7)

## அம்பாறையில் இந்திய - இலங்கை விமானப்படையினர் கூட்டுப் பயிற்சி





அம்பாறை மாவட்டத்தில் இலங்கை விமானப்படையினருடன் இணைந்து, இந்திய விமானப்படையினர் வான்வழி தரையிறக்கப் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளனர். கடந்த 9ஆம் திகதி தொடக்கம், 14ஆம் திகதி வரை இந்தப் பயிற்சிகள் இடம்பெற்றன.

இலங்கை விமானப்படையினருடன் இணைந்து கூட்டுப்பயிற்சிகளை மேற்கொள்வதற்காக, 65 இந்திய விமானப்படையினர், இந்திய விமானப்படையின் போக்குவரத்து விமானம் ஒன்றில் இலங்கை வந்திருந்தனர்.

இவர்கள் அம்பாறையில் இலங்கை விமானப்படையினருடன் இணைந்து, வான்வழித் த்ரையிறக்கம் உள்ளிட்ட கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டனர்.

இந்திய விமானப்படை அணி, இலங்கையில் பயிற்சிகளை முடித்துக் கொண்டு, திருவனந்தபுரத்துக்கு திரும்பியுள்ளது. (இ-7)

## பாகிஸ்தான், சிரியா உள்ளிட்ட ஏழு நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் மீது உன்னிப்பான கண்காணிப்பு

பாகிஸ்தான், சிரியா உள்ளிட்ட ஏழு நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளை உன்னிப்பாக கண்காணிக்க, இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக, உள்நாட்டு விவகார அமைச்சர் எஸ்.பி.நாவின்ன தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கரிசனைகளைக் கருத்தில் கொண்டே, இந்த கண்காணிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

சிரியா, பாகிஸ்தான், எகிப்து, ஐவரிகோஸ்ட், கானா, நைஜீரியா, கமரூன் ஆகிய ஏழு நாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கு நுழைவிசைவு வழங்கப்படுவதற்கு முன்னர், முழுமையான ஆய்வுக்குட்படுத்தப்படும்.

ஐ.எஸ்.தீவிரவாத அச்சுறுத்தல் தொடர்பாக சிரியா மற்றும் எகிப்தில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் ஆய்வுக்குட்படுத்தப்படுவர். இந்த நாடுகளில் இருந்து இலங்கைக்குள் ஐ.எஸ்.தீவிரவாதிகள் ஊடுருவலாம் என்ற அச்சம் காணப்படுகிறது.

கானா, நைஜீரியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் சட்டவிரோத குடியேற்றம் குறித்தும், பாகிஸ்தானில் இருந்து வருவோர் அடைக்கலம் கோருவது குறித்தும் கண்காணிக்கப்படுவர்.

அதேவேளை, ஆப்கானிஸ்தானில் இருந்து வருவோரைக் கண்காணிக்கும் நகர்வுகளும், மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் உகண்டாவில் இருந்து வருவோரும் கூடிய விரைவில் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவர். (இ-7)

## மாணவர்களின் கருத்துக்கு மதிப்பளித்தே சைட்டம் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும்

### கார்லோ பொன்சேகா வலியுறுத்தல்

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மாணவர்களின் கருத்துக்கு மதிப்பளித்தே சைட்டம் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் கார்லோ பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள்நேற்று முன்தினம் அவரிடம் வினவிய போதே இதனைத் தெரிவித்தார்.

இதேவேளைகார்லோபொன்சேகாவிடம் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மீண்டும் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு கோரிக்கை விடுத்த போது அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தார். பொதுமக்களுக்கும், அப்பாவி நோயாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத விதமான போராட்டங்களை முன்னெடுக்குமாறும் அவர் ஆலோசனை வழங்கியிருந்தார்.

அரசாங்கம் மீண்டும் அப்பதவியில் இவரை நியமிக்கும் தீர்மானத்தில் இல்லை. புதிதாக ஒருவரை தலைவராக நியமிக்கும் அதிகாரம் சுகாதார அமைச்சுக்கு சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தனது சைட்டம் கோரிக்கையை நிறைவு செய்து கொள்ளும் முகமாக தனக்கு சார்பான ஒருவரை நியமித்துக் கொள்ளப் போவதாக குற்றம்சாட்டி வருகின்றது.

இலங்கை வைத்திய சங்கப் பின் தலைவர் கார்லோ பொன்சேகாவை நீக்கி விட்டு புதியவரை நியமிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்தால் முன்னறிவித்தலின்றி வேலை நிறுத்த போராட்டத்தில் குதிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திற்கு ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தது.

இருப்பினும் கார்லோ பொன்சேகா அப்பதவியில் இருப்பதற்கு தனக்கு முடியாது என ஜி.எம்.ஓ.ஏயிடம் பகிரங்கமாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பல்கலை. மானியங்கள் ஆணைக்குழு செயலருக்கு எதிராக ஊழல் விசாரணை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி பிரியந்த பிரேமகுமார தொடர்பில் லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு விசாரணையொன்றை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிரான்சின் மொன்ட்பிலர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றமை தொடர்பில் எழுந்துள்ள முறைப்பாடுகள் குறித்தே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலான் லீசிங்–Kia இணைவு




நாகரிக நகரத்துக்கான வாகனத் தேவையை உணர்ந்து, செலான் லீசிங் Kia மோட்டர்ஸ் உடன் இணைந்து புதிய காரான Kia பிகான்டோவுக்கு இணையற்ற லீசிங் சலுகையை வழங்க முன்வந்துள்ளது.

செலான் லீசிங் முயை நிறுவனத்துடன் இணைந்து அதன் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வட்டி விகிதங்களையும் பிரத்தியேகமான பக்கேஜ்களையும் Kia பிகான்டோவுக்கு வழங்குகிறது. ரூ.2.990 மில்லியன் முதல் ரூ.3.490 மில்லியன் வரையான இத்தயாரிப்புக்கு வாடிக்கையாளர்கள் சலுகைகளைப் பெறலாம். செலான் லீசிங் Kia உடன் இணைந்து இலவச வாகனப் பதிவு, 3 கூலியற்ற இலவச சேவை, தொழில் முறையாளர்களுக்கு வழமையாக வழங்கப்படும் 5 வருட மீள்செலுத்துகை காலம் 7 வருடங்களாக விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன், வாடிக்கையா ளர்களின் வருமானத்துக்கு ஏற்றவாறான வாடகைகளும் முதல் வருட இணைப்பு கட்டணமின்றிய இலவச செலான் கிரெடிட் கார்டும் வழங்கப்படும்.

# பேர்ப்பச்சுவல் ரெஷரீஸ் நிறுவன வணிக நடவடிக்கைகள் இடைநிறுத்தம்

Perpetual Treasuries Limited

பேர்ப்பச்சுவல் ரெஷரீஸ் நிறுவனத்தின் வியாபார மற்றும் முதனிலை வணிக நடவடிக்கைக ளை இடைநிறுத்த மத்திய வங்கியின் நிதிச் சபை தீர்மானித்துள்ளது.

பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம், உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க, கடந்த 6 -ம் திகதி மாலை 4.30 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் வணிக நடவடிக்கைளை மத்திய வங்கி இடைநிறுத்தியுள்ளது.

6 மாதங்களுக்கு இந்த தீர்மானம் நடைமுறையில் இருக்கும்.

இந்த ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கையானது, சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில், மத்திய வங்கி தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பேர்ப்பச்சுவல் ரெஷரீஸ் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களினதும் இணைத் தரப்பினர்களதும் நலவுரித்துகளை ஒழுங்கான விதத்தில் கையாள்வதனை வசதிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இலங்கை மத்திய வங்கிமேலும்தெரிவித்துள்ளது.

# சிறிலங்கன் எயார்பஸ்ஸால் நாளாந்தம் ரூ.18 லட்சம் நஷ்டம்

சிறிலங்கன் விமான நிறுவனத்தின் குத்தகைக் காலம் நிறைவடைந்த A320 எயார் பஸ் காரணமாக நாளாந்தம் நாட்டிற்கு 12,000 அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்படுகின்றமை தெரியவந்துள்ளது.

இந்த விமானத்தைப் பழுது பார்ப்பதற்காக இந்தோனேஷியாவிற்கு அனுப்பி வைத்துள்ளதாக சிறிலங்கன் விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த விமானத்தை மீள ஒப்படைக்கத் தாமதமாகும் ஒவ்வொரு நாளும் 12,000 அமெரிக்க டொலர்களை தாமதக் கட்டணமாக செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது.

இலங்கை நாணயப்பெறுமதியில் அது 1.86 மில்லியன் ரூபாவாகும்.

இதுவரை தாமதமான 64 நாட்களுக்காக 7,68,000 அமெரிக்க டொலர்களை அதாவது 119 மில்லியன் ரூபாவை செலுத்த நேரிட்டுள்ளது.

மக்களின் பணம் இந்தளவு வீண் விரயம் செயப்படுகின்ற போதும் அதற்கு பொறுப்பு கூறப் போவது யார்?



சிறிலங்கன் விமான நிறுவனம் இதற்கு மேலதிகமாக கடந்த வருடத்தில் 14.1 பில்லியன் ரூபா நட்டத்தை அடைந்துள்ளது.

2010 ஆம் ஆண்டிலும் 10 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டி ருந்ததாக இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விபரங்கள் தெரிவிக் கின்றன. சிறிலங்கன் விமான நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளர்சபையும்மக்களின்பணம் வீண் விரயமாக்கப்படுவதற்கு பொறுப்புக்கூற வேண்டும் அல்லவா?

# இலங்கை கிரிக்கெட்டின் உத்தியோகபூர்வ ஸ்மார்ட்போன் பங்காளராக Huawei நியமனம்




இலங்கையில் வளர்ச்சி கண்டு வருகின்ற ஸ்மார்ட்போன் வர்த்தக ehkqfs;kjjpay;Kjyp\jjpy;jpoe;J t Ufpd; w Huawei இலங்கை தேசிய கிரிக்கட் அணியின் உத்தியோகபூர்வ ஸ்மார்ட்போன் பங்காளராக மாறும் வகையில் இலங்கை கிரிக்கட் சபையுடன் பங்குடமையொன்றை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஸ்மார்ட்போன் அனுசரணையானது, டெஸ்ட், ஒரு நாள் மற் றும் 20-20 என அனைத்து வகையான ஆட்டங்களின் ஆண்கள் மற் றும் பெண்கள் பிரிவின் தேசிய மட்டத்திலான அணிகளை உள்ளடக்கியுள்ளது.

நாடளாவியரீதியில் ரசிகர்களைக் கொண்டுள்ள இலங்கையின் மிகவும் பிரபலமான விளையாட்டான கிரிக்கட்டிற்கு உரயறநை அனுசரணையளிக்க முன்வந்துள்ளமை, உள்நாட்டு விளையாட்டு ஆர்வலர்கள் மத்தியில் வர்த்தக நாமத்தின் பிரபலபத்தை மேலும் மேம்படுத்தும்.

Huawei Technologies Lanka Co. (Pvt) Ltd நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஷண்லி வாங் மற்றும் இலங்கை கிரிக்கட் சபையின் தலைமை அதிகாரியும், பாராளுமன்ற உறுப்பினருமான திலங்க சுமதிபால ஆகியோருக்கிடையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, பரிமாறப்பட்டுள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த பங்குடமை தொடர்பில் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஷண்லி வாங் கருத்து வெளியிடுகையில்,

"தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தீர்வு வழங்குனர் மற்றும் ஸ்மார்ட்போன் வர்த்தக நாமம் என இலங்கையில் முன்னிலை வகித்து வரு கின்ற நிலையில், இலங்கையில் மிகவும் பிரபலமான விளையாட்டுக்கு ஆதரவளிக்கும் எமது அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல உதவும் வகையில் சிறிலங்கா கிரிக்கட்டுடன் பங்குடமையை ஏற்படுத்தியுள்ளமை எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது" என்றார்.




# சிறந்த குழுக்கள் அதிகம் தவறு செய்யும்!

தொழில் ரகசியம்

சென்ற வாரத் தொடர்ச்சி

புதிய யோசனை உருவாக

உளவியல் பாதுகாப்பு நிலவும் நிறுவனங்களில் பணியாளர்கள் புதிய யோசனைகளை தந்து அது தவறாகிப் போனால் அனைவர் முன்னேயும் தங்கள் மரியாதை குறையுமோ என்று தயங்காமல் தங்கள் மனதில் பட்டதை பகிர்வார்கள். தங்கள் பங்களிப்பு வரவேற்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கும் பணியிடங்களில் தான் ஊழியர்கள் பாதுகாப்பாக உணர்ந்து சுய ஊக்கத்துடன் பணியாற்றுவார்கள்.

பல நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் உளவியல் பாதுகாப்பு பணியிட திறனை (Workplace effectiveness) கூட்டுகிறது என்று தெளிவாக காட்டுகிறது. பணியிடங்களில் புதிய யோசனைகள் பிறக்க ஏதுவான சூழலை ஏற்படுத்துகிறது என்றும் கூறுகிறது.

உலகமே இன்று அறிவு சார்ந்த பொருளாதாரமாக மாறி வருகிறது. பணியிடங்கள் 'கற்கும் நிறுவனங்களாக' (Learning Organizations) மாறவேண்டிய அவசியமும் அவசரமும் நிறைந்த சூழல் இன்று. அதனாலேயே ஊழியர்களுக்கு உளவியல் பாதுகாப்பு அளிப்பது அவசியமாகிறது.

கம்பனியில் அனைவருக்கும் உளவியல் பாதுகாப்பு அளிக்கும் முக்கிய பொறுப்பு கம்பனி தலைவருடையது. அனைவரும் தங்கள் மனதில் பட்டதை பேசுகிறார்களா, கூட்டம் என்றால் ஓரிருவர் மட்டுமே பேசி மற்றவர்களை பேசவிடாமல் தடுக்கிறார்களா என் பதை அவர் கண்டறியவேண்டும். அவரும் மற்றவர் இயல்பாக பேச அனுமதித்து அப்படி பேசும்போது காது கொடுத்து கேட்க பழக வேண்டும்.

ஊழியர்களிடம் விவாதிக்கையில் கம்பனி தலைவர் அவர்கள் கருத்துகளை தானே கேட்டும் பெற வேண்டும். 'இது என் கருத்து, இதில் ஏதேனும் தவறிருக்கலாம். நான் எதையாவது கவனிக்காமல் விட்டிருக்கலாம். நீங்கள் 'என்ன நினைக்கிறீர்கள், தைரியமாக கூறுங்கள்' என்று கேட்கும் வழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

## தவறிலிருந்து பாடம்

தவறு செய்வது சகஜம், ஆனால் அந்த தவறிலிருந்து பாடழ் பயிலாமல் இருப்பது தான் பெரிய தவறு என்பதை நீங்கள் முதலில் உணருங்கள். அதை உங்கள் குழுவிடம், ஊழியர்களிடம் கூறுங்கள்.

மனம் திறந்து, பயமில்லாமல், தைரியமாக பேசுவது என்பது பணியிடங்களில் அவ்வளவு எளிதான காரியமல்ல. தான் பேசுவது தவறாக இருக்குமோ, தங்கள் கருத்து தப்பாகிப் போனால் சக ஊழியர்கள் கடிந்துகொள்வார்களோ, நம் வேலைக்கே உலை வைப்பது போல் ஆகுமோ என்ற பயம் எல்லா ஊழியர்களிடமும் உண்டு. அதனாலேயே மனதில் உள்ள எண்ணங்களை, கருத்துகளை, பதில்களை கூறாமல் விடுவார்கள். இதனால் நல்ல யோசனைகள் பிறக்காமலேயே இறக்கும். கேள்விகளுக்கு பதில் கிடைக்காமலேயே போகும்.

உளவியல் பாதுகாப்பு என்னும் பாதுகாப்பு வளையத்தை உங்கள் குழு உறுப்பினர்களைச் சுற்றி அமையுங்கள். இதனால் சக ஊழியரிடமிருந்து அச்சுறுத்தல் இருக்குமோ, முகாமையாளரிடமிருந்து ஆபத்து வருமோ என்ற பயமில்லாமல் தங்கள் எண்ணங்களை பகிர்ந்து கம்பனி வளர முழு மூச்சுடன் ஒத்துழைப்பார்கள்.

இப்படியெல்லாம் என்னை மாற்றிக்கொள்ள மாட்டேன், ஊழியர்களுக்கு இத்தனை இடம் தரமாட்டேன் என்று இன்னமும் நீங்கள் நினைத்தால் உங்களிடம் ஒரே ஒரு கேள்வி.

உங்கள் சாரதி கார் ஓட்டும் போது ஏதோ தவறு செய்து பிரேக் வயர் அறுந்துவிடுகிறது என்று வைத்துக்கொள்வோம். சின்ன விடயத்திற்கே காட்டு கத்தல் கத்தும் நீங்கள் இதை சொன்னால் கடித்து, குதறுவீர்கள் என்று பயந்து சாரதி இதைக் கூறாமல் சாவியை தந்துவிட்டு போகிறார் என்று வைத்துக் கொள்வோம். இது தெரியாமல் நீங்கள் கார் ஓட்டிச் சென்றால் என்ன ஆகும் ஐயா உங்கள் நிலைமை?

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,737.50 | 6,766.14 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,908.94 | 3,909.54 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 3,665.363

**உயர்வடைந்தபங்குகள்(ரூ):** மடுல்சிமா(9.50), மல்வத்தை(X)(5.00), மல்வத்தை (5.40), அகலவத்தை (23.80), செரண்டிப் இன்ஜி(9.70).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** ரேணுகா கப்பிரல்(5.40), ஈகுவிட்டி ரூ(45.20), இன்டஸ்ரியல் அப்(315.00), லக்கி லங்கா(X)(1.40), லக்கி லங்கா(2.30).

மேலதிக தகவல்கள்: WWW.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்


$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 151.64 | 155.44 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 195.48 | 202.13 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 171.87 | 178.35 |
| சுவிஸ் பிராங் | 155.75 | 161.98 |
| கனேடிய டொலர் | 118.46 | 123.12 |
| அவுஸ்திரேலிய டொலர் | 116.25 | 121.42 |
| சிங்கப்பூர் டொலர் | 109.71 | 113.71 |
| ஜப்பான் யென் | 1.33 | 1.38 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.38 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.84 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தென்னைப் பயிர்ச்செய்கையில் மண்ணீர்ப்பாதுகாப்பு முறைகளும் அதன் முக்கியத்துவங்களும்




(15.07.2017 அன்று வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

- வருடம் தோறும் 125 புதிய மட்டைகளைச் சேர்த்து அடுக்குதல்.
- 2 அல்லது 3 படைகளில் அடுக்குதல் வேண்டும்.
- நீர் தடைப்படும் இடங்களுக்கு தென்னை மட்டைகளை பத்திரக் கலவையாக இடக்கூடாது. இவ்விடயங்களைக் கருத்திற் கொண்டு பத்திரக்கலவையிடல் அவசியமாகும். எளிதாகவும், இலகுவாகவும் செலவில்லாமலும் செய்யக்கூடிய இம்முறையில் மண்ணீரைச் சிறப்பாக பாதுகாக்க முடியும்.

உரு: 4 2m ஆரைப்பரப்பில் பத்திரக் கலவையிடல்





தேங்காய் உரிமட்டைகளைக் குழிகளில் புதைத்தல்.

தென்னந் தோட்டங்களில் அதிகமாகக் கிடைக்கும் பொருள் தேங்காய் உரிமட்டைகளாகும். இவற்றினை அகற்றுதலும் பெரும் பிரச்சினையாக உள்ளது. எனவே இவற்றை தென்னைக்கு அருகே குழிகளில் புதைத்தல் மூலம் மண்ணீரைப் பாதுகாக்கலாம். இவ்வாறு குழிகளில் மட்டைகளை புதைக்கும் முறைகள் பல்வேறு காணப்படுகின்றன.

இரண்டு தென்னைகளுக்கு இடையில் குழிகள் அமைத்தல்

இரண்டு தென்னைகளுக்கு இடையே குழிகள் அமைத்து அதில் உரிமட்டைகள் இடப்படுகிறது. இக்குழிகள் 8அடி நீளமாகவும், 4 அடி அகலமாகவும், 3 அடி ஆழமாகவும் காணப்படும். (உரு: 5)



உரு: 5



உரு: 5 இரண்டு தென்னைகளுக்கு இடையில் குழிகள் அமைத்தல்

உரு: 6 குழிகளில் உரிமட்டைகள் இடும் விதம்

உரிமட்டைகளும், மண் படையும் மாறி மாறி அடுக்கப்படுகின்றது. (உரு: 6) இவ்வாறு அடுக்கப்படும் போது மழை நீர் கிடைக்கும் காலங்களில் சிறப்பான முறையில் நீரானது பிடித்து வைக்கப்படுகின்றது.

மூடு பயிர் வளர்த்தல்

மண்ணீரைப் பாதுகாக்க இன்னுமொரு பலன் தரக்கூடிய முறை இதுவாகும். இவ்வாறு வளர்க்கப்படும் பயிர்கள் விரைவாக மண்ணை மூடி வளரக்கூடியதாக இருக்க வேண்டும். லெகுமினேசியே குடும்பத்தைச் சேர்ந்த ஏறிகள், மரங்கள் போன்றன மூடு பயிராக வளர்ப்பதன் மூலம் மண்ணை பேணுவதுடன் மண்ணரிப்பையும் தடுக்கலாம். (உரு: 7) இதன் மூலம் மேல் மண் பாதுகாக்கப்படுகிறது.

உரு: 7 மூடு பயிர் வளர்த்தல்

இவை மண்ணை மூடி வளர்வதால் மண் சூரிய ஒளியின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கப்படும். இதனால் நீரானது நிலத்திலிருந்து ஆவியாதல் தடுக்கப்படும். மூடு பயிர்களானது ஓர் விசேட இயல்பைக் கொண்டுள்ளன. அதாவது உடனடியாக வரட்சிக் காலத்தில் இம்மூடு பயிர்களும் இறந்து விடுகின்றன. இதனால் மூடு பயிரின் இலையில் ஏற்படும் உந்து சக்தி மூலம் நீர் ஆவியாகி நீர்ப்பற்றாக்குறை தடுக்கப்படுகிறது. இதனால் மண் நீர் பாதுகாக்கப்படுகிறது.

சேதனப் பசளை இடல்

இரசாயனப் பசளை பாவனையினால் மண்ணின் பௌதீக இயல்புகள் மாற்றமடைகின்றன. எனவே மண்ணிற்கு சேதனப் பசளை இடும் போது மண்ணின் கட்டமைப்பு, இழையமைப்பு என்பன விருத்தியாகின்றன. இதனால் மண்ணில் நீர் பிடித்து வைத்திருக்கும் தன்மை அதிகரிக்கின்றது.

அத்துடன் மண்ணிலிருந்து நீர் ஆவியாதல் குறைக்கப்பட்டு ஈரலிப்பு பேணப்படுகின்றது.

பாத்தியை பாத்திர வடிவில் அமைத்தல்

சாதாரணமாக மழை நீரானது தென்னங் குற்றி வழியே வழிந்தோடி வீணாகிப் போகின்றது. எனவே பசளை வட்டத்தைச் சூழ மண் அணை போட்டு நீரை தேக்கி வைத்து கொள்வதற்கு பாத்தியை பேசின் வடிவில் அமைப்பது சிறந்ததாகும். இதனால் நீர்ப்பாசனம் செய்யப்படும் நீர் அல்லது மழை நீர் வீணாகாது மரத்தின் அடியை வந்தடையும்.






நீர்த்தடாகம் அமைத்து நீரை தடுத்து வைத்தல்

அதிகமாக மழை கிடைக்கும் காலங்களில் ஓடும் நீரை சிறு குளம் அல்லது தடாகம் அமைத்து சேமித்தல் மூலம் வறட்சியான காலத்தில் பயன்படுத்தக் கூடியதாகவும் நிலத்தின் ஈரலிப்பை பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.

இச்செயற்பாடுகள் அனைத்தும் பயன்தரு தென்னை மரங்களின் மண்ணீர் பாதுகாப்பு நடவடிக்கைகளாகும். எந்த ஒரு பயிரின் சிறப்பான வளர்ச்சிக்கும், விருத்திக்கும் முறையான நீர்ப்பாசனமும், மண்ணீர்க் காப்பும் அவசியமாகும். இந்த வகையில் தென்னைச் செய்கைக்கும் அதிலிருந்து சிறப்பான உற்பத்தியைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ச்சியான நீர் வழங்கலும் வறட்சியான காலத்தில் மண்ணீர்ப் பாதுகாப்பும் அவசியமாகும்.

அநேகமான தென்னைப் பயிர்ச்செய்கையாளர்கள் இத்தகைய பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது குறைவாகும். எனவே நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தையும், மண்ணீர்க்காப்பின் முக்கியத்துவத்தினையும் பயிர்ச்செய்கையாளர்களுக்கு புரிய வைக்கவேண்டியது அவசியமாகும். மண்ணீர்ப் பாதுகாப்பு முறைகள் பற்றிய பயிற்சிகள், செய்து காட்டல்களை செய்யலாம். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு நீர்ப்பாசனம், மண்ணீர்ப்பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணரச் செய்து ஊக்குவிக்கலாம்.

தென்னையிலிருந்து வருடம் பூராகவும் சிறந்த உற்பத்தியைப் பெற்று அதன் மூலம் சிறந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தென்னைக்கு முறையான பராமரிப்பு அவசியமாகும்.

எனவே உரிய காலத்தில் நீர்வழங்கி மண்ணீர்ப் பாதுகாப்பு முறைகளை செய்து தென்னையிலிருந்து உச்ச உற்பத்தியைப் பெற்றுக் கொள்ள முடியும். (முற்றும்)

ஈஸ்வரன் சற்குணம்
பண்ணைத்திட்டமிடல் அதிகாரி,
தென்னைப்பயிர்ச்செய்கை சபை,
யாழ்ப்பாணம்.

# பிரதியமைச்சர் ரஞ்சனுக்கு பிரதமர் ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் அமைச்சர்களையும் விமர்சனம் செய்வதாயின் ஆளும் கட்சியை விட்டு வெளியேறுமாறு பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கள்வர்களை அரசாங்கம் காப்பாற்றுகின்றது என அண்மையில் ரஞ்சன் ராமநாயக்க பகிரங்கமாக குற்றம் சுமத்தியிருந்தார்.



இது தொடர்பிலேயே பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு ஹில்டன்ஹோட்டலில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களின் கூட்டத்தில் பிரதமர், ரஞ்சனுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"நான் கள்வர்களை காப்பாற்றுவதில்லை, தனது கட்சித் தலைமை மீது நம்பிக்கையில்லா விட்டால் தயவு செய்து வெளியேறிச் செல்லவும். வெளியேறிச் சென்று எவரையேனும் விமர்சனம் செய்ய முடியும். ஆளும் கட்சிக்குள் இருந்து கொண்டு அரசாங்கத்தை விமர்சனம் செய்யக் கூடாது என பிரதமர் கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் நடவடிக்கைகள் குறித்து பிரதமர் அதிருப்தி வெளியிட்டுள்ளார். (இ-7)

# ஆசிரியையின் தங்கச் சங்கலியை திருடிய நபர் 30 நிமிடங்களில் கைது 14 நாட்கள் விளக்கமறியலில் வைப்பு

பேராதனை கெட்டம்பே பாலத்தின் மீது நடந்து சென்று கொண்டிருந்த பாடசாலை ஆசிரியை ஒருவரின் தங்கச் சங்கிலியை பறித்துக் கொண்டு தப்பியோடிய சந்தேக நபரை, பேராதனை பொலிஸார் 30 நிமிடங்களில் மடக்கிப் பிடித்தனர்.

அம்பகமுவ பிரதேச பாடசாலை ஒன்றில் கடமை யாற்றும் ஆசிரியை ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலைவிட்டு வீடு செல்வதற்காக கெட்டம்பே கண்ணொருவ பாலத்தின் மேலாக சென்று கொண்டிருந்த போது இவரை எதிரில் வந்த நபர் ஒருவர் ஆசிரியையின் கழுத்திலிருந்த சுமார் இரண்டு பவுண் தங்கச் சங்கிலியை பறித்துக் கொண்டு தப்பியோடியுள்ளார்.

இதனையடுத்து கூக்குரலிட்ட ஆசிரியை உடனடியாக கையடக்கத் தொலைபேசி மூலம் பேராதனை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

உடனடியாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கமல் ஆரியவங்சவின் ஆலோசனையின் பேரில் அங்கு விரைந்த பொலிஸார் ஆசிரியையிடம் தகவல்களைப் பெற்றுக் கொண்டு உடனடியாக தேடுதல் நடத்தினர்.

இதன்போது சந்தேக நபர் ஒரு ஒழுங்கையின் ஊடாக ஓடிச் சென்று கொண்டிருப்பதை அவதானித்த பொலிஸார் விரைந்து மடக்கிப் பிடித்ததுடன், ஆசிரியையிடமிருந்து பறித்துச் சென்ற சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியையும் மீட்டனர்.

பொலிஸார் சந்தேக நபரை நேற்று முன்தினம் மாலை கண்டி நீதிமன்றத்தில் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்த போது நீதவான் சந்தேக நபரை 14 தினங்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள்.

-- டால்ஸ்டாய்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இராமாயணத்தில் மாயா சீதை ஈழத்தில் மாயா சமஷ்டி

இராமாயணத்தில் மாயா சீதை என்ற சம்பவம் மிகவும் முக்கியமானது. சீதையின் தோற்றத்தில் ஒரு பெண் உருவைச் செய்து அவளை வெட்டிக் கொல்வதான காட்டாப்புத்தான் மாயா சீதை என்ற விடயம்.

சீதையை வெட்டுவது போல இராவண தரப்பு ஒரு காட்சியைக் காட்ட, அனுமன் அதிர்ந்து போகிறான். சீதையை வெட்டி விட்டார்களே என்பதே அனுமனின் பதற்றத்துக்குக் காரணம்.

கம்பராமாயணத்தைக் கரைத்துக் குடித்த கம்பவாரிதி இ.ஜெயராஜ் போன்றவர்கள் அது அனுமனின் அறிவுத் தடுமாற்றம் என்று கருத்துரைப்பர்.

எதுவாயினும் மாயா சீதை என்ற சூழ்ச்சியால் அனுமன் அதிர்ந்து போனதும் உண்மைச் சம்பவத்தை அறிவதற்கு வியூடணன் தந்திரோபாயம் சொல்லி அதைச் செய்து முடித்தது பற்றியும் இராமாயணம் பேசும்.

இப்போது நாம் இங்கு பிரஸ்தாபிப்பது சீதை பற்றியல்ல. மாயா சீதையை உருவாக்கிய இந்திரசித்து உள்ளிட்டவர்கள் பற்றிய ஒப்பீடுகையாகும்.

சீதைக்கு பதிலாக மாயா சீதையை உருவகம் செய்து இராமர் தரப்பை நம்ப வைத்தல் என்ற விடயம் சாதாரணமானதன்று. அது ஒரு முக்கியமான இராஜதந்திரம்.

நம்ப்வைத்து ஏமாற்றுதல்; ஏமாற்றுவதன் மூலம் தோல்வியை ஏற்படுத்துதல்; தோற்ற பின்னர் எதுவும் செய்ய முடியாத நிலைக்கு ஆளாக்குதல் என்பதுதான் அது.

இந்த இராஜதந்திரம் இப்போதும் இருக்கவே செய்கிறது. சில இடங்களில் வடிவங்களும் செய்கின்ற தரப்பினரும் வேறுபடுவதாக இருந்தாலும் மாயா சீதை எனும் இராஜதந்திரம் என்றும் இருக்கும் என்பதுதான் உண்மை.

இனப்பிரச்சினைக்கான தீர்வுபற்றி கருத்துரைக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், வரப்போகும் தீர்வில் சமஷ்டி என்ற பெயர் இல்லாமல் இருந்தாலும் சமஷ்டியின் அத்தனை அம்சங்களும் இருப்பதாகக் கூறுகிறார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கூறுவதில் ஏதேனும் உண்மைகள் உண்டா? என்று ஆராய்வது தமிழ்ப் புத்திஜீவிகளின் தலையாய கடமை.

இது ஒரு புறம் இருக்க புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் வேண்டாம் என்கின்றனர் பௌத்த மகாநாயக்கர்கள்.

பௌத்த மகாநாயக்கர்களை மீறி அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை கொண்டு வரமுடியுமா? என்பது வேறு கேள்வி.

இதேவேளை பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுப்பது பற்றி நாம் கருத்தில் கொள்ளப்போவதில்லை என்று இரா.சம்பந்தர் கூறியுள்ளதாக இந்த நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததான செய்திகளும் வெளிவந்துள்ளன.

ஆக, இந்த நாட்டில் பௌத்தத்துக்கே முதலிடம் என்பதை இரா.சம்பந்தரும் ஏற்றுக் கொள்வதாக அந்தச் செய்தியின் பொருள் அமையும்.

அப்படியானால் பௌத்த விகாரைகளை எங்கும் அமைக்கலாம். பௌத்த விகாரைகள் எங்கெல்லாம் உள்ளதோ அங்கு பௌத்த விகாராதிபதிகளின் ஆட்சிதான் மேலோங்கும்.

நிலைமை இதுவாக இருக்க, வரப்போகும் தீர்வில் சமஷ்டி என்ற பெயர் இல்லாமல் இருந்தாலும் சமஷ்டியின் அம்சங்கள் இருக்கும் என்று இரா.சம்பந்தர் கூறுவதானது, ஒரு மாயா சீதை இராஜதந்திரமே.

பரவாயில்லை. இந்திரசித்து இராமரைத் தோற்கடிக்க மாயா சீதையை உருவாக்கினான். இங்கு எங்களை நாங்களே ஏமாற்ற சமஷ்டியல்ல; அதன் அம்சம் பொருந்திய மாயா சமஷ்டி என்று கூறுகிறோம். அவ்வளவு தான்.

## ரயில் நிலையங்கள், பாதைகளில் குப்பை கொட்டினால் அபராதம்

பயணிகளால் ரயில் பாதை மற்றும் ரயில் நிலையங்களில் குப்பைகள் கொட்டப்படுவதால், அச் சூழல் அசுத்தமடைவதாக தெரிவித்த போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ரயில் பாதைகள் மற்றும் ரயில் நிலையங்களில் குப்பை கொட்டும் பயணிகளுக்கு வருங்காலங்களில் அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ரயில்வே திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (7-8)

## சைட்டத்திற்கு எதிராக மற்றுமொரு பிரச்சினை

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களை விசேட அதிரடிப்படையை கொண்டு திட்டமிட்டு தாக்கமுற்பட்டமை, முறையற்றவகையில் கண்ணீர்ப் புகைதாக்கம் மேற்கொண்டமை, தாக்குதல் நடத்தியமை தொடர்பில் எம்மிடமுள்ள ஒளி, ஒலி வடிவ ஆதாரங்கள் அனைத்தையும் சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கவுள்ளதாக வைத்தியபீட மாணவ பெற்றோர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொழில்சார் நிபுணர்களின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வமைப்பின் செயலாளர் சட்டத்தரணி காமினி ஏக்கநாயக்க தெரிவித்தார். (7-8)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

எனவே யார்? என்ற வராஹமூர்த்தியின் கேள்விக்கு மாதவன் மனம் திறந்து மறுமொழி கூறினான்.

வராஹமூர்த்தியே கோபத்தில் திருமகள் என்னை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டாள். அவளில்லா இடத்தில் இருக்க இயலாமல் நான் வைகுந்தம் விட்டகன்றேன். எங்கெங்கோ சுற்றித்திரிந்து இறுதியில் இந்த ஆசிரமத்தை அடைந்தேன். இந்த மலை எனக்கு மட்டற்ற மகிழ்வைத் தருகிறது. இங்கேயே சில காலம் தங்கியிருக்க ஆசைப்படுகிறேன். உங்கள் சொத்தாக இருக்கும் இந்த மலையில் தங்க எனக்குக் கொஞ்சம் இடமளிக்கவேண்டும்..."

விமலனின் இந்த வேண்டுகோளைக் கேட்டு வராஹமூர்த்தி புன்முறுவல் செய்தார். வேடிக்கையாகக் கோரிக்கை ஒன்றை கோவிந்தன் முன்வைத்தார். (தொடரும்)

## வாகன இறக்குமதியில் வீழ்ச்சி

இலங்கைக்கு மாதாந்தம் இறக்குமதி செய்யும் வாகனங்களின் எண்ணிக்கை கடந்த ஜுன் மாதம் பெருமளவில் குறைந்துள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் வாகனங்களின் இறக்குமதி பெருமளவில் அதிகரித்து காணப்பட்டது.

சாதாரணமாக ஒரு மாதத்திற்கு 39 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

இதில் ஆட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் உள்ளடங்காது.

எனினும் கடந்த ஜுன் மாதம் 27 ஆயிரம் வாகனங்களே இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

13 ஆயிரமாக வாகன இறக்குமதி குறைந்தது என வாகன இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்

இறக்குமதி செய்யும் வாகனங்களுக்கான வரி அதிகரிப்பு, ரூபாவின் பெறுமதி குறைந்தமை, வாகனங்களின் விலை அதிகரித்தமை உட்பட பல பொருளாதார கஷ்டங்கள் காரணமாக வாகனங்களின் விற்பனை குறைந்ததால், வாகனங்களின் இறக்குமதியும் குறைந்துள்ளது. (7-8)

## உயரத்திற்கு ஏற்ப நிறையைப் பேணிடுவோம்

ஆண்கள் இடுப்புச் சுற்றளவை 90cm (36'') இற்கு குறைவாகவும் பெண்கள் இடுப்புச் சுற்றளவை 80 cm (32'') இற்கு குறைவாகவும் பேணுதல் நன்று.

இடுப்புச் சுற்றளவானது வயிற்றை இலேசாக வைத்துள்ள நிலையில் தொப்புள் இருக்கு் இடத்திலிருந்து வயிற்றைச் சுற்றி அளத்தலாகும்.

உரிய உயரமும் நிறையும் உங்கள் தோற்றத்தை மெருகேற்றும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**மலமாதம், விஷமாதம் என்றால் என்ன?**

விஷமாதம் என்பது எந்த மாதத்தில் அமாவாசை, பௌர்ணமி வராமல் உள்ளதோ அந்த மாதமாகும்.

மலமாதம் என்பது ஒரே மாதத்தில் இரண்டு அமாவாசை வந்தாலும் பௌர்ணமி வந்தாலும் அந்த மாதங்கள் மல மாதங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த இரண்டு மாதங்களிலும் சுப காரியங்களை விலக்கவேண்டும். பகவான் தனுசு மீனம், கடகத்தில் இருந்தால் இம்மாதங்களுக்கு தோஷமில்லை. சுப காரியங்கள் செய்யலாம். (சித்திரை, வைகாசி விதிவிலக்குண்டு) (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும்பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில் நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக் கண்டி,கேரதீவுவீதி அறுகவெளி ஆகிய பிரதேசங்களிலும், மின்தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஆன்மாவின் மூன்று நிலைகள்



காமதேனு : தேனு என்பது பசு. ஆன்மீக உலகில் பசு என்ற சொல் ஆன்மாவைக் குறிக்கும். காமம் என்பது இச்சையைக் குறிக்கும் சொல். காமதேனு எனில் இச்சையை இயல்பாக உடைய ஆன்மா என்று பொருள். உடல் வரையில் எல்லை கட்டிப் புலன்கள் வழியே புறப்பொருள் கவர்ச்சியால் ஈர்க்கப் பெற்று ஆன்மா செயல்புரியும்போது விளைவுகள் பெரும்பாலும் சலிப்பும், துன்பமும் தரும். இவ்வகையில் இச்சைக்கே ஆன்மாவின் ஆற்றல் பயன்படும். முதல் கட்டம் காமதேனு.

கற்பகம் : கற்பூஅகம் என்ற சொற்களின் இணைப்புத் தான் கற்பகம். இங்கு ஆன்மா உயிர் வரையில் உணர்ந்து விரிந்து ஆற்றும் தகுதி பெற்ற நிலை இச்சித்து. இச்சித்து. துய்த்துத் துய்த்துச் சலிப்பும் துன்பமும் பெற்ற ஆன்மா சிந்தனையில் ஆழ்கின்றது. புற இயக்கம் விடுத்துத் தன்னடக்கம் உண்டாகி உயிர்நிலையின் சிறப்பை அறிகின்றது. அறிவைப் படர்க்கை ஆற்றலாகவே அறிந்து கொள்கிறது. விளைவறிந்து செயலாற்றும் தகைமை ஓங்குகிறது. செய்யத்தக்கன, தகாதன இவற்றை விளங்கி, விளக்க வழியில் தன்தேவை, பழக்கம் இவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளுகிறது. இந்த அளவில் அறிவு உறுதிபெற்ற போது ஒழுங்கும் இயல்பாகின்றது. உறுதியும், ஒழுக்கமும் பெற்ற ஆன்மாவின் அந்த மதிப்புள்ள உயர்நிலை தான் கற்பூஅகம். அகம் என்றால் உள்ளம். கற்பு எனில் உறுதியும் ஒழுக்கமும் பெற்ற நிலை. இது ஆன்மாவின் வளர்ச்சி நிலையில் இரண்டாவது கட்டம்.

சிந்தாமணி : சிந்தை மணியான நிலை. அதாவது சலனமற்று, புலனடக்கம் பெற்று, உறுதி பெற்ற நிலை. தன் உயிர்நிலை உணர்ந்த பின் அங்கு கிட்டிய ஆற்றலால் உயிருக்கு மூல நிலை அறியும் ஆர்வம் எழுகின்றது. சிந்தனை உயர்ந்து உயிர் விரைவைச் சிறிது சிறிதாகத் தவத்தின் மூலம் குறைத்துக் கொண்டே போய் முடிவாகத்தான் இயக்கமற்ற அமைதி நிலையைப் பெறுகின்றது. மெய்ப் பொருளாகி விடுகின்றது. தனது இருப்பு நிலை அணு முதற்கொண்டு அண்டங்கள் அனைத்துக்கும் அப்பாலுள்ள பெருவெளி வரையில் நிறைந்து இருக்கும் பெருமையினை உணர்ந்து கொள்கின்றது.

தேவைக்கும் இருப்புக்கும் இடையே உள்ள தெய்வீகத் தொடர்பும் அதன் ஒழுங்கமைப்பும் உணர்ந்து ஆன்மா முழு அமைதி பெறுகின்றது. இந்த நிலைதான் சிந்தாமணி. இதுதான் மனிதனின் முழுமைப்பேறு. இதற்கு ஆன்மா தன்னையறிய வேண்டும். அப்போது தான் அமைதி பிறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுபராஜ் ஹெட்ரிக் கோல்

## அருளானந்தம் ஞாபகார்த்த உதைபந்தாட்டம்

# ஊரெழு றோயலை வீழ்த்தி சம்பியனாகியது துறையூர் ஐயனார்



அமரர் அருளானந்தம் ஞாபகார்த்தமாக கனடா வாழ் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் யங் ஹென்றீசியன் வி.க ஏற்பாடு செய்து நடத்தி வந்த ஏழு நபர்கள் கொண்ட இருநாள் உதைபந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டிநேற்றுமுன்தினம் மாலை 4:30 மணியளவில் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இவ்விறுதிப் போட்டியில் யாழின் பலம் வாய்ந்த அணிகளில் ஒன்றான ஊரெழு றோயல் அணியை எதிர்த்து வேலணை ஐயனார் விளையாட்டுக்கழகம் மோதியது.

இச்சுற்றுப்போட்டியில் ஆரம்பம் முதல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த இரு அணிகளும் இறுதிப் போட்டியிலும் மிகச்சிறந்த ஆட்டத்தினை வெளிப்படுத்தியிருந்தன.

ஆட்டம் ஆரம்பமாகி 2 ஆவது நிமிடத்தில் ஐயனார் வி.க. வீரரான சுபராஜ் பின்கள வீரரின் தவறான தடுப்பினைப் பயன்படுத்தி கோலொன்றைப் பதிவு செய்ய ஆட்டம் ஆரம்பத்திலேயே பரபரப்பினை ஏற்படுத்தியது.

ஆட்டத்தின் 7ஆவது மற்றும் 15 ஆவது நிமிடங்களில் தேசிய அணி வீரரும் றோயல் அணியின் நட்சத்திர வீரருமான எடிசன் அடுத்தடுத்து இரு கோல்களை அடித்து றோயல் அணியை முன்னிலைப்படுத்தினார். இதில் இவர் இரண்டாவதாக அடித்த கோல் 40 யார்க்கு அப்பால் இருந்து மிகவேகமாக அடிக்கப்பட்ட கோலாகும்.

ஆட்டம் இடைவேளைக்கு சற்று முன்னர் 20ஆவது நிமிடத்தில் ஐயனார் வீரர் சுபராஜ் மீண்டும் கோலொன்றைப் பதிவு செய்ய ஆட்டம் இடைவேளையின் போது சமநிலையானது.

இடைவேளையின் பின்னர் இரு அணிகளும் மிகவும் போராட்டமான ஆட்டத்தினை வெளிப்படுத்தியிருந்தன. இந்நிலையில் ஆட்டத்தின் 27 ஆவது நிமிடத்தில் றோயல் அணியின் வீரர் கோபன் கோலொன்றைப் பதிவுசெய்துமீண்டும் அணியை முன்னிலைப்படுத்தினார்.

ஆனால் இறுதிவரை கடினமான ஆட்டத்தினை வெளிப்படுத்திவந்த ஐயனார் வி.க அடுத்தடுத்து இரு கோல்களை அடித்தது. இதில் அணித்தலைவர் அகீபன் மிகத் தொலைவில் இருந்து வேகமாக அடித்த பந்தினை பின்கள வீரர் தடுக்க முற்பட்ட போது அவரின் காலில் பட்டு கோலாகியது. மேலும் 4 ஆவது கோலை சிறந்தவோர் பந்துப் பரிமாற்றலூடாக சுபராஜ் கோலாக்கியிருந்தார்.

இது இவரது ஹெற்றிக்கோலாகும். மேலும் இதுவரை காலமும் ஹென்றீசியன் தொடர்களின் இறுதிப் போட்டியில் வீரரொருவரால் பெறப்பட்ட முதல் ஹெற்றிக் கோலுமாகும்.

இதனைத்தொடர்ந்து றோயல் அணி வெற்றிக்காக இறுதி வரை போராடியிருந்தது. சில கோல் வாய்ப்புக்கள் கிடைத்த போதும் அதனை தவறவிட்டிருந்தனர். இறுதிவரை போராடிய ஐயனார் வி.க 4:3 எனும் கோல்க்கணக்கில் றோயல் அணியை வீழ்த்தி அமரர் அருளானந்தம் ஞாபகார்த்தமான வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது. யாழ் மாவட்ட ரீதியான உதைபந்தாட்ட தொடரொன்றில் கிண்ணம் வென்ற முதலாவது தீவக அணியாக்வும் வரலாற்றில் பதிவானது.

இவ் இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக ஐயனார் வீரர் அகீபனும் தொடரின் நாயகனாக றோயல் வீரர் எடிசனும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இவ் இறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற அணிக்கு 50,000 ரூபா பணப்பரிசுடன் வெற்றிக்கிண்ணமும், இரண்டாமிடம்பெற்ற அணிக்கு 30,000 ரூபா பணப்பரிசுடன் கிண்ணமும், 3ஆம் இடம்பெற்ற அணிக்கு 20,000 பணப்பரிசுடன் கிண்ணமும், 4 ஆம் இடம்பெற்ற அணிக்கு 10,000 பண[illegible] சுடன் கிண்ணமும் ஆட்டநாயகன், தொடராட்டநாயகனுக்கு தலா 5,000 ரூபா பணப் பரிசுடன் கிண்ணமும் வழங்கப்பட்டிருந்தது. (க)

# உதயதாரகையின் உதைபந்தாட்ட தொடர் திக்கம், பொம்மஸ் வி.கழகங்கள் வெற்றி





அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 15.07.2017 அன்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் திக்கம் வி.கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இப்போட்டியில் திக்கம் வி.கழகம் 2:0 என்ற கோல்க் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக திக்கம் வி.கழகத்தை சேர்ந்த அரிகரன் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கான பதக்கத்தை கற்கோவளம் உதயதாரகை வி.கழகத்தின் உறுப்பினர் P.பிரதீப் அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பொம்மஸ் வி.கழகத்தை எதிர்த்து சென் அன்ரனிஸ் (B)வி.கழகம் மோதியது.

இப்போட்டியில் பொம்மஸ் வி.கழகம் 4:0 என்ற கோல்க் கணக்கில் வெற்றி பெற்றது

ஆட்டநாயகனாக பொம்மஸ் வி.கழகத்தைச் சேர்ந்த சாரங்கன் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கான பதக்கத்தை கற்கோவளம் உதயதாரகை கழகத்தின் முன்னாள் செயலாளர் ரவிராஜினால் வழங்கப்பட்டது. (க)

# மாலுசந்தி மைக்கல் அரையிறுதிக்கு தகுதி

அமரர் ம.சூரியகுமாரன் ஞாபகார்த்தமாக வடமராட்சி கபடிச் சங்கத்தின் அனுமதியுடன் பருத்தித் துறை ஐக்கிய விளையாட் டுக்கழகம் நடத்தும் யாழ் . மாவட்ட ரீதியிலான கழகங்களுக்கு இடையிலான 20 வயதுக்கு உட்பட்டோருக்கான மின்னொளியிலான கபடித் தொடரின் அரையிறுதிப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகத்தை எதிர்கொண்ட மாலுசந்தி மைக்கல் வி.கழக கபடி அணி 70:52 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

போட்டியின் சிறப்ப[illegible]டக்காரர் ஆக மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக வீரர் கௌதமன் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கான விருதினை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் மூத்த உறுப்பினர் நாகராசா வழங்கி கௌரவித்தார். (க)



# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62 ஆவது வருட நிறைவை முன்னிட்டு தென்மராட்சி ரீதியில் நடத்தும் மின்னொளியிலான கிரிக் கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இப்போட்டிகள் எதிர்வரும் வார இறுதி நாட்களில் நடைபெறவுள்ளதனால் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 075 266 3426 மற்றும் 076 615 6404 எனும் தொடர்பிலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு [illegible]டுக் கொண்டுள்ளனர். வெற்றி பெறும் அணிக்கும் பெறுமதியான பரிசில்கள் பணம் மற்றும் வெற்றி கேடயங்களாக [illegible]வும் வழங்கப்படும். (க)

# இன்றைய போட்டி

அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி காலிறுதி ஆட்டம் இன்று மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளது.

இவ் இறுதிப் போட்டியில் பொம்மஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பணத்துக்காக கடத்தப்பட்ட தமிழ் இளைஞர்கள்

(கொழும்பு)

கடந்த 2008ஆம் மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் கொழும்பு வெள்ளவத்தை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் பணத்திற்காகவே 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என்பது விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இவ் இளைஞர்கள் கடத்தப்பட்டமை தொடர்பாக அண்மையில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க கைது செய்யப்பட்டார். குறித்த கைது நடவடிக்கையின் பின்னர் ஊடகங்களில் பலவாறான தகவல்கள் வெளியாகிருந்த நிலையில், அதுகுறித்து விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. குறித்த ஊடக சந்திப்பில் விளக்கமளித்த போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்குறித்த விடயத்தைத் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

கடற்படை தளபதியாக செயற்பட்ட கரண்ணாகொடயின் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றியவரே லெப்டினன்ட் கொமாண்டர் சம்பத் முனசிங்க. கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் திகதி சம்பத் முனசிங்கவுக்கு எதிராக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவிற்கு கரண்ணாகொடவிடமிருந்து எழுத்துமூலம் முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றது.

குறித்த முறைப்பாட்டில், சம்பத் முனசிங்க தங்கியிருந்த இடத்தில் நான்கு பேரின் அடையாள அட்டைகள், அவர்களில் ஒருவரது கடவுச்சீட்டு, சுமார் 450 வெடிபொருட்கள், தொலைபேசிகள், 10 இலட்சம் பெறுமதியான உறுதிப் பத்திரங்கள் இரண்டு என்பன கண்டெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அத்தோடு, ஏதேனும் தீவிரவாத அமைப்புடன் சம்பத் முனசிங்க தொடர்புபட்டுள்ளாரா என விசாரணை நடத்துமாறு கோரப்பட்டது.

குறித்த விசாரணையில் நான்கு பேரின் விபரங்கள் வெளியாகின. அவர்களுள் மன்னாரைச் சேர்ந்த சூசைப்பிள்ளை அமலன் லியோன், அவரது மகனான சூசைப்பிள்ளை றொஷான் லியோன், கொட்டாஞ்சேனையை சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிகே எண்டனி மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த தியாகராஜா ஜெகன் ஆகியோரின் அடையாள அட்டைகளே அவை.

அதன் பின்னர் தெஹிவளை பிரதேசத்தில் 5 பேர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக லெப்டினன்ட் ஜெனரல் சம்பத் ஹெட்டியாராச்சிக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டது.

ரஜீவ் நாதன் -கொட்டாஞ்சேனை, பிரதீப் விஸ்வநாதன் -கொட்டாஞ்சேனை, திலகேஸ்வர் ராமலிங்கம்- கிராண்ட்பாஸ், மொஹமட் ஜமால்தீன் டிலான் -மருதானை, மொஹமட் சாஜித்-தெமட்டகொட ஆகியோரே கடத்தப்பட்டவர்கள் ஆவர்.

இச் சம்பவம் தொடர்பாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட விசாரணையில், கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தெஹிவளையைச் சேர்ந்த மொஹமட் அலி அன்வர் என்பவர் கட்டுநாயக்கவில் கடத்திச் செல்லப்பட்டுள்ளமையும், ரோஜான் ரீட் என்பவர் கொட்டாஞ்சேனை பகுதியில் கடத்திச் செல்லப்பட்டுள்ளமையும் தெரியவந்தது.

கடத்திச் செல்லப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் கடற்படை தரப்பிலிருந்தும் இவற்றிற்கு வலுவான சாட்சியங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. கடத்தப்பட்டவர்கள், கடற்படையின் தொலைபேசிகள் ஊடாக தமது வீட்டாருடன் கதைத்தமை மற்றும் தொலைபேசிக்கு மீள்நிரப்புமாறு கோரியமை என்பன தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளன.

அத்தோடு, கடத்தப்பட்ட ஒருவரின் வாகனத்தின் இலக்கத்தை மாற்றி, அதனை கடற்படை வாகனத்தைப் போல பயன்படுத்தியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

அதேபோல் அண்மையில் கைதுசெய்யப்பட்ட டி.கே.பி.தஸநாயக்க இரண்டு குழுக்களை கொண்டு நடத்தியமை தெரியவந்துள்ளது. அதன் ஒரு குழுவிற்கு லெப்டினன்ட் கொமாண்டர் ஹெட்டியாராச்சியும் மற்றைய குழுவிற்கு லெப்டினன்ட் ஜெனரல் ரணசிங்கவும் தலைமை தாங்கியுள்ளனர்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் தஸநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியமை, அவர் பாவித்த சிம் அட்டைகள் உள்ளிட்ட விடயங்கள் விசாரணையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றைக் கொண்டு குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்காள்ளப்பட்ட விசாரணையில், பணத்திற்காகவே இவர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகியுள்ளது. அதற்கான வலுவான சாட்சிகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

கடற்படையின் 7 அதிகாரிகள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களில் ஒருவரான சம்பத் முனசிங்க பிணையில் உள்ளார்.

இவர்கள் மாத்திரமல்ல, 2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமல்போன 28 பேர் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவிற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவர்களின் 11 பேர் தொடர்பான விசாரணையே நிறைவடைந்துள்ளன. ஏனையோர் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றார். (மு)

## றிசாத் பதியு...

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கூழாமுறிவு பகுதியில் உள்ள காடுகளை அழித்து அந்தப் பகுதியில் முஸ்லிம் குடியேற்றம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு குறித்த சில அரச அதிகாரிகளும் உடந்தையாக உள்ளனர்.

இந்த குடியேற்றத் திட்டத்திற்கு எதிராக ...ம் எமது சொத்தான வனங்களை அழிப்பதற்கு எதிராகவும் மக்களும் இளைஞர்களும் ஒன்றுதிரண்டுள்ளனர்.

இதில் கலந்து கொண்ட இளைஞர்கள், இதன் பின்னணியில் அமைச்சர் றிசாத் பதியுதீனே இருப்பதாகவும் தெரிவித்து எதிர்ப்பை வெளியிட்டதுடன் அவர் இந்த நடவடிக்கையில் இருந்து ஒதுங்க வேண்டும் எனவும் கிழக்கை இழந்ததுபோல் வடக்கையும் இழக்க முடியாது என ஆவேசமாக முழக்கமிட்டனர். (மு-281)

*(மற்றொரு செய்தி 9ஆம் பக்கத்தில்)*

## துமிந்த திஸாநாயக்க...

மனு கொடுக்கப்பட மாட்டாது என கூற வேண்டியதில்லை எனவும் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

எப்படியாயினும் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க இவ்வாறு கூறுவதானது அவருடைய வயது குறைவான சிறுபிள்ளைத்தனமே எனவும் டிலான் தெரிவித்தார். (மு)

## நிறைவேற்று அதிகார...

உருவாவதை தடுக்க முடியாது என சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் கூறியுள்ளனர்.

கட்சி உறுப்பினர்கள், அமைச்சர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடலின் போதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அரசின் நடவடிக்கைகளில் மக்கள் சலிப்படைந்துள்ளனர். மற்றும் சாதகமற்ற தன்மை உள்ளதால் ஜனாதிபதி தலையிட்டு தீர்மானம் எடுக்காது போனால் அதன் பிரதி பலனை சுதந்திரக் கட்சி அனுபவிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (மு)

## படம் பிடித்த...

புத் தெரிவித்து, பாரிய எதிர்ப்புப் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. முல்லைத்தீவு முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்துக்கு அருகிலுள்ள ஆலடிச் சந்தியிலிருந்து கூழாமுறிப்பு வரை சுமார் ஏழு கிலோமீற்றர் தூரத்துக்கு நேற்றுக் காலை பேரணியாக மக்கள் நடந்து சென்றனர்.

இந்நிலையில், குறித்த போராட்டத்தை, புலனாய்வினர் படம் பிடித்திருந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

## தேசிய பாதுகாப்பு...

மல்வத்து, ராமன்ன பீடங்களின் மகா நாயக்கர்களை சந்தித்து ஆசி பெற்ற பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு அதிகாரி என்ற வகையில், எந்தவொரு பாதுகாப்புப் படையினரும், அவசியமின்றிக் கைது செய்யப்படமாட்டார்கள் என்று உறுதியளிக்கிறேன்.

நாட்டின் முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினரின் கௌரவத்தையும், மதிப்பையும் பாதுகாக்க வேண்டியது எனது பொறுப்பு. இவர்களின் மரியாதையைக் குறைப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டேன். எந்தச் சூழ்நிலையிலும், பிடியாணை இல்லாத கைதுகள் இடம்பெறாது.

ஊழல், குற்றங்கள் குறித்த அவசியமான விசாரணைகள் மாத்திரமே நடத்தப்படுகின்றன. அவசியமற்ற கைதுகள் இடம்பெறாது.

எதிர்காலத்தில், சட்டமா அதிபரால் அல்லது தொடர்புடைய உயர் அதிகாரிகளால், குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாமல், எந்தக் கைதுகளும் மேற்கொள்ளப்படாது.

முன்மொழியப்பட்டுள்ள காணாமல் போதல்களை தடுக்கும் சட்டமூலம், போர் வீரர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. அவர்கள் எந்த அச்சமோ, சந்தேகமோ இன்றி வாழ முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மு)

## கோயம்புத்தூருக்கு...

டுள்ளது.

இந்தியாவின் பல இடங்களுக்கு புதிய விமான பயணங்கள் ஆரம்பிக்கும் வேலைத திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கடந்த நாட்களில் கொழும்பில் இருந்து இந்தியாவின் விசாகப்பட்டினம் மற்றும் ஹைதராபாத் ஆகிய இடங்களுக்கு இந்த விமான பயணங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (மு)

## ஐ.ம.சு.முவிலிருந்து...

ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணியில் அரசாங்கத்துடன் உள்ள அமைச்சர்கள் குழுவொன்று எதிர்வரும் செப்டம்பர் மாதம் அரசாங்கத்திலிருந்து விலகியவுடன் இவர்கள் கூட்டணியிலிருந்து விலகுவதற்கு திட்டமிட்டுள்ளதாக அக்கட்சிகளின் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த தேர்தலில்களில் இக்கட்சிகள் 9 உம் பொ.ஐ.முன்னணியுடன் இணைந்து போட்டியிட்ட போதிலும், இக்கட்சிகளின் தேவைகள் குறித்து முன்னணி கவனம் செலுத தாமையினால் விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அக்கட்சிகளின் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (மு)

# அம்பாந்தோட்டை பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளதாம்!

(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவின் சைனா மேர்ச்சன்ட் நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமான பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளதாக தெரியவருகிறது.

இதனடிப்படையில், எதிர்வரும் 25ஆம் திகதி மற்றும் அடுத்த மாதம் 7ஆம் திகதிக்கும் இடையிலான காலப்பகுதியில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படலாம் என பேசப்படுகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பங்குகளில் 80 வீத பங்குகள் சைனா மேர்ச்சன்ட் நிறுவனத்திற்கும் 20 வீத பங்குகள் இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் பகிரப்பட உள்ளன.

80 ஆண்டுகளுக்கு குத்தகை விடப்படும் துறைமுகத்தின் பங்குகளை தேவை எனில் துறைமுக அதிகார சபை 30 வீதமாக அதிகரித்துக்கொள்ளலாம்.

மேலும், துறைமுகத்தை குத்தகைக்கு வழங்கும் போது இரண்டு நிறுவனங்களை ஏற்படுத்தவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

துறைமுகத்தின் நிர்வாகம் இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் வர்த்தக நிர்வாகம் சைனா மேர்ச்சன்ட் நிறுவனத்திற்கும் பகிர்ந்து செல்லும் வகையில் இந்த நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு கொடுப்பதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கவுள்ளது. (மு)

# சட்ட விரோத மணல் அகழ்வால் வடக்கில் பாரிய சூழல் பிரச்சினை

சட்டவிரோத மணல் அகழ்வு, தற்போது வட மாகாணத்தில் பாரிய சூழல் பிரச்சினையை உருவாக்கி வருகின்றது.

வட மாகாணத்தில் தற்போது பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் கட்டுமானப் பணிகளுக்கான மணலுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதன் காரணமாக குறைந்த விலையில் மணலை பெற்ற மக்கள், தற்போது பல மடங்கு விலைக்கு மணலை கொள்வனவு செய்ய நேரிட்டுள்ளது.

வடக்கில் 2009ஆம் ஆண்டிற்கு முன்னர் 17,000 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு டிப்பர் மணலை தற்போது 40,000 ரூபாயிற்கு கொள்வனவு செய்ய நேரிட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

மன்னார் மாவட்டத்தின் தோத்தாவாடி, இழுப்பைக்கடவை, கூராய், மடு, பாலம் பிட்டி, அருவியாறு மற்றும் கல்லாறு ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெற்றுவருகின்றது.

இங்கு மணல் அகழ்வதற்கு அநுராதபுரத்திலுள்ள புவிச்சரிதவியல் திணைக்கள அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளதாக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் வியாபார நோக்கத்திற்காக அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி செயற்படும் சிலரால் மக்கள் பிரச்சினைகளை சந்தித்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் - தென்மராட்சி -கச்சாய் கடற்கரையில் மணல் அகழ்வதற்கான அனுமதிப்பத்திரம் எதுவும் வழங்கப்படாத நிலையில், இரவு நேரங்களில் சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக மக்கள் கூறுகின்றனர்.

தென்மராட்சி-கெற்பேலி கடற்கரையிலும இரவு நேரங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கெற்பேலி கடற்கரையில் கடல் மட்டத்தினை விடவும் ஆழமான முறையில் மணல் அகழப்பட்டுள்ளதால் கடல் நீர் கிராமங்களுக்குள் புகும் அபாயம் காணப்படுகின்றது.

மணல் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் நேரடியாக தலையிட்டு மாற்று வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (மு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனீர் கடைக்குள்...



லும் வீதிக்கு திரும்ப முற்பட்ட பாரவூர்தியே கல்வியங்காட்டுச் சந்தியில் உள்ள தேனீர்சாலை ஒன்றிற்குள் புகுந்தது. இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் பாரிய சேதங்கள் எவையும் ஏற்பட வில்லை என தெரிவிக்கப்பட்டது. (மு-8)

# டி.ஐ.ஜி. ஜயசிங்கவுக்கு...

நேற்றையதினம் உத்தர விட்டுள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலைச் சம்பவத்தின் முக்கிய சந்தேக நபரான சுவிஸ் குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிதரன் கைது செய்யப்பட்ட பின்னர் தப்பிச் செல்வதற்கு உதவியிருந்தார் என வடக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜயசிங்க மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சட்டமாஅதிபர் திணைக்களத்தின் உத்தரவுக்கமைய கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரின் விசாரணையின் பின்னர் நேற்று முன்தினம் மதியம் அவர் கைது செய்யப்பட்டார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்த அவர் ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதவான் ஆர்.சபேசன் முன்னிலையில் நேற்றையதினம் காலை 6 மணிக்கு ஆஜர் படுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் 25 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தர விட்டுள்ளார்.

அதனடிப்படையில் தற்போது அவர் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் சுவிஸ் குமார் தப்பிச் செல்ல உதவியதுதொடர்பில் யாழ். அரசியல்வாதி ஒருவரும் பொலிஸ் எஸ். ஐ ஒருவரும் கைதாகலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (மு-9)


உயர்தர கருத்தரங்கு
ஊடகவியல்
A/L 2017
ஆசிரியர் : என்.கஜிதரன்
B.A (Hons) spl in Media studies
M.A (Mass communication & Jounalism)
யூலை - 19, 20, 21 (புதன், வியாழன், வெள்ளி)
நேரம் : 1.30 p.m
தொடர்புகளுக்கு:0759160431/0773956158
பொருளியற் கல்லூரி நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(C-9088)


# 71 விடுதலைப் புலிகளை...

புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என கூறுவது முற்றிலும் பொய்யான விடயமென நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மனித உரிமைகள் மற்றும் தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சன் முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் விதமாகவே நீதியமைச்சர் இதை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவிக்கையில், 2008ம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என கூறுவது முற்றிலும் பொய்யான விடயம்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த புலிகளில் 12,000 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் கடும் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 71 புலிகள் மட்டுமே இன்னும் தடுப்பில் உள்ளனர்.

பேருந்துகளில் குண்டு வைத்தல், கொலை என பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இவர்களை மட்டும் எக்காரணத்திற்காகவும் விடுதலை செய்ய முடியாது, அவர்கள் பயங்கரவாதிகள் எனவும் நீதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து, நாட்டில் யுத்தக் குற்றம் இடம்பெறவில்லை, இங்கு நடைபெற்றது மனிதாபிமான நடவடிக்கையே. இதனால் எமது இராணுவம் குற்றம்செய்யவில்லை, இராணுவத்தினரை எந்த காரணத்திற்காகவும் தண்டிக்க முடியாது என அறிவித்துள்ளார்.

அவ்வாறு தண்டிக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு யாரேனும் வருவார்களாயின் அதற்கு எமது அரசு இடம் கொடுக்கப் போவதில்லை. சர்வதேச நீதிமன்றத்தில் எமது இராணுவத்தினர் ஒருபோதும் நிறுத்தப்பட மாட்டார்கள் எனவும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மனித உரிமைகள் மற்றும் தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர், இலங்கையில் மோசமான சித்திரவதைகள் இடம்பெறுவதாகவும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும், போர்க்குற்றம் செய்த இராணுவத்தினர் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு)

# நாளை...

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தை அமைப்பது எமக்கு சாதாரண விடயமாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் கபீர் ஹசீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி தேசிய அரசாங்கத்தை விட்டு வெளியேறினால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மீறும் வகையில் அமையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய அரசாங்கத்தில் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒரு சாரார் அரசாங்கத்தை விட்டு வெளியேறவுள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் தேசியப் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெரிவிக்கும் போதே அவர்மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (மு)

# புதிய அரசி...

ஆளுநரின் அதிகாரம் என்பன தொடர்பில் இதுவரை எந்தவித உடன்பாடும் காணப்படாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவை தொடர்பில், அரசியலமைப்பு உபகுழுக்கள் முன்வைக்கும் அறிக்கை மற்றும் கருத்துக்கள் என்பனவற்றை ஆய்வு செய்து அரசியலமைப்பு உருவாக்க சபையின் ஊடாக அரசியலமைப்புசபைக்கு முன்வைக்கவுள்ளதாகவும் விஜயநாயக்க கூறியுள்ளார்.

அரசியலமைப்பு சபையினால் முன்வைக்கப்படும் அறிக்கை மற்றும் கருத்துக்கள் என்பவற்றை கலந்துரையாடியதன் பின்னர் ஏற்படும் இணக்கப்பாடுகளுக்கு ஏற்ப அரசியலமைப்பு சட்டமூலம் உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் விளக்கியுள்ளார். (மு)

# தனித்து...

ஐ.தே.க கபிர் ஹசீம் கூறிய செய்திக்கு பதிலளிக்கும்போதே இவ் வாறு கூறினார். (மு)

# டெனீஸ்வரனை பதவி...

போது, கட்சி விதிமுறைகளை மீறி வட மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் செயற்பட்டு வருவதாகவும் அவரை அமைச்சு பதவியில் இருந்து நீக்குமாறும் வட மாகாண முதலமைச்சருக்கு எமது கட்சி பரிந்துரைத்திருந்தது.

இந் நிலையில் அமைச்சர் டெனீஸ்வரனை பதவியில் இருந்து நீக்கும் பட்சத்தில் தமது கட்சியின் சார்பில் யாரை அமைச்சராக நியமிக்க பரிந்துரைப்பது என்பது தொடர்பாக நேற்று வவுனியாவில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் கட்சியின் அரசியல் குழு கூடி தீர்மானித்திருந்தது.

எனினும் இக் கூட்டத்தில் எவ்வித முடிவும் எட்டப்படாமையினால் நாளை அனைத்து அரசியல்குழு உறுப்பினர்களும் தொலைபேசி மூலமாக தமது தெரிவுகளை தெரிவிப்பது எனவும் அதன் பின்னர் உடனடியாக முதலமைச்சருக்கு ரெலோ கட்சியின் சார்பில் புதிய அமைச்சருக்கான நபரை பரிந்துரைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (மு23

# சு.க.வின்...

ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார். வார இறுதிப் பத்திரிகை யொன்றுக்கு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவை அந்தஸ்துடைய 3 அமைச்சர்கள் உள்ளிட்ட சுதந்திரக் கட்சியின் 18 உறுப்பினர்கள் நிச்சயமாக செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவார்கள்.

நான்கு இராஜாங்க அமைச்சர்கள், பத்து பிரதி அமைச்சர்கள், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் இதில் அடங்குகின்றனர்.

இவர்களுக்கு மேலதிகமாக மேலும் சுதந்திரக் கட்சியின் பத்து உறுப்பினர்கள் ஆளும் கட்சியிலிருந்து வெளியேற உத்தேசித்துள்ளனர். மிகவும் முக்கியமான தருணத்தில் இவர்கள்ஆளும்கட்சியை விட்டு வெளியேறவுள்ளனர். (மு)

# நவம்பர் இறுதியில்...

குமார திசாநாயக்க, எம். ஏ. சுமந்திரன் மற்றும் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, சட்டமா அதிபர் ஆகியோர் கலந்துக்கொண்ட கூட்டத்தில், உள்ளூராட்சி தேர்தல் சட்டமூலத்திற்கான உத்தேச திருத்த விதிகள் தொடர்பில் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி-தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் கூறியுள்ளதாவது,

கடந்த தேர்தல்கள் நடைபெற்ற ஒட்டுமொத்த விகிதாசார முறைமை கைவிடப்பட்டு தேர்தல்கள் புதிய வட்டார, விகிதாசார கலப்பு முறையில் நடைபெறும்.

இது தொடர்பில் கடந்த மகிந்த ஆட்சியில் 2012ஆம் வருடம் நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தில் வட்டார,விகிதாசார தெரிவுகள் தொடர்பாக இருந்த 70:30 என்ற கணக்கு, எமது புதிய திருத்த சட்டத்தில் 60:40 ஆக மாற்றப்படும். அதேபோல் இரட்டை அங்கத்தவர் வட்டாரத்தில், ஒரே கட்சியில் இரண்டு வேட்பாளர்கள் போட்டியிட முடியாது என்றும், இரண்டாம் அங்கத்தவராக வெற்றி பெறுகின்றவர், தோல்வியடைந்த கட்சிகளில் அதிக வாக்குகளை பெற்றவராக இருத்தல் வேண்டும் என்ற மோசடித்தனமான பழைய விதி மாற்றப்பட்டு, ஒரே கட்சியே இரண்டு வேட்பாளர்களை போட்டியிட செய்ய முடியும் என்ற திருத்தம், புதிய திருத்த சட்டத்தில் வரும்.

அத்துடன் இரட்டை அங்கத் தவர் வட்டாரத்தில்ஒவ்வொரு வாக்காளரும், இரண்டு வாக்குகளை அளிக்க முடியும்.

இவை சிறுபான்மை கட்சிகள் சார்பாக நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்த போராட்டத்தின் மூலம் கிடைத்த வெற்றி களாகுமென்று தெரிவித்தார். (மு)


எவரெஸ்ட் குமாரிக்கா
சந்தனாதி தைலம்

■ நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
■ இளநரையை போக்கவும்
■ பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
■ கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
■ ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
■ ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்
100 வீதம் இயற்கையானது
(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)
(9447)
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண்: 0776389356, 0777153571



விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-9054)

UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



நீங்கள் O/L or A/L or Degree முடித்தவரா
வேலைவாய்ப்பு
தேடுகிறீர்களா..?
மாதம் 25,000/- மேல் உழைக்கக்கூடிய
கௌரவமான பணிநிலை வெற்றிடங்கள்
இலவச கருத்தரங்கும், நேர்முகத் தேர்வும்
ஜூலை 18, செவ்வாய்க்கிழமை
இடம்: சிகரம் விரிவுரை மண்டபம்,
இல.175, 1ம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்
(C-9080)
பதிவுகளுக்கு: 077 36 16 798



அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை

(C-9076)
365
72
(Express Service)
(Door to Door Service)
Call 021 222 3536
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
Call 021 222 6113
DHL aramex FedEx


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org